REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூன் 29 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 152 | Thursday 29, June, 2023 | 16பக்கங்கள் | 50/-




## மக்களை சிரமத்திலிருந்து மீட்பதே எமது எதிர்பார்ப்பு

### ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



மிகவும் கடினமான காலகட்டத்துக்கு பின்னர் புதிய எதிர்பார்ப்புகளுடன் எதிர்காலத்துக்காக நாம் முயற்சிக்கும் தற்போதைய நிலையில், 2023ஆம் ஆண்டு ஹஜ்ஜுப் பண்டிகை முன்னெப்போதையும் விட எங்களுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

மக்களை சிரமத்திலிருந்து மீட்பதற்கு எதிர்பார்ப்புகளுக்கு 06

## வேறுபாடுகளை களைந்து அனைவரும் ஒன்றுபடுவோம்

### ஹஜ்ஜுப் பெருநாள் செய்தியில் பிரதமர் தினேஷ்



உலகெங்கிலும் பரந்து வாழும் இஸ்லாமியர்கள் இன்று தங்களது மதக் கடமைகளை நிறைவேற்றி, ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் எனும் அம்சங்களை கடைப்பிடித்து வாழ வேண்டுமென்பதே மிகுந்த மதிப்புடன் கொண்டாடப்படும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் 06

## சகோதரத்துவம், நற்பண்பு சிந்தனைகள் உருவாகட்டும்

### எதிர்க்கட்சி தலைவரின் ஹஜ் தின வாழ்த்து



ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கிய நோக்கம் சமூக இடைவெளி மற்றும் பல்வேறு வேறுபாடுகளை குறைத்து சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நற்பண்பு சிந்தனைகளை உருவாக்குவதாகுமென, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தனது 06

## வரி அதிகரிப்போ, வரிக்கொள்கையில் மாற்றங்களோ இவ்வருடம் கிடையாது

### அரசிடம் மறைமுக திட்டங்கள் எதுவுமில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்த வருடத்தில் எத்தகைய வரி அதிகரிப்போ அல்லது வரிக்கொள்கைகளில் மாற்றங்களோ இடம்பெற மாட்டதென, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். கொழும்பிலுள்ள ஜனாதிபதி ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வரிகளுக்கு மேல் வரிகளை சுமத்தி சாதாரண மக்கள் மீது 06

## வாசகர்களுக்கு ஹஜ் பெருநாள் வாழ்த்துகள்



## தேசிய கடன் மறுசீரமைப்பு யோசனை

# விசேட அமைச்சரவையில் ஏகமனதாக அங்கீகாரம்

லோரன்ஸ் செல்வநாயகம்




தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனைக்கு விசேட அமைச்சரவை நேற்று ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளதாக, ஜனாதிபதி அலுவலக வட்டாரம் தெரிவித்தது.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று நடைபெற்றதுடன், தேசிய கடன் மறுசீரமைப்புக்கான அரசாங்கத்தின் யோசனை அந்த அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்போது, அந்த யோசனை தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அதன் இறுதியில் அந்த யோசனைக்கு அமைச்சரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த யோசனையை பாராளுமன்ற நிதி தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்து, அதனையடுத்து நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வின் போது சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்க வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

2032ஆம் ஆண்டுக்குள் மொத்தக் கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95% ஆகக் குறைக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் திட்ட இலக்கை அடைய, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தேவைப்படுகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜூலை 01 சனிக்கிழமை விசேட பாராளுமன்ற அமர்வு

### MP க்கள் சகலருக்கும் கடிதம் மூலம் அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி (சனிக்கிழமை) பாராளுமன்றம் கூடவுள்ளதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு யோசனைக்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் வகையில் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜூலை முதலாம் திகதி காலை 9.30 06

## IMF இன் உதவித்திட்டம் இந்தியாவின் உதவியாலேயே சாத்தியமானது

### இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த கருத்து



சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு இந்தியாவின் ஆதரவால் மட்டுமே சாத்தியமானதென, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்தார். இந்திய ஊடகவியலாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்தாண்டு நெருக்கடியின் போது, 4 பில்லியன் 06

## மனித குலத்தின் உயரிய பண்புகள் வெளிப்படும் தினம்

### அமைச்சர் அலி சப்ரி ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்து



அமைதி மற்றும் சகோதரத்துவத்துடன் ஒன்றுபட்ட அனைத்து இஸ்லாமிய யாத்திரிகர்களதும் உலகளாவிய சகோதரத்துவ மாநாடென்று ஹஜ் யாத்திரையை குறிப்பிடலாமென்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், 06

## முஸ்லிம்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு கிடைக்க வாழ்த்துகிறேன்



தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பொருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் வாழும் முஸ்லிம்களுக்கு துன்ப, துயரங்கள் அகன்று மகிழ்ச்சியும் நிம்மதியும் நிறைந்த நல் வாழ்வு கிடைக்க 06

## கட்டுநாயக்க விமான நிலையத்தில்

# 11 கோடி ரூபா பெறுமதியான 05Kg தங்கத்துடன் ஐவர் கைது

### சென்னைக்கு கடத்திச் செல்ல முற்படுகையில் சிக்கினர்



இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் இந்தியாவின் சென்னைக்கு 11 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்திச் செல்ல முயற்சித்த குற்றச்சாட்டில் வர்த்தகர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, இலங்கை சுங்கத் 06

## கிழக்கின் ஆளுநராக செந்தில் தொண்டமான்

# தமிழரது பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் நியமனம்

### BJP அண்ணாமலை லண்டனில் கருத்து



கிழக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் நியமனம், தமிழ் மக்களின் பெரும்பாலான முக்கிய 06



03

## 'அஸ்வெசும' சமூகநல திட்டத்தை அரசியல் மயமாக்க வேண்டாம்

### மேன்முறையீட்டுக்கு மக்களை ஊக்குவியுங்கள்

## நீதிமன்ற உத்தரவு புறக்கணிப்பு குற்றச்சாட்டு; ரிஷாத் MPக்கு ஜூலை 21வரை அவகாசம்



லோரன்ஸ் செல்வநாயகம்

நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவை அலட்சியம் செய்த குற்றம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவுடன் தொடர்புடைய எதிர் மனுவை தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு 06









# நாட்டின் தேசிய பொருளாதார இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக 'பாடசாலை கைத்தொழில் தொழில்முனைவு வட்டம்' ஆரம்பிக்கப்படும்

## –அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

## லேக் ஹவுஸ் மற்றும் கைத்தொழில் அமைச்சு இணைந்த உத்தியோகபூர்வ சஞ்சிகை வெளியீடு



இலங்கையில் பாடசாலை தொகுதியிலேயே தேசிய பொருளாதார இலக்கை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தில் பாடசாலை கைத்தொழில் தொழில்முனைவு வட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டார்.

கைத்தொழில் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை இணைந்து ஏற்பாடு செய்துள்ள தேசிய கைத்தொழில் வாரத்தை முன்னிட்டு பாடசாலைகளில் கைத்தொழில் தொழில் முனைவு வட்டம் அமைக்கும் ஆரம்ப நிகழ்வு நாளந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

நாடு பூராவும் தெரிவு செய்யப்பட்ட 100 பாட சாலைகளைக் கொண்ட பாடசாலை 'கைத்தொழில் தொழில் முனைவு வட்டம்' அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து கைத்தொழில் அமைச்சின் உத்தியோக பூர்வ சஞ்சிகையை (பெரட்ட) வெளியிட்டது. அங்கு பாடசாலை கைத்தொழில் தொழில் முனைவு வட்டத்திற்கான இலச்சினையும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர் ரமேஷ் பத்திரன உரையாற்றிய போது

"நாம் அனைத்து பிள்ளைகளினது மனதிலும் கனவு ஒன்றை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். அந்தக் கனவு நீங்கள் நித்திரையில் காணும் கனவல்ல. அந்தக் கனவு நீங்கள் விழித்திருக்கும் போது காணும் கனவாகும். அந்தக் கனவு எதிர்கால இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதற்கு காணும் கனவாக அமைவது அவசியம். பாடசாலை கைத்தொழில் தொழில்முனைவு வட்டம் இலங்கையின் பாடசாலைத் தொகுதியில் தேசிய பொருளாதார இலக்கை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்படுகின்றது.

கடந்த நூற்றாண்டு காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற முக்கிய சம்பவமாக கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கர 1945 ஆம் ஆண்டு அரசபிரதிநிதிகள் சபையில் இலவச கல்வி சட்டத்துக்கு அங்கீகாரம் பெற்று இலவசக் கல்வியை பெற்றுக் கொடுத்ததை குறிப்பிடலாம். இந்த இலவசக் கல்வியால்



அதிகமானோர் நன்மைகளை பெற்றுள்ளார்கள். ஆனால் கல்வி முறை தொடர்பாக சில பிரச்சினைகள் உள்ளதோடு அது பற்றி நாம் தொடர்ந்து ஆராய வேண்டியது அவசியமாகும். கல்வித் தொகுதியில் எமது பொருளாதார நிலைமையின் முகாமைத்துவம் மற்றும் அதனை மேம்படுத்துவது தொடர்பான அறிவை பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது.

எம் அனைவருக்கும் சிறந்த பொருளாதார சூழல் அவசியமாகும். டொக்டரானாலும் இன்னொரு டொக்டருக்கு சேவைகளை வழங்கக்கூடிய வைத்திய தொழில் முனைவாளராக மாற முடியும். பொறியியலாளரானாலும் இன்னொரு பொறியியலாளருக்கு வேலைவாய்ப்பு வழங்க கூடிய தொழில் முனைவோராக மாற முடியும். தொழில்முனைவுக்கான மனதை எமது நாட்டில் உருவாக்க வில்லை.

அதுவே இதுவரை காணப்பட்ட குறைபாடாகும். அந்தக் குறைபாட்டை முடிந்தளவு திருத்துவதற்கு நாம் முயற்சி செய்கின்றோம். அங்கு திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது எவ்வாறு? அதனை நடத்திச் செல்வது எவ்வாறு? புதிய உற்பத்திகளை வணிக மயப்படுத்தலுக்கு உட்படுத்துவது எவ்வாறு? அந்த உற்பத்திகளை மிக அதிகளவானவர்களுக்கு விரிவாக விநியோகிப்பது எவ்வாறு? முன்வைப்பது எவ்வாறு? அதற்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது எவ்வாறு? போன்ற அநேகமான விடயங்களை நாம் முறையாக பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எமது நாடு உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இணையாக உயர்மட்டத்தில் உள்ள நாடாகும். எமது நாடு அமைந்துள்ள வலயத்தில் உள்ள நாடுகளிடையே முன்னணியில் இருக்கும் நாடாகும். எதிர்வரும் இரண்டு தசாப்த காலத்தில் நிச்சயமாக எம்மால் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற முடியும். அதற்கான சூழல் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றது. அதாவது உலகில் உள்ள மிக பெரிய சந்தை எமது வலயத்திலேயே அமைக்கப்படவுள்ளது. இந்தியாவும் சீனாவும் உலகில் பொருளாதார பலம் மிகுந்த நாடாக முன்னணிக்கு வர முயற்சி செய்கின்றன. அது எமது நாட்டிற்கும் நேர்மறையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை சுட்டிக்காட்ட முடியும்.

உலகில் புதிய பாதைகள் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பாடநெறிகள், கைத்தொழில்மயம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி என்பவற்றாலேயே திறக்கப்பட்டுள்ளன. அது பற்றிய அறிவை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டியது தற்போது அவசியமாகும். அதற்காக அவர்களை ஈடுபடுத்துவது, உலகில் உள்ள தொழில்கள் தொடர்பான அறிவை வளர்ப்பது, இல்லாமல் போகும் தொழில் தொடர்பாக அறிவுறுத்துவது போன்றவையே அவசியமாகும்.

அவ்வாறு செய்தால்தான் எம்மால் பொருளாதார ரீதியாக இப்பிள்ளைகளின் பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியும். இந்த பாடசாலை கைத்தொழில் தொழில் முனைவு வட்டம் அதனை நோக்கமாகக் கொண்டே நாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது"எனத் தெரிவித்தார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் நீலமணி மலவிஆராய்ச்சி, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் டொக்டர் சாரங்க அழகப்பெரும, நாளாந்தா கல்லூரி அதிபர் யு.டி. இரான் சம்பிக்க ஆகியோருடன் லேக் ஹவுஸ் நிறுவன பிரதிப்பொது முகாமையாளர் (விளம்பரம் )சிந்தக்க பிரசன்ன யாப்பா, உதவி பொது முகாமையாளர்( விளம்பரம்) அசங் கபீரிஸ், அரச தொடர்புகள் திணைக்கள முகாமையாளர் ஆசிரியர் சமந்த கருணா சேக்கர ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

–கௌசல்யா சந்தமாலி
(தமிழில்: வீ. ஆர். வயலட்)

# இலங்கை முஸ்லிம்கள் நிம்மதியுடன் ஹஜ் பெருநாளை கொண்டாடுகின்றனர்

## – சமூக சேவையாளர் பாஸி ஸூபைர்

கடந்த காலங்களையும் விட நாட்டில் சமாதானம், சுபிட்சம் ஏற்பட்டு இன்று உலக வாழ் முஸ்லிம் மக்கள் அத்துடன் இலங்கை முஸ்லிம்களும் பெரும்

நிம்மதியுடனும், சந்தோசத்துடனும் தியாகத் திருநாள் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜூப் பெருநாளை கொண்டாடுகின்றனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய மக்கள் நிம்மதியாக வாழ்வதிலேயே நாட்டின் சுபிட்சம் தங்கியுள்ளது என சமூக சேவையாளர் பாஸி ஸூபைர் விடுத்திருக்கும் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தற்போதைய அரசாங்கம் மக்களின் கஷ்டங்களை நன்கு உணர்ந்துள்ளது. ஆகையால் மக்கள் நலனில் அக்கறை கொள்ளும் அரசு என்பதால் மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

# 'சமூக நல்லிணக்கம் , சமூக மீள்தன்மையை வலுப்படுத்துதல்' (SCOR) வேலைத்திட்டம்



பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் ஆசிய மன்றத்தின் அனுசரணையில் கெப்சோ (Gafso) நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தல் மற்றும் விழுமிய கல்வியை முன்னுரிமை படுத்தல் எனும். சமூக நல்லிணக்கம் மற்றும் சமூக மீள்தன்மையை வலுப்படுத்துதல் (SCOR) வேலைத்திட்டத்தின் கீழ்

மாவட்ட மட்ட சமூக நல்லிணக்க ஒன்றுகூடலும் இவ்வேலைத்திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது. கெப்சோ (GAFSO ) நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டக்ளஸ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனிபா, GAFSO நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.அப்துல் ஜப்பார் , உட்பட இளைஞர் மன்ற அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 300 ற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.



பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் பெற்றோர்கள் மற்றும் தனவந்தர்கள்,பழைய மாணவர்களினால் வழங்கப்பட்ட தளபாடங்கள்,நூல்கள் என்பவற்றை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் பீ.முஹாஜிரீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்களான ஏ.எல்.பஹாத்,எம்.எச்.நௌபல் உட்பட பலர் கலந்து கொண்டனர். படம் பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

# 'பாட்டுப் பாட வா' நேத்ராவில் முத்தழகின் நேர்காணல்



ரூபவாஹினி வணக்கம் நேத்ரா அலைவரிசையில் தென்னிந்திய சினிமா பின்னணிப் பாடகர் ஏ.எம். ராஜாவின் பிறந்தநாளான (ஜூலை 01)ஐ முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை வி.முத்தழகு சூரியகுமார் உடனான நேர்காணல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணி முதல் 10.00 மணிவரை ஒளிபரப்பாகும் நேர்காணல் நிகழ்ச்சியை தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் என்.காசிம் நிலாரின் பணிப்புரைக்கு அமைய இ. தனஞ்சயன் தயாரித்து வழங்குகிறார்.

ஏ.எம்.ராஜாவை பற்றி வி.முத்தழகு கூறிய கருத்துக்கள்...

ஏ.எம்.ராஜா மெல்லிசைப் பாடகராக தெலுங்கு மொழியில் பாடி அறிமுகமாகி பின்னர் சம்சாரம் எனும் தமிழ் திரைப்படத்தில் பின்னணிப் பாடகராக தெரிவு செய்யப்பட்டு தென்னகத்தின் பிரபல பாடகராகத் தமிழில் திகழ்ந்தார். 'சம்சாரம் சம்சாரம் சகல தர்மசாரம்' மாநிலத்தில் விதியை வென்ற பாடல்கள் அவை. அவர் பல மொழிகளிலும் பாடல்கள் பாடியுள்ளார். ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இலங்கையில் சிங்கள மொழி திரைப்படப் பாடல்களையும் பாடி புகழ்பெற்றவர்.கல்யாணப்பரிசு திரைப்படத்தில் இசையமைப்பாளராகவும், பாடகராகவும் புகழ்பெற்று மனது மறக்காத பாடல்களையும் ரசிகர்களுக்கு விட்டுச் சென்றுள்ளார்.

1988ஆம் ஆண்டு பாடகர் ஏ.எம். ராஜாவை சென்னை இல்லத்தில் எனக்கு நேரில் சந்திக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. அவர் பாடிய சகோதர சிங்கள மொழித் திரைப் படப் பாடல்களை ஒலி நாடாவில் (கெசட்) மீள பாடும் வாய்ப்பு எனக்கு எம் நாட்டில் கிட்டியது. இந்த ஒலி நாடாவை கையளிக்கும் போது எடுத்துக் கொண்ட புகைப்படத்தையே காணக் கூடியதாக உள்ளது.

# கலைவாதி கலீல் அரங்கில் 89 ஆவது வகவ கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 89 ஆவது கவியரங்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் (03) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். கலைவாதி கலீல் அரங்கில் நடைபெறும் கவியரங்கிற்கு கவிஞர் சிந்தனைப்பிரியன் ஜமால்தீன் முஸம்மில் தலைமை தாங்குவார்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்

### பாரம்பரியம் நிகழ்ச்சியில்

# மணிமொழி மௌலானா எம்.ஜே.கலீலுர் ரஹ்மான் ஹஸ்ரத்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் ஜூலை மாதம் 04 ஆம் திகதி செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் மணிமொழி மௌலானா அல்ஹாஜ் மௌலவி அல்ஹாபிஸ் எம்.ஜே.கலீலுர்ரஹ்மான் பாகவியின் நினைவுகள் பேசப்படவுள்ளன.

பாகவியோடு நெருக்கமாக பழகும் வாய்ப்பு பெற்ற, கொழும்பு செட்டியார் தெரு மீலாத் இயக்க பொதுச் செயலாளரும், இஸ்லாமிய இலக்கிய கழக தலைவருமான பீ. நிலாமுத்தீன், கலீலுர்ரஹ்மான் ஹஸ்ரத்தின் நெருக்கத்துக்குரிய தோழர், மர்ஹூம் இறையருட்கவிமணி பேராசிரியர் அப்துல் கபூர் சாஹிப்பின் மகன், அல்ஹாஜ் ஜமால் முஹம்மத் தமிழகத்திலிருந்து கலந்து கொண்டு அன்னாரின் நினைவுகளை நினைவுகூருகிறார்கள்.

அத்தோடு சென்னை மாநகரம் அடையாரில் தற்போது வசித்து வரும் கலீலுர் ரஹ்மானின் இளையப்புதல்வர், எம். ஜே.கே.கலீக்குஸ் ஸமான் மூலமாக பெறப்பட்ட தகவல்களும் நிகழ்ச்சியில் பேசப்படவிருக்கிறன.

இன்றைய கருவூர் மாவட்டம் பள்ளப்பட்டியில் 1905 ஆம் ஆண்டு பிறந்த, கலீலுர்ரஹ்மான் ஹஸ்ரத், இந்திய சுதந்திரத்துக்காக பல்வேறு பங்களிப்பு செய்தவர். 19411945 காலப் பகுதியில் நேத்தாஜிபடையின், ஒரு பிரிவின் ஜெனரலாக ஹஸ்ரத் பணியாற்றியமை சிறப்பித்து சொல்லத்தக்கது.

1949 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தார். 1950 தொட்டு 1960 காலப்பகுதியில், கொழும்பு 3ஆம் குறுக்குத்தெரு மேமன் ஹனபி பள்ளியில் பிரதான பேஷ் இமாமாக கதீபாவாக பணியாற்றி உருது, தமிழ் மொழிகளில் குத்பா பிரசங்கம் நடாத்தி மக்கள் மனங்களில் தனியானதொரு இடத்தினை தக்கவைத்துக் கொண்டார். இன்னும் இலங்கை நாட்டின் பல பாகங்களுக்கும் பயணித்து பெருமளவில் சன்மார்க்க பணியாற்றி இலங்கை மக்களின் நன்மதிப்புக்குரிய உலமாவாக திகழ்ந்தார்.

இக்காலப்பகுதியில் அப்போது இலங்கை வானொலியில் ஒலிபரப்பான இஸ்லாமிய நிகழ்ச்சிகளுக்கும், பின்னாட்களில், முஸ்லிம் சேவையாக பரிணமித்த போது அச்சேவைக்கும் இவர் வழங்கிய பெரும் பங்களிப்புகளும் இலங்கையில் மட்டுமல்லாது, கடல் கடந்தும் பெரும் புகழை இவருக்குத் தேடிக்கொடுத்தன.

மர்ஹூம் கலீலுர்ரஹ்மான் இனிய நினைவுகளை சுமந்து வரும் பாரம்பரியம் நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# திருமலை பொது வைத்தியசாலையில் 135 சிற்றூழியர்களின் பற்றாக்குறை ஆர்ப்பாட்டமும் முன்னெடுப்பு



றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறைக்கு உடனடி தீர்வைக் கோரி, திருகோணமலை பொது வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் நேற்று (28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை திருகோணமலை பொது வைத்தியசாலையில் தற்போது 135 சிற்றூழியர்களின் பற்றாக்குறை காணப்படுவதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சுகாதார அமைச்சுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதிலும் இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

திருகோணமலை பொது வைத்தியசாலை கிழக்கு மாகாண சபைக்கு கீழ் இயங்கி வந்த நிலையில் 2008ம் ஆண்டு மத்திய அரசாங்கத்தின்கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் கடமையாற்றிய சிற்றூழியர்கள் சிலர் உயிரிழந்துள்ளதாகவும் மற்றும் சிலர் ஓய்வூதியம் பெற்று சென்றுள்ளதாகவும் தற்போது கடமையில் உள்ள சிற்றூழியர்களுக்கு விடுமுறை, இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிற்றூழியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த ஆர்ப்பாட்டக் களத்திற்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் இணைப்புச் செயலாளரும், திருகோணமலை நகர சபை முன்னாள் தலைவருமான இராசநாயகம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிற்றூழியர்களுடன் கலந்துரையாடுவதற்கு வருகை தந்த போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தற்போது வர வேண்டாம் என தமது எதிர்ப்பையும் தெரிவித்துள்ளனர்.

# 40 ஆண்டுகளுக்கு மேலான அடுக்குமாடிகளில் வசிப்பவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய திட்டம்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



40 ஆண்டுகளுக்கும் மேலான அனைத்து அடுக்குமாடி குடியிருப்புகளிலும் வசிப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விசேட வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணித்துள்ளார்.

இதன்படி, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து அடுக்குமாடி குடியிருப்புகளின் தரம் தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையை பெற்றுக்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அமைச்சர் பணித்துள்ளார்.

இதற்கமைய, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமோ அல்லது வேறு அரச நிறுவனமோ இதுபோன்ற கட்டடங்கள் தொடர்பாக ஆய்வு நடத்தி முறையான தொழில்நுட்ப அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தா தெரிவித்தார்.

தொழில்நுட்ப அறிக்கையின் பரிந்துரைகளின்படி, வீடமைப்புத் தொகுதிகள் மீள் அபிவிருத்தி அல்லது மேம்படுத்தல் செய்யப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுவதுடன், அது பாதுகாப்பற்றதென உறுதிசெய்யப்பட்டால், 2003ஆம் ஆண்டு 24ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சட்டத்தின் 10ஆவது பிரிவின் கீழ் வீடமைப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க அவ்வாதனத்தை பெற முடியுமெனவும், அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பற்றதாக இனங்காணப்பட்ட 8 வீட்டுத்தொகுதிகள் தொடர்பாக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார

06

# சீனாவிலிருந்து இலங்கைக்கு நேரடி விமான சேவை

### வாராந்தம் ஆறு சேவைகள் நடத்த தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்



சீனாவிலிருந்து இலங்கைக்கு நேரடி விமான சேவையை ஆரம்பிப்பதற்கு 'எயார் சைனா' விமான சேவை நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதற்கிணங்க எதிர்வரும் ஜூலை மூன்றாம் திகதி முதல் இந்த விமான சேவை ஆரம்பமாகவுள்ளதாக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

சீனாவின் ஷூ வான் நகர விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம்வரை மூன்று விமான சேவைகளையும் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ஷூவான் விமான நிலையம்வரை மூன்று விமான சேவைகளையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

06



Indigo எயார்லைன் நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் சுஹைனா நஸீருக்கும் சென்னையிலுள்ள இந்தியாவுக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி வெங்கடேஷ்வரனுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று நடைபெற்றது. உலகளாவிய இலக்குகளுக்கான எயார்லைன்ஸின் விரிவான செயற்பாடுகள் தொடர்பாக இவர்கள் இருவரும் கலந்துரையாடினர். சுற்றுலாவுக்கான முன்னிலைமிக்க இடங்களில் ஒன்றாக இலங்கை காணப்படுவதாக இந்தக் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டதுடன், Indigo எயார்லைன் நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை துணை உயர்ஸ்தானிகர் வலியுறுத்தினார்.

# 'அஸ்வெசும' சமூகநல திட்டத்தை அரசியல் மயமாக்க வேண்டாம்

### மேன்முறையீட்டுக்கு மக்களை ஊக்குவியுங்கள்



'அஸ்வெசும' சமூக நலத் திட்டத்தை அரசியல்மயமாக்கி, மக்களை தூண்டிவிட்டு, அரசியல் நடத்துவதற்கு சிலர் முற்படுகின்றனர். இது ஏற்புடைய விடயமல்ல. தவறுகள் இடம்பெற்றிருந்தால், மக்களை மேன்முறையீடு செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பாகுமென, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியிருந்தும் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருக்காவிட்டால், அது தொடர்பாக எதிர்வரும் ஜுலை 10ஆம் திகதிக்குள் மேன்முறையீடு செய்யுமாறு மக்களிடம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார். மக்கள் வீதிகளுக்கு இறங்கி போராட்டங்களை நடத்துவதை விட, அவர்களை மேன்முறையீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு அரசியல் பிரமுகர்களிடம் கேட்டுக்கொள்வதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

06

# விசேட தேவையுடையோருக்கும் இனி சாரதி அனுமதிப்பத்திரம்

### சுமார் 06 இலட்சம் பேரின் உடல் தகுதிக்கு ஒப்புதல்




விசேட தேவையுடையவர்களும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அனுமதி வழங்க போக்குவரத்து மருத்துவ நிறுவனங்களின் வைத்தியர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

விசேட தேவையுடைய சுமார் 6 இலட்சம் பேரின் உடல் தகுதிக்கு மருத்துவர்கள் ஒப்புதல் அளிக்காததால், இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியவில்லை.

எனவே, வைத்தியர்களின் இந்த ஒப்புதலுடன் அவர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான பரிந்துரைகள் அடங்கிய விசேட அறிக்கையொன்று இம்மாத இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு இருந்த தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளதாக,

06

# காரில் சென்றவர்கள் மீது அதிகாலை துப்பாக்கிச் சூடு

### கிளிநொச்சியில் நேற்று சம்பவம், சாரதி படுகாயம்

கிளிநொச்சி குறூப் நிருபர்



கிளிநொச்சி, உதயநகர் பிரதேசத்தில் காரில் பயணித்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் பயணித்த இனந்தெரியாத இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கார் சாரதி படுகாயமடைந்துள்ளதாக, கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (28) அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், உதயநகர் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய சாரதி காயமடைந்து சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் உட்பட மேலும் இருவர் உதயநகர் பிரதேசத்திலிருந்து கனகபுரம் பிரதேசத்துக்கு காரில் சென்று

06

# தொட்டிலில் கழுத்து இறுகி குழந்தை பலி

### நாவலப்பிட்டியில் சோக சம்பவம்



நாவலப்பிட்டி, மொன்றிகிறிஸ்ரோ பிரதேசத்தில் தொட்டிலில் கழுத்து இறுகி 9 வயதுச் சிறுவனொருவன் நேற்று முன்தினம் (27) உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

புடவையொன்றால் கட்டப்பட்டிருந்த தொட்டிலில் கழுத்து இறுகியே இந்தச் சிறுவன் உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்த மற்றுமொரு சிறு பிள்ளையுடன் சேர்ந்து தொட்டிலில் விளையாடிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாபு சர்மாவுக்கு 'கௌரவ போஷகர்' நியமனம் வழங்கி கௌரவிப்பு



முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ பாபு சர்மாவுக்கு கௌரவ போஷகர் நியமனம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாமஸ்ரீ கௌரவ விருது வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்



கொழும்பு தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் க.செந்தில்குமார் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை (30) மாலை 5.30 மணிக்கு இலக்கியக்களம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் 'எனது நாடக வாழ்க்கை' எனும் தலைப்பில் நாடகர் க.பாலேந்திரா உரையாற்றவுள்ளார்.






ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — செவ்வாய்க்கிழமை 2023.06.27 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5158 | ரூ. 23,187,524.00 | F | 0 0 9 2 3 8 |
| ஜாதிக சம்பத | 1613 | ரூ. 13,011,141.52 | துலாம் | 7 0 8 6 4 8 |
| தன நிதானய | 1188 | ரூ. 97,165,367.20 | N | 45 49 70 71 |
| ராசி சுப பலன் (Handahana) | 467 | ரூ. 2,500,000.00 | சிம்மம் (விசேட இலக்கினம்: சிம்மம்) | 20 29 40 59 |
| கொவிசெத (Govisetha) | 3400 | ரூ. 66,083,623.20 | T | 25 49 53 62 |
| Mega Power | 1506 | ரூ. 332,683,278.00 (அடுத்த மெகா சுப்பர் பரிசு) | A (சுப்பர் இலக்கம் 12) | 12 14 73 77 |

Mega Power: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00









## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.29 | 215.00 |
| கனடியன் டொலர் | 224.47 | 239.42 |
| யூரோ | 324.45 | 344.53 |
| ஜப்பான் யென் | 2.1010 | 2.2276 |
| சிங்கப்பூர் டொலர் | 220.86 | 235.11 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 379.69 | 402.23 |
| சுவிஸ் பிராங்க் | 329.51 | 352.41 |
| அமெரிக்க டொலர் | 298.47 | 314.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 811.99 | கட்டார் ரியால் | 84.04 |
| குவைத் டினார் | 996.76 | சவூதி ரியால் | 81.61 |
| ஓமான் ரியால் | 795.16 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.34 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆனி மாதம் 15ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 10

### குறள் தரும் சிந்தனை



பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்

சூதாடும் இடத்திலேயே ஒருவர் தமது காலத்தைக் கழிப்பாரே யானால், அது அவருடைய மூதாதையர் தேடிவைத்த சொத்துகளையும் நற்பண்பையும் நாசமாக்கிவிடும்.

# ஈகைத் திருநாள்

இலங்கையிலும் உலகின் வேறு பல நாடுகளிலும் வாழும் முஸ்லிம்கள் ஈகைத்திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளை இன்று கொண்டாடுகின்றனர்.இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாக விளங்கும் ஹஜ் கடமை நிறைவேற்றப்படுவதோடு இப்பெருநாள் கொண்டாடப்படுகிறது. இஸ்லாமிய நாட்காட்டியின்படி, துல் ஹஜ் மாதத்தின் 10 ஆவது நாள் இப்பெருநாள் கொண்டாடப்படுவது வழமையாகும்.

இற்றைக்கு நான்காயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த இறைத்தூதர் இப்றாஹீம் (அலை) அவர்களும் அன்னாரது குடும்பத்தினரும் இறைகட்டளைகளுக்கு ஏற்ப புரிந்த தியாகங்கள், அரப்பணிப்புக்கள் மற்றும் சகிப்புத்தன்மை என்பவற்றை நினைவுகூர்வதை இப்பெருநாள் பின்புலமாகக் கொண்டுள்ளது. இப்றாஹீம் (அலை) அவர்களும் அவரது குடும்பத்தினரும் இறைவனின் கட்டளைக்கு ஏற்ப மேற்கொண்ட கிரியைகளை இறைவன் ஹஜ் கடமையில் கிரியைகளாக கடமையாக்கியுள்ளான்.

அந்த வகையில் அன்னார் மக்காவில் நிர்மாணித்த மஸ்ஜிதுல் ஹரமுக்கு பொருளாதார வசதி படைத்தவர்கள் வாழ்நாளில் ஒரு தடவை நேரில் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றுவது கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப முஸ்லிம்க்ள இக்கடமையை நிறைவேற்றுகின்றனர்.

2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் உலகம் எதிர்கொண்ட கொவிட் 19 பெருந்தொற்று அச்சுறுத்தல் இக்கடமையை கொவிட் பரவுதல் கட்டுப்பாடுகளுடன் நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு முஸ்லிம்களை உள்ளாக்கியது. ஆனால் தற்போது அந்த நிலை முற்றாக நீங்கி 2020 இற்கு முன்பு போன்று இக்கடமையை நிறைவேற்றக்கூடிய வசதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதன் பயனாக இலங்கையைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இம்முறை இக்கடமையை நிறைவேற்றும் வாய்ப்பை பெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் இப்றாஹீம் (அலை) அவர்களதும் அவர்களது குடும்பத்தினரதும் அர்ப்பணிப்புக்களும் சகிப்புத்தன்மையும் பொறுமையும் படிப்பினைகளும் முன்னுதாரணங்களும் நிறைந்தவை. அவை எல்லாக் கால சூழ்நிலைக்கும் பயன்மிக்கவை. அவற்றில் பயன்களைப் பெற்றுக்கொள்வது வாழ்வின் சிறப்புக்கும் மேம்பாட்டுக்கும் பங்களிக்கக் கூடியவையாகும்.

அந்த வகையில் கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்நாட்டு மக்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுத்தனர். குறிப்பாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட எல்லாப் பொருட்களுக்கும் தட்டுப்பாடுகள் நிலவியதோடு விலைகளும் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டன. இருந்த போதிலும் அந்த அசௌகரியங்கள் மற்றும் பாதிப்புகளின் போது இந்நாட்டு மக்களும் பொறுமை காத்தனர். இந்த சூழலில் நாட்டையும் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்ட பொருளாதார வேலைத்திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிரதிபலன்களை மக்கள் குறுகிய காலம் முதல் அனுபவிக்க ஆரம்பித்தனர்.

இந்தப் பின்புலத்தில் தற்போது நாடு மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளது. இதன் பயனாக பொருளாதார நெருக்கடி காலத்தில் முகம்கொடுத்த அசௌகரியங்களும் நெருக்கடிகளும் நீங்கியுள்ளன. இவ்வாறான சூழலில் இந்நாட்டு முஸ்லிம்கள் ஹஜ் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

இந்நாட்டு முஸ்லிம்களும் இந்நாட்டின் ஏனைய சமூகங்களைப் போன்று 2020 முதல் ஹஜ் பெருநாளையும் அச்சம் பீதியின்றி கொண்டாடக்கூடிய வாய்ப்பை பெற்றுக் கொள்ளவில்லை. அதற்கு கொவிட் 19 பெருந்தொற்று, அதனைத் தொடர்ந்து கடும் பொருளாதார நெருக்கடி என்பன பெரும் சவாலாக அமைந்திருந்தன.

தற்போது கொவிட் 19 பரவுதல் அச்சுறுத்தல் பெருவீழ்ச்சி அடைந்துள்ளதோடு பொருளாதார நெருக்கியிலிருந்து நாடும் மறுமலர்ச்சி பாதையில் பிரசித்திருக்கின்றது. அந்த வகையில் கடந்த வருடங்களைப் போலன்றி முஸ்லிம்கள் இம்முறை பெருநாளை கொண்டாடுகின்றனர். இது ஈகையும் சகோதரத்துவத்தையும் அதிகம் ஊக்குவிக்கக் கூடிய பெருநாளாகவும் உள்ளது. அதனால் பொருளாதார ரீதியில் கஷ்டங்களுக்கு முகம்கொடுத்துள்ளவர்களுக்கு உதவவும் ஊக்குவிக்கிறது. அதற்கேற்ப முஸ்லிம்கள் இப்பெருநாளைக் கொண்டாடுகின்றனர். அது நல்லிணக்கத்திற்கும் சகவாழ்வுக்கும் பாரிய பங்களிப்பை நல்கக் கூடியதாகவும் உள்ளது.

இறைத்தூதர் இப்றாஹீம் நபியினதும் அன்னாரது குடும்பத்தினரதும் தியாகங்கள், அர்ப்பணிப்புகள் மற்றும் சகிப்புத்தன்மை நாட்டினதும் மக்களினதும் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு முன்மாதிரியானவையாகக் கருதப்படுகிறது. ஆகவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு முழுமையாக மீட்சி பெறவும் சகிப்புத்தன்மையும் அர்ப்பணிப்புகளும் இன்றியமையாததது. அதுவே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

# இறையருள் நிறைந்த ஹஜ் பெருநாள்



அல்லாஹ்வின் பேரருளினால் உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள், தியாகத்தின் திருநாளாகக் கருதப்படும் 'ஈதுல் அழ்ஹா' ஹஜ் பெருநாளைத் தற்போது கொண்டாடுகின்றனர். இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையான புனித ஹஜ் கடமையை முதன்மைப்படுத்தியும் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன் இறைவனின் தூதர்களில் ஒருவரான நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் வாழ்வில் நடந்த மாபெரும் தியாகத்தை நினைவூட்டியுமே இஸ்லாத்தின் பன்னிரண்டு மாதங்களில் ஒன்றான துல்ஹஜ் மாதம் பத்தாம் நாள் உலக முஸ்லிம்களால் இப்பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

தமது தியாக உணர்வையும், இறைவனுக்கான முழுமையான அர்ப்பணிப்பையும் உலக முஸ்லிம்கள் வருடத்தில் ஒருநாள் மீண்டும் பட்டை தீட்டிப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தை இப்பெருநாள் எமக்கு தருகின்றது.

இப்றாஹீம் (அலை) என்பவர் முஸ்லிம்களால் மட்டுமல்ல, இறைவனால் அருளப்பட்ட இறைவேதங்களான யூத, கிறிஸ்தவ மதங்களை பின்பற்றும் மக்களாலும் நினைவுகூரப்படும் ஒரு தீர்க்கதரிசியாவார். கிறிஸ்தவ, யூத மக்கள் அவரை அப்ரஹாம் என அழைத்துக் கொண்டாடுகின்றனர்.

அவரது வாழ்க்கை வரலாறு அல்குர்ஆனில் மட்டுமல்ல, கிறிஸ்தவர்களின் பைபிளிலும் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இப்றாஹீம் (அலை) அவர்கள் தூய இறைவழிபாட்டுக்கும், ஓரிறைக் கொள்கைக்கும் ஒரு முதன்மையான இறைதீர்க்கதரிசியாக இந்த மதங்களால் போற்றப்படுகின்றார். தன்னைப் படைத்த ஏகஇறைவனோடு தனது தனிப்பட்ட தொடர்பையும், அன்பையும், மிகப் பரந்தளவில் வெளிப்படுத்தியவர் தான் இப்றாஹீம் (அலை).

இப்றாஹீம் (அலை) அவர்கள் இறை கட்டளையை ஏற்று தம் அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்து பலியிட முயன்ற வரலாற்று சம்பவத்தையே இப்பெருநாள் எமக்கு நினைவுபடுத்துகின்றது. இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப்பலியிட கனவொன்று கண்டார். இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் வகையில் தனது அன்பு மகனை பலியிட அன்னார் துணிந்தார்கள். அவ்வாறு துணிந்து பலியிட முயன்ற போது ஒரு ஆட்டை அறுத்துப் பலியிடுமாறு இறைவன் அவர்களுக்கு இட்ட கட்டளையை ஏற்று ஆட்டை அறுத்து பலியிட்டார்கள்.

இத்தியாகத்தின் உச்சநிலையை முழு உலகிலும் உள்ள இறையடியார்களுக்கு உணர்த்துவதே 'உழ்ஹிய்யா' எனப்படும் குர்பானின் நோக்கமாகும். ஹஜ் பெருநாளின் தாற்பரியமும் தியாகத்திலேயே தங்கியுள்ளது. அதனாலேயே இப்பெருநாள் தியாகப் பெருநாள் எனவும் அழைக்கப்படுகின்றது. குர்பானி (உழ்ஹிய்யா) கொடுப்பதனால் இப்பெருநாளின் கடமை முடிந்து விடாது என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் வலியுறுத்துகிறது. 'அவற்றின் இறைச்சியும் இரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களில் உள்ள இறையச்சம்தான் அவனை சென்றடைகின்றது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியை காட்டியதற்காக நீங்கள் அவனது பெருமையை எடுத்துரைக்க இவ்வாறு அவன் அவற்றை செய்துவைத்தான்.' (சூறத்துல் ஹஜ்: 38)

ஹஜ் மாதத்தையும் அதன் சிறப்பையும் பற்றி இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல்குர்ஆனும், நபிமொழிகளும் சிறப்பித்துக் கூறுகின்றன.

அல்லாஹ் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களின் மீதும் சத்தியமிட்டு கூறுவதன் மூலம், ஹஜ்ஜுடன் தொடர்பான வணக்கங்கள் நடைபெறும் அந்த பத்து நாட்களின் சிறப்பை உலகுக்கு வெளிப்படுத்துகின்றான். இதை நிரூபிப்பதுபோல் பெருமானார் (ஸல்) அவர்களின் பின்வரும் பொன்மொழி அமைந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்பாஸ்(ரழி) அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது, 'அல்லாஹ்விடத்தில் மிகவும் பெறுமதிமிக்க நாட்களாகவும், அந்நாட்களில் செய்யப்படும் நல்லமல்கள் அல்லாஹ்வின் மிகவும் விருப்பத்துக்குரியதாகவும் காணப்படக்கூடிய நாட்கள் அந்த பத்து நாட்களைத் (துல்ஹஜ் மாத முதல் பத்து நாட்கள்) தவிர வேறேதுமல்லை. அந்நாட்களில் அதிகமதிகம் தஸ்பீஹ், தஹ்மீத், தஹ்லீல், தக்பீர்கள் செய்யுங்கள்' (ஆதாரம்: புஹாரி)

பெருமானார் (ஸல்) அவர்களின் மற்றொரு ஹதீஸ் பின்வருமாறு அமைந்துள்ளது. 'உலக நாட்களிலேயே மிக சிறப்பான நாட்கள் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களுமாகும்'

அனல் (ரழி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாக இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்கள், ' துல்ஹஜ் மாதத்தின் முந்திய பத்து நாட்களின் ஒவ்வொரு நாளும் ஆயிரம் (1000) நாட்களுக்கு சமமான சிறப்புடையதாகும். அரபாவுடைய நாள் பத்தாயிரம் நாட்களின் சிறப்புடையதாகும்' (ஆதாரம்: பைஹகி)

துல்ஹஜ் மாதத்தில் உலகின் நாலாபகுதிகளில் இருந்தும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலட்சக்கணக்கான மக்கள் மக்காவிலும் மதீனாவிலும் ஒன்று திரள்வர். இவ்வருடம் (2023இல்) உலக நாடுகளில் இருந்து இரண்டு மில்லியன் மக்கள் ஹஜ்ஜுக்காக வந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இவர்களோடு சவூதி அரேபிய நாட்டைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்களும் இப்போது ஒன்றுகூடியுள்ளனர். ஹஜ் கடமையை நிறைவேற்ற சென்றவர்கள் தம் கடமையின் பல்வேறு கிரியைகளையும் செய்து வருகின்றனர்.

இத்தினங்களில் எமது சொந்த நாட்டில் இருந்தவாறு நாம் செய்ய வேண்டிய நல்லமல்களையும் பெருமானார் (ஸல்) அவர்கள் எமக்கு கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். புறைதா (ரழி) அறிவிக்கின்றார்கள், 'ஹஜ்ஜில் செய்யப்படும் (தான தர்மத்துக்கான) செலவினங்கள், அல்லாஹ்வுடைய பாதையில் செய்யப்படும் முந்நூறு மடங்கு நன்மை தரக்கூடியதாக அமைந்து விடும்.

(ஆதாரம்: அஹ்மத், தபரானி)

எனவே இப்பெருநாளில் எமது நாட்டில் எமது குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருக்கும் நாம், எமது பெருநாள் தொழுகையை ஜமாஅத்தாக காலை வேளையிலேயே நிறைவேற்றுவதோடு, எமது குடும்பம், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் ஸலாம் கூறி, ஆரத்தழுவி மகிழவும் தவறக்கூடாது. கஷ்டப்படும், அல்லல்படும் ஏழை, எளியவர்களை எமது செல்வத்தினாலும், இனிய புன்னகையினாலும் மகிழ்விக்க வேண்டும். எமது பெருநாள் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இபாதத்துடைய நாளாக மாற நாம் முயற்சிப்போமாக... அத்தோடு பெருநாள் தின இரவையும் இபாதத்துகள் நிறைந்த இரவாக கழிப்போமாக.

பெருமானார் (ஸல்) கூறினார்கள். 'எவனொருவன் நோன்பு பெருநாள், ஹஜ் பெருநாள் இரவுகளை (இபாதத்துகளுடன்) உயிர்ப்பிக்கிறானோ, அவரனது உள்ளம், உள்ளங்கள் எல்லாம் மரணிக்கும் நாளில் மரணிக்காது. (ஆதாரம்: தபரானி)

ஈத் முபாரக்



பேராசிரியர் மௌலவி
**எம்.எஸ்.எம்.ஜலால்தீன்...**
முன்னாள் பீடாதிபதி, இஸ்லாமிய கற்கை அரபுமொழிப் பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# மனித நாகரிகத்துக்கு ஒளிவிளக்காகிய இறைதூதர் இப்ராஹிமின் இலட்சியங்கள்!

இடப்பெயர்வு, தியாகங்களின் அத்திவாரங்களிலிருந்து கட்டமைக்கப்பட்ட இஸ்லாம், மனித நாகரிகத்துக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது. இந்த முன்மாதிரிகள் சமயங்களுக்கென மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. நாகரிகம், குடும்ப அமைப்பு, இலட்சியங்களை வெல்வதற்கான பயிற்சி, கொள்கைகளை உயிரூட்டுவதிலுள்ள சவால்களை எதிர்கொள்ளல் மற்றும் சமூகத்தை கட்டமைப்பதிலுள்ள தியாகங்களையும் இந்த முன்மாதிரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த ஊற்றுக்களிலிருந்துதான், இறைதூதர் இப்பராஹீம் (அலை) அவர்கள் தனது உயரிய இலட்சியங்களை வென்றெடுத்தார். இவரின் வெற்றிக்கு இடப்பெயர்வு மற்றும் தியாகங்களே அத்திவாரமாகியிருந்தன. இந்த வெற்றிகள் உலகில் பல நாகரிகங்களை உருவாக்கின.

பாரான் தேசத்திலிருந்து நாற்பது நாட்கள் ஒட்டகைப் பயணத்தில், அன்னை ஹாஜரா (அலை) மற்றும் பாலகர் இஸ்மாயில் ஆகியோர் பண்டைய பக்காவுக்கு (மக்கா) புலம்பெயர்ந்ததாலே பின்னர் ஒரு நாகரிகம் உருவானது. குடும்பம், சமூகம், பொருளாதாரம் மற்றும் சமயம் என்பன இந்நாகரிகத்தில் இருந்தன. "என் இறைவனே... மக்காவாகிய இவ்வூரை அபயமளிக்கும் பட்டணமாக ஆக்கிவை. கஃபாவான உனது இல்லத்தை நாடி வருவோருக்கு பழங்கள், கனிகளைச் சொரிந்துவை. எனது மக்களை சிலை வணக்கத்திலிருந்தும் இரட்சித்துக்கொள்".

அன்னை ஹாஜராவையும் பாலகர் இஸ்மாயீலையும் மக்கா பாலைவனத்தில் தனியே இருக்கச் செய்த இறைதூதர் இப்ராஹீம், இவ்வாறுதான் இறைவனிடம் பிரார்த்தித்தார்.

இதிலிருந்து அரேபியாவில் புதிய சமூகம் தோன்றியதை உணர முடிகிறது. விவசாயம் செழித்திருந்த அன்றைய பாரான் தேசத்தை (ஈரான், ஈராக், பலஸ்தீன்) நோக்கி இறைதூதர் பிரார்த்தித்தது ஏன்? அதேபோன்ற ஒரு செழிப்புமிக்க தேசத்தை அரேபியாவிலும் உருவாக்குவதே இவரது நோக்கம். குடியிருப்புக்களை அமைத்தல், பட்டணத்தை உருவாக்கல், புதிய மார்க்கத்தை தோற்றுவித்தல் இவைகளே இறைதூதர் இப்ராஹிமின் இலட்சியங்களாக இருந்தன. ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் இதற்காக அவர் செய்த தியாகங்களே எமக்கு மார்க்கமாக்கப்பட்டுள்ளது.



எனவே, சமயத்தை தோற்றுவிக்கும் நோக்கில் மாத்திரம் தான் இறைதூதர் இப்ராஹீமின் இடப்பெயர்வுகள், தியாகங்கள் இருந்ததாகக் கருத முடியாது. ஒரு உன்னத சமூகக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகளும் இறைவனிடத்தில் அங்கீகரிக்கப்படும் என்ற தத்துவத்தையே புனித ஹஜ் கற்றுத்தருகிறது.

பாலகனாக வளர்ந்திருந்த இஸ்மாயீலை (அலை) அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிடத் துணிந்த இறைதூதர் இப்ராஹீமின் தியாகம், இதற்கு கட்டுப்பட்ட மகனின் ஒழுக்கம் மற்றும் இந்தத் துயரங்களில் அன்னை ஹாஜரா (அலை) நடந்துகொண்ட விதங்களே இன்று மனுக்குலத்துக்கு ஒளி விளக்காக இலங்குகிறது. மனுக்குலத்தையே மீட்சிக்கும் ஒரு மார்க்கத்தை உருவாக்கிய இக்குடும்பத்தவர்களது முன்மாதிரிகள், உலகம் முடியும் வரைக்கும் யூத, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம்களுக்கு மார்க்கமாக்கப்பட்டுள்ளன.



முஹம்மது நபி (ஸல்) அவர்களும் இவ்வாறான தியாகம், இடப்பெயர்வுக்கு உள்ளாகியே இஸ்லாத்தை நிலைநிறுத்தினார். மக்காவிலிருந்து புலம்பெயர்ந்த முஹம்மது (ஸல்) அவர்கள் மதீனாவில் நிறுவிய அரசுதான் பல்லின சமூகத்தாரையும் பாதுகாத்தது. இந்நம்பிக்கையின் நிழலில்தான் மதீனாச்சாசனத்திலும் யூத, கிறிஸ்தவர்களுக்கு முஹம்மது நபியவர்கள் பாதுகாப்பு வழங்கினர். இந்தப் பாதுகாப்பில் முழுமைப்படுத்தப்பட்ட இஸ்லாம் ஈருலகுக்குமே வழிகாட்டுகிறது. இந்த வழிகாட்டல்களிலிருந்து விலகாதிருக்க இறைதூதர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவோம். எமது ஆத்மீக நம்பிக்கைகளுக்குள் ஊடுருவமுனையும் தீயசக்திகளைத் தோற்கடிக்கவும் இறைதூதர்களின் வழிகாட்டல்களே வழிகோலும்.

**சுஐப் எம். காசிம்...**




## ஹஜ்ஜுப் பெருநாள் மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையட்டும்



எந்த இனத்தைச் சார்ந்த மனிதர்களாக இருந்தாலும், அவர்கள் மனதளவில் ஒன்றுபட்டு, துன்பத்திலும் இன்பத்திலும் ஒருவருக்கொருவர் பெருந்தன்மையையும் பொறுமையையும் பரப்ப வேண்டும் என்ற உன்னத நோக்கில் கொண்டாடப்படும் 'ஈதுல் அழ்ஹா' எனப்படும் தியாகப் பெருநாளை கொண்டாடும் அனைத்து இலங்கை வாழ் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, உலகம் முழுவதும் கடந்த காலங்களில் ஏற்பட்ட நீண்ட இக்கட்டான சூழ்நிலையிலும், மக்கா யாத்திரைக்கு சென்று நபிகள் நாயகம் அவர்களின் வாழ்வில் செய்த அளவற்ற தியாகங்களை நினைத்து ஒன்றாக இந்நாளை கொண்டாடுகிறீர்கள். உலகம் முழுவதிலுமிருந்து பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் யாத்திரீகர்கள் வருடாந்த ஹஜ் யாத்திரைக்காக மக்கா நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஒன்றுகூடுவது முழு உலக முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கின்றமை உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது. உங்கள் அனைவருக்கும் ஹஜ் பெருநாள் மகிழ்ச்சியானதாக அமையட்டும்.

## மக்கள் மத்தியில் சமாதானமும் ஐக்கியமும் தழைத்தோங்கட்டும்




அல்லாஹு தஆலா நம் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர துணை புரிவானாக என்று பிரார்த்தனை செய்வதாகக் குறிப்பிட்டுள்ள அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷைக் முப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி, பதில் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம்.எஸ்.எம். தாஸீம் ஆகியோர் கையெழுத்திட்டு விடுத்துள்ள ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில், நபி இப்றாஹீம் (அலை) அவர்களினதும் அவர்களது மனைவி மற்றும் குழந்தையினதும் (அலைஹிமுஸ்ஸலாம்) தியாகங்களை நினைவுபடுத்தும் முகமாக அல்லாஹுதஆலா இத்திருநாளை எமக்கு அருளியுள்ளான். அக்குடும்பத்தினரின் தியாகங்கள் முழு மனித சமூகத்திற்கும் சிறந்த முன்மாதிரியாகும். தியாகங்களின் ஊடாகவே வாழ்வில் வெற்றியடைய முடியுமென்பதை இஸ்லாம் இதனூடாகப் போதிக்கின்றது. ஏனெனில் தனிமனிதர்களின், குடும்பங்களின் மற்றும் சமூகங்களின் தியாகங்கள் மூலமே ஒரு நாடு வெற்றிகரமான எதிர்காலத்தை அடைய முடியும்.

இத்தினத்தில், அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றப் பின்வாங்காத தந்தை மற்றும் மகனின் தியாகத்தைப் பறைசாற்றும் உழ்ஹிய்யா மற்றும் ஏனைய அமல்களை நாம் இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப உரிய முறையில் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

அதேவேளை தியாகத் திருநாள் கற்றுத் தரும் பாடங்களான அல்லாஹ்வின் கட்டளைக்கு முழுமையாக அடிபணிதல், இறைநேசம், அர்ப்பணிப்பு, தியாகம், பொறுமை, தவக்குல், முன்மாதிரிமிக்க, சிறந்த பிள்ளை வளர்ப்பு போன்ற பண்புகளை எமது வாழ்விலும் கடைபிடித்து வாழ்வதோடு எமது கணவன், மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவுகளிடமும் இவ்வாறான உயர்ந்த பண்புகளை ஏற்படுத்தி ஈருலக வாழ்விலும் வெற்றிபெற முயற்சி செய்வோமாக. தகப்பலல்லாஹு மின்னா வமின்கும்! ஈத் முபாரக்!

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

## களியாட்டங்களை தவிர்த்து நல்லமல்களில் ஈடுபடுவோம்



இறைகட்டளைகளுக்கு அடிபணிந்து இன்றைய தினம் தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய உறவுகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என்று இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ் சேவையின் ஆலோசகரும் புரவலர் புத்தக பூங்கா ஸ்தாபகருமான புரவலர் ஹாசிம் உமர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நபி இப்றாஹீம் (அலை) அவர்களதும் அன்னாரது குடும்பத்தாரினதும் தியாகங்களை இத்தியாகத்திருநாள் எமக்கு நினைவூட்டுகிறது. இந்நிலையில் இந்நெருக்கடியான காலத்தில் நாட்டினதும் சமூகத்தினதும் நன்மைக்காக தன்னுடைய தனிப்பட்ட ஆசைகளை அர்ப்பணித்து மற்றவர்களுடைய தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. எனவே அதனை எமது வாழ்வில் கடைப்பிடித்து நடக்கவேண்டும்.

இதேவேளை சகோதர இனங்களோடு ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் நாம் நடந்து கொள்வதுடன் நாட்டின் சுபீட்சத்துக்காகவும் இன ஐக்கியத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் பிரார்த்தனை செய்யவேண்டும். இத்தியாகத் திருநாளில் நாம் வீண் களியாட்ட நிகழ்வுகளில் ஈடுபடாது நல்லமல்களில் ஈடுபடவேண்டும்.

இறைவன் எங்களது நற்கிரியைகளை பொருந்திக்கொள்வானாக!

'ஈத் முபாரக்'




# தொடரும் சீரற்ற காலநிலை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

### வாகனசாரதிகள் அவதானம்





(ஹற்றன் விசேட நிருபர்)

மத்திய மலை நாட்டில் கடந்த சில தினங்களாக சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல இடங்களில் மண்சரிவு அபாயநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நுவரெலியா மாவட்டத்தில் மண் மேடுகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதனால் சில இடங்களில் பொது போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடும் மழை காரணமாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. நடைபாதை வர்த்தகமும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். மழையுடன் பனிமூட்டமும் நிலவுவதால் வாகன சாரதிகளை எச்சரிக்கையுடன் இருக்குமாறு போக்குவரத்து பொலிஸார் எச்சரித்துள்ளனர். குறிப்பாக ஹற்றன் கொழும்பு பிரதான வீதி, கலுகல, பிட்டவல, நானுஓயா, கினிகத்தேனை,கடவல, வட்டவளை, தியகல, போன்ற வீதிகளிலும் அதிக பனிமூட்டம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் குடாஓயா, கொட்டகலை,தலவாக்கலை,சென்கிளையார்,நானுஓயா,ரதல்ல ஆகிய பகுதிகளில் மழையுடன் அடிக்கடி பனிமூட்டம் நிகழ்வதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென போக்குவரத்துப் பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# அஸ்வெசும நிவாரண திட்டத்தில் மோசடி தலவாக்கலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

தலவாக்கலை குறூப் நிருபர்



அஸ்வெசும நிவாரண கொடுப்பனவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து தலவாக்கலையில் நேற்று (28) எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

அஸ்வெசும நிவாரண கொடுப்பனவு விண்ணப்பத்தில் கோரப்பட்ட தகுதிகள் இருந்தும் இத்திட்டத்திற்கு விண்ணப்பித்த பலர் இத்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. இவ்வாறான போலி திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் மக்கள் அதிகம் பயன்பெறும் வகையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தாலே போதுமானது என மக்கள் இதன்போது தெரிவித்தனர். அரசாங்கத்தின் இவ்வேலைத்திட்டத்தினால் மக்கள் பாரிய ஏமாற்றமடைந்துள்ளதாகவும் கருத்து வெளியிட்டனர். பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் தலவாக்கலை பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

# எம்பிலிபிடிய கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

பலாங்கொடை தினகரன் நிருபர்

எம்பிலிபிடிய கல்வி வலயத்தில் 127 பாடசாலைகளில் சுமார் 1000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக எம்பிலிபிடிய கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ஜி.ஜி.அனுர அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை சுட்டிக்காட்டினார். ஆரம்ப பாடசாலைகளில் 99 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாக அவர் தெரிவித்தார். எம்பிலிபிடிய கல்வி வலயம் கொலன்ன,எம்பிலிபிடிய மற்றும் கொடகவெல கல்வி வலயங்களை உள்ளடக்கியுள்ளது.

கொலன்ன தேசியப் பாடசாலையில் அதிபர் உட்பட 38 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளதாக கல்விப் பணிப்பாளர் கூட்டத்தில் தெளிவுப்படுத்தினார். அதே சமயம் கொடகவெல ராகுல தேசியப் பாடசாலை பல வருடகாலமாக தகுதி வாய்ந்த அதிபர்கள் இன்றி காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

### வாகன உதிரிப்பாகங்களின்

# விலை குறைக்கப்பட்டால் முச்சக்கரவண்டி கட்டணங்களை குறைக்க தயார்

### இரத்தினபுரி மாவட்ட முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கபிரதிநிதிகள்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதை போன்று வாகன உதிரிப்பாகங்களின் விலைகளும் குறைக்கப்பட்டால் முச்சக்கரவண்டி கட்டணங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென இரத்தினபுரி மாவட்ட முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கபிரதிநிதிகளின் தலைவர் தெரிவித்தனர். இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமையால் முச்சக்கரவண்டி கட்டணங்களை குறைக்குமாறு பலரும் வேண்டுகின்றனர். ஆனால் முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் டயர் போன்றவற்றின் விலைகள் இன்னும் அதிகரித்தவாறே காணப்படுகின்றன. அவற்றின் விலைகளும் குறைக்கப்படல் வேண்டும். அவ்வாறு குறைக்கப்பட்டால் நாமும் கட்டணங்களை குறைப்போம். கட்டணங்கள் குறைக்கப்படும் போது மக்கள் அதிகமான பயணங்களை மேற்கொள்வர். இதனால் பொதுமக்களுக்கும் எங்களுக்கும் நன்மைகள் அதிகரிக்கும். எரிபொருள் தவிர்ந்த ஏனையவற்றின் விலைகளையும் குறைக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்தனர்.

# சிறுத்தையின் சடலம் மீட்பு



(தலவாக்கலை குறூப் நிருபர்)

ஹற்றன் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் நேற்றுமுன்தினம் (27) மாலை சிறுத்தையின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். சிறுத்தையின் மரணத்துக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. தோட்டத் தொழிலாளி ஒருவர் வழங்கிய தொலைபேசி அழைப்பின் பேரில், பொலிஸாரும் நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது தேயிலை செடிகளுக்கு நடுவில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறுத்தை உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சிறுத்தையின் சடலத்தை ரந்தெனிகல கால்நடை வைத்திய பிரிவுக்கு கொண்டு செல்ல நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் டயாலிசிஸ் உபகரணங்கள் தட்டுப்பாடு



மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கு அளிக்கப்படும் டயாலிசிஸ் சிகிச்சை நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறுநீரக நோயாளிகளின் குருதியை வடிகட்ட, நோயாளி மற்றும் வடிகட்டும் இயந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள, "டயாலைசர் கிட்' என்ற கருவிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அதன் பணியை இடைநிறுத்த வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் ஒவ்வொரு வாரமும் 200 சிறுநீரக நோயாளிகள் டயாலிசிஸ் சிகிச்சை செய்து வருகின்றனர். தற்போது அந்த நோயாளிகள் அனைவரின் உயிரும் தற்போது ஆபத்தில் உள்ளது.

இந்த உபகரணங்களை இலங்கைக்கு வழங்கும் நிறுவனங்களின் விநியோகம் தடைப்படுவதால் பல வைத்தியசாலைகளில் உபகரணங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் இருக்கும் "டயாலிசர் கிட்" எண்ணிக்கை ஒரு வாரத்திற்கு மட்டுமே போதுமானது என தெரிவிக்கின்றன.

# அனைத்து மக்களிடமும் அமைதி சமாதானம் மேலோங்க பிரார்த்திப்போம்



நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் அன்று செய்த மாபெரும் தியாகத்தை நினைவு கூருகின்ற இத் தருணத்தில் அவர்களின் தியாகம் சமூகத்தின் ஒவ்வொரு முஸ்லிமிடத்தி லும் பிரதிபலிக்க வேண்டு மென பிரார்த்தனை செய் கின்றேன் என்று முஸ்லிம் சமய கலாசார திணைக் கள பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைஸல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இஸ்லாத்தின் கடமைகளில் ஐந்தா வது கடமையான ஹஜ் கடமையானது எவ்வித சாதி, குல, கோத்திர வேறு பாடுகளுமின்றி அனைவரும் மனிதர் களே எனும் ஒற்றுமை கோஷத்தினை எமக்கு கற்றுத் தருகின்றது. இப்புனித ஹஜ் திருநாளில் இலங்கை வாழ் அனைத்து இன மக்கள் மத்தியி லும் சாந்தி, சமாதானம், ஒற்றுமை மற்றும் சகிப்புத் தன்மை மேலோங்கவும் அதன்படி எல்லோரும் வாழவும் அல்லாஹ்விடம் இந்நன்னாளில் பிரார்த் திப்போம்.

அத்தோடு இன்று ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்ற முஸ்லிம்களுக்கும் குறிப்பாக இலங்கை வாழ் முஸ்லிம் கள் அனைவருக்கும் எனது இனிய ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களை தெரி வித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகி றேன் என்றுள்ளார்.

# இப்றாஹீம் நபியின் படிப்பினைகளை நடைமுறைப்படுத்த உறுதிபூணுவோம்



நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தினர் அல்லாஹ்வின் கட்டளைக் கிணங்க செய்த தியாகங் களை உணர்த்தும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் நமக்கு பல படிப்பினைகளை கற்றுத் தருகின்றது. இதனை எமது வாழ்வில் நடைமுறைப்படுத் துவதற்கு நாம் அனைவரும் இன்றைய ஈதுல் அழ்ஹா தினத்தில் திடசங்கற்பம் பூணுவோமென மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜெமீல் தெரிவித் துள்ளார். அவர் விடுத்துள்ள ஹஜ் பெருநாள் செய்தியில், எமது தாய் நாட்டில் ஒற்று மையோடும் நிம்மதியோ டும் வாழ்வதற்கும் வல்ல இறைவன் அனைவரையும் பாதுகாத்து, அனைவரும் வாழும் அமைதியான சூழல் எமது இலங்கை தேசத்தில் உருவாக வேண்டுமெனவும் இறை வனிடம் பிரார்த்திப்போமாக என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 11 கோடி ரூபா பெறுமதியான ...

திணைக்களம் தெரிவித்தது. சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போது, 5 கிலோ 650 கிராம் தங்கம் மீட்கப்பட்டதாகவும், சுங்கத் திணைக்களம் தெரிவித்தது.

சுங்கத் திணைக்களத்துக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் சுங்கப் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோத னையின் போது, சென்னை நகருக்கு புறப்படவிருந்த விமானத்துக்காக காத் திருந்த பயணிகளிடமிருந்தே தங்கம் மீட்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மொத்த பெறுமதி 11 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக, சுங்கத் திணைக்களம் மேலும் தெரிவித் தது.

## தமிழரது பிரச்சினைகளை...

பிரச்சினைகளை தீர்க்குமென்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளதாக, தமிழக பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் கே.அண்ணாமலை தெரி வித்துள்ளார். பிரிட்டன் பாராளுமன் றத்திலுள்ள ஹவுஸ் ஓஃப் லோட்ஸ் அரங்கத்தில் பிரிட்டன் தமிழ்ச் சங்கம், சங்கமம் யுகே ஆகியவை சார்பாக நேற்று முன்தினம் (27) நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற் றிய போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

## முஸ்லிம்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த...

வேண்டுமென்று வாழ்த்துவ தாக, சுற்றாடல் அமைச்சர், பொறி யியலாளர் நஸீர் அஹமட் தெரி வித்தார். பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித் தாவது, "ஹஜ் கடமையானது நபி இப்றாஹீம் (அலை), இஸ்மாயில் (அலை) மற்றும் அன்னை ஹாஜரா (அலை) ஆகியோரின் தியாக வர லாற்றை உணர்த்தி நிற்கின்றது. அதேநேரம், உலகெங்கும் வாழும் முஸ்லிம்களில் சுமார் 25 இலட்சத் துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள், உலகின் நாலாபுறங்களிலிருந்தும் மக்காவுக்கு வந்து ஹஜ்ஜை நிறை வேற்றி ஐக்கியத்தையும் சகோதரத் துவத்தையும் வெளிக்காட்டுவதும் எமக்கு ஒரு வாழ்க்கைப் பாடமாக அமைகிறது. எனவே, இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஏனைய சக சமூகங்களுடன் பரஸ்பர புரிந்து ணர்வையும் நல்லெண்ணத்தையும் வளர்த்து, ஐக்கியத்தை கட்டியெ ழுப்புவதற்கும் இங்கு வாழும் முஸ்லிம்கள் அரசியல், பிரதேச வேறுபாடுகளை மறந்து ஒரே குடும்பத்தினராக அணிதிரண்டு இந்நாட்டின் சுபீட்சத்துக்குமாக இந்நன்நாளில் இறைவனை பிரார்த் திப்போம்" என்றார்.

## மத்திய வங்கி ஒழுங்குபடுத்தலின் கீழ்

# சமுர்த்தி வங்கி கட்டமைப்பை கொண்டுவர அரசு தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமுர்த்தி வங்கிக் கட்ட மைப்பை மத்திய வங்கி யினுடைய ஒழுங்குபடுத் தலின் கீழ் செயற்படும் வங்கித் தொகுதியாக செயற்படுத்துவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சட்ட நியதிகள் மற்றும் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் தற்போது மத்திய வங்கி, சமுர்த்தி வங்கி வலையமைப்பு மற்றும் சமுர்த்தி திணைக்களம் ஆகியவற் றுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்ப லாபிட்டிய தெரிவித்தார்.

இதேவேளை, 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தினூடாக குறைந்த வருமானம் பெறும் அத்தகைய குடும்பங்களுக்கோ அல்லது அரசாங்கத்தின் நிவாரணங் களை பெற்றுக்கொள்ள தகுதி உள்ள வர்களுக்கோ அநீதி ஏற்படாதெனவும், அவர் தெரிவித்தார்.

இரண்டு, மூன்று வருடங்களில் குறைந்த வருமானம் பெறும் பயனாளி களை முன்னேற்றி அவர்களை சுயாதீன மாக செயற்படுபவர்களாக சமூகத்தில் உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்க மெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## நீதிமன்ற உத்தரவு புறக்கணிப்பு...

கால அவகாசம் வழங்கியுள்ளது. வில்பத்து வனப்பகுதிக்கு அருகாமை யிலுள்ள மறிச்சுக்கட்டி மற்றும் கரடிக் குழி வனப்பகுதியில் சுத்திகரிப்பு செய் துள்ள சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனு சம்பந்த மாக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவை நடைமுறைப் படுத்த தவறியுள்ளதாக அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந் தது. மேற்படி மனு மீதான விசாரணை நேற்றையதினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸ் ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதிபதி ஏ.மரிக்கார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் பிரதிவா தியான முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் நீதிமன்றத்தில் ஆஜராகியி ருந்தார். அதன்போது, அவரது சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதி பதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நீதி மன்றத்தில் விடயங்களை முன்வைத் தார்.

அதன்போது, மேற்படி மனுவுடன் தொடர்புடைய எதிர்ப்பை தாக்கல் செய்வதற்கு காலஅவசாகம் பெற்றுத் தருமாறு அவர், நீதிபதிகள் குழாமி டம் வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டுள்ள நீதிமன்றம், குறித்த எதிர்ப்பை சமர்ப் பிப்பதற்கு காலஅவகாசம் வழங்கியுள் ளதுடன், எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதிக்குள் அதனை தாக்கல் செய்ய வேண்டுமெனவும் முன்னாள் அமைச் சர் ரிஷாத் பதியுதீனுக்கு உத்தரவிட் டுள்ளது.

## வேறுபாடுகளை களைந்து...

எமக்கு வழங்கும் முக்கிய செய்தி யாகுமென, பிரதமர் தினேஷ் குண வர்த்தன தனது வாழ்த்துச் செய்தி யில் தெரிவித்தார்.

இந்த ஆன்மிக பெறுமானங்களால் இலங்கை சமூகத்தை மென்மே லும் வளப்படுத்தி, குறுகிய வேறு பாடுகளை களைந்து அனைவரும் நட்புறவுடனும் சகோதரத்துவத்து டனும் வாழ இந்த புனித ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் உறுதி பூணுவ மெனவும், பிரதமர் தினேஷ் குண வர்த்தன தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்தார்.

# கனடா துணை அமைச்சர் பதவியில் இலங்கை பெண்

## உள்விவகாரங்களுக்கான துணை அமைச்சரானார்



இலங்கையைச் சேர்ந்த துஷாரா வில்லியம்ஸ் என் பவர் கனடாவில் அரச உள்விவகாரங்களுக்கான துணை அமைச்சராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, கனேடிய பொதுச் சேவையில் பங்கேற்கும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த முதல் துணை அமைச்சர் துஷாரா வில் லியம்ஸ் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் பிறந்த துஷாரா வில்லி யம்ஸ், தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கொழும்பு மகளிர் கல்லூரியில் கற்றார்.

இதன் பின்னர் 1991ஆம் ஆண்டு அவர் கனடாவுக்கு குடிபெயர்ந் தார். இலங்கையிலுள்ள கொள்கை ஆய்வுகள் நிறு வனத்தில் சிறிது காலம் துஷாரா வில்லி யம்ஸ் பணியாற்றினார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

## ஜுலை 01 சனிக்கிழமை...

மணிக்கு பாராளுமன்றம் கூட வுள்ளதாக பாராளுமன்ற உறுப்பி னர்கள் அனைவருக்கும் பாராளு மன்ற செயலாளர் நாயகம் குஷாணி ரோஹணதீர கடிதம் மூலம் அறி வித்துள்ளார்.

முதலாம் திகதி பாராளுமன்றம் கூடவுள்ளமை தொடர்பான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்த்தனவால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி விடயம் தொடர்பாக விரிவாக கலந்துரை யாடும் வகையில் விசேட அமைச்ச ரவை நேற்றையதினம் கூடியது.

## 40 ஆண்டுகளுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

சபையானது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு அறி வித்துள்ளது.

வேகந்த வீடமைப்புத்திட்டம், பம் பலப்பிட்டி வீடமைப்புத்திட்டம், வேல்ஸ் குமார மாவத்தை வீடமைப் புத்திட்டம், சிறிதம்ம மாவத்தை வீடமைப்புத்திட்டம், கம்கருபுர வீட மைப்புத்திட்டம், மாளிகாவத்தை வீடமைப்புத்திட்டங்கள், மிகிந்து மாவத்தை வீடமைப்புத்திட்டம் ஆகி யவற்றில் சுமார் 869 வீடுகளும் 619 கடைகளும் பாதுகாப்பற்ற ஆபத்தான நிலையிலுள்ளதாக அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

நான்கு கட்டிடங்களைக் கொண்ட வேகந்த வீடமைப்புத் திட்டம் 1981 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகாரசபையால் கட்டப்பட் டது. இது 114 வீடுகளைக் கொண்டுள் ளது. தற்போதுள்ள அபாய நிலையைக் கருத்தில் கொண்டு அந்த வீடுகளில் வசிப்பவர்களுக்கு ஹேனமுல்ல அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு இணங்காத சுமார் 65 குடும்பங்கள் இன் னமும் அந்த வீட்டுத் தொகுதியிலேயே வாழ்ந்து வருகின்றனர். அந்த 65 குடும் பங்களை உடனடியாக வெளியேற்றும் வகையில் அரச மற்றும் தனியார் பங் காளித்துவத்தின் கீழ் வீடமைப்பை மீள் அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி வீடமைப்புத் திட்டம், வேல்ஸ் குமார மாவத்தை வீட மைப்புத் திட்டம், சிறிதம்ம மாவத்தை வீடமைப்புத் திட்டம், கம்கருபுர அடுக்குமாடி குடியிருப்பு, மிஹிந்துபுர வீடமைப்புத் திட்டம் மற்றும் மாளிகா வத்தை வீடமைப்புத் திட்டம் போன் றவற்றில் உள்ள பல கட்டிடங்களுக்கு இதேபோன்ற தொழில்நுட்ப அறிக்கை யைப் பெறுவதற்கு ஏற்கனவே திட்டமி டப்பட்டுள்ளது.

## சீனாவிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

சீனாவின் சீமான் விமான நிலை யத்திலிருந்து சேவையை ஆரம் பிக்கும் 'எயார் சைனா' விமான சேவை நிறுவனத்துக்கு சொந்த மான CA 425 இலக்க விமானம் பிரதி வாரமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 8.55 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையு மெனவும், அவர் தெரிவித்தார். அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்படும் அந்த விமானம் பிரதி வாரமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கி ழமைகளில் இரவு 10.15 மணிக்கு சீனாவின் ஷுவான் விமான நிலையம் நோக்கி பயணிக்கவுள்ள தாகவும், அவர் தெரிவித்தார்.

## 'அஸ்வெசும'... (03 ஆம் பக்கத் தொடர்)

கொழும்பில் அமைச்சு அலுவ லகத்தில் நேற்று (28) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப் பனவுக்கான பெயர்ப்பட்டியலை தயாரிக்கும் போது, பெருந்தோட்ட மக்கள் புறக்கணிக்கப்படக் கூடா தென்ற கோரிக்கை எம்மால் முன் வைக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் நிதி இராஜாங்க அமைச் சர் செஹான் சேமசிங்கவுடனும் இது தொடர்பாக பேச்சு நடத்தி, தீர்வொன்றை பெற்றிருந்தோம். ஏனெனில், பெருந்தோட்ட தொழி லாளர்களுக்கு EPF, ETF பிடிபடு வதால், சமுர்த்தி கொடுப்பனவின் போது, கடந்த காலங்களில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இம்முறை அந்த குறைபாடு நிவர்த்தி செய்யப் பட்டது.

'அஸ்வெசும' திட்டத்தில் புறக் கணிப்பு இடம்பெற்றுள்ளதாகக் கூறி தலவாக்கலையில் போராட் டம் நடத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி உள்ளதாக எண்ணத் தோன்றுகிறது. போலியான முறையில் தகவல்களும் பரப்பட்டு வருகின்றன. இதனை எம்மால் ஏற்க முடியாது.

தமது பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டால் மேன்முறையீட்டு உதவியை நாடலாம். தோட்டங்க ளிலிருந்து 52 வீதமானோர் இத்திட் டத்துக்கு விண்ணப்பித்திருந்தனர். பெயர் இல்லாவிட்டால், எமக்கு தெரியப்படுத்துங்கள். இல்லை யேல், நீங்களாகவே மேன்முறையீடு செய்யலாம். நாமும் தகவல்களை திரட்டி வருகின்றோம்" என்றார்.

## விசேட... (03 ஆம் பக்கத் தொடர்)

கம்பஹா மாவட்ட சபை உறுப்பி னர் அஜித் மான்னப்பெரும தெரிவித் தார். தற்போதைய சட்டத்தின்படி, எந்தவொரு அரசாங்கப் பதிவு செய் யப்பட்ட வைத்தியரிடமும் உடல் தகுதி சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அதற்கான ஏற்பாடு களை மேற்கொள்ள போக்குவரத்து ஆணையாளர் நாயகத்துக்கு அதிகா ரம் இருப்பதாகவும் அது தொடர் பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஜனாதிபதிக்கு வழங்கப் படுமெனவும், தலைவர் தெரிவித் தார்.

## காரில் சென்றவர்கள் மீது... (03 ஆம் பக்கத் தொடர்)

கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக் கிச் சூட்டை நடத்தியதாக பொலி ஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

'இடியன்' எனும் உள்ளூரில் தயா ரிக்கப்பட்ட துப்பாக்கியால் சூடு நடத்தப்பட்டிருக்கலாமெனவும், கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்த னர். துப்பாக்கிச் சூட்டை நடத்திய இருவரையும் கைது செய்வதற்கான விசாரணையை கிளிநொச்சி தலை மையக பொலிஸார் முன்னெடுத் துள்ளனர். இரண்டு வன்முறை குழுக்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு இந்தச் சம்பவத்துக்கு காரணமாக இருக்கலாமென, பொது மக்கள் தெரிவித்தனர்.

## IMF இன் உதவித்திட்டம் இந்தியாவின்...

டொலர்களை வழங்கி, இலங் கைக்கு இந்தியா ஆதரவளித்தது. இந்தியா அந்த ஆதரவை வழங் கவில்லையென்றால், இலங்கை மிகவும் கடினமான சூழ்நிலைக்கு சென்றிருக்குமெனவும், உயர்ஸ்தா னிகர் மிலிந்த மொரகொட தெரி வித்தார். இதில் எந்தக் கேள்வியும் இல்லை. சர்வதேச நாணய நிதிய பிணை எடுப்பு இந்தியாவால் மட்டுமே சாத்தியமானதெனவும், அவர் தெரிவித்தார். இதேவேளை, அடுத்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் தொடர்பாக அவர் சூசக மாக தெரிவித்த போதும், விபரங் களை வெளியிடவில்லை.

சீனாவுடனான இலங்கையின் உற வுகள் மற்றும் கடந்தாண்டு நெருக்க டிக்கு சிலர் குற்றஞ்சாட்டிய 'கடன் பொறி' தொடர்பாகவும் உயர்ஸ்தா னிகர் மிலிந்த மொரகொட கருத்து வெளியிட்டார். இலங்கையின் 'கடன் பொறி' என்பது இலங்கை யின் செயற்பாட்டால் ஏற்பட்டதெ னவும் அதற்கு வேறெவரும் காரண மல்லவெனவும், உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

## மனித குலத்தின் உயரிய...

ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஈதுல் அழ்ஹா என்ற ஹஜ்ஜூப் பெருநாள் கொண்டாடப்படும் இச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் உட்பட ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர் களுக்கும் எனது நல்வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமிதமடைகி றேன் எனத் தெரிவித்தார்.

ஹஜ்ஜுப் பெருநாளையிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது வாழ்த் துச் செய்தியில் மேலும் தெரிவித்த போது, "இஸ்லாத்தின் ஐந்து தூண்க ளான நம்பிக்கை, நோன்பு, ஏழைகள் மீது இரக்கம் காட்டுதல், பிரார்த் தனை மற்றும் புனித யாத்திரை ஆகியவை அல்லாஹ்வுக்கும் மனித குலத்துக்கும் இடையிலான உன்னத உறவுகளை நிரூபிக்கக்கூடியனவாக உள்ளன. இறைவனுடனான உறவை ஒன்றிணைப்பதில் இந்த ஐந்து கட மைகளும் முக்கிய பங்காற்றுகின் றன. அந்த வகையில், ஹஜ்ஜும் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். நெருக்கடியான உலகில் மனிதர்க ளுக்கிடையேயான பிணைப்பை ஹஜ்ஜூப் பண்டிகை எடுத்துக்காட் டுகின்றது.

உலகம் முழுவதிலுமிருந்து வரும் இஸ்லாமிய யாத்திரிகர்கள் இனம் அல்லது குறிப்பிட்ட சூழ் நிலைகளை பொருட்படுத்தாமல் இறைவனை போற்றக்கூடிய இப் பண்டிகை, ஏனைய மதங்களை பின் பற்றுபவர்களுடன் அமைதியாகவும் இணக்கமாகவும் வாழ்வதற்கான ஒரு பாடமாகவும் விளங்குவதாக நான் நம்புகின்றேன்.

அனைத்து முஸ்லிம்களுக்கும் குறிப்பாக, மனிதர்களிடையே சமத் துவம் என்ற செய்தியுடன் புனித நகரமான மக்காவுக்கு ஹஜ் யாத்தி ரையில் பங்கேற்றுள்ளவர்களுக்கும் இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் சமூகத்தினருக்கும் எனது ஈதுல் அல்ஹா நல்வாழ்த்து களை தெரிவிக்கின்றேன்" என்றார்.

## சகோதரத்துவம், நற்பண்பு...

பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தாவது,

"ஹஜ்ஜுப் பெருநாள் என்பது இஸ் லாமியர்களுக்கு மிகவும் முக்கிய பண்டிகையாகும். நபிகள் நாயகத்தின் போதனைகளின்படி, முஸ்லிம்கள் ஒற்றுமையாக ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

இந்தப் பெருநாளை மனிதநே யத்துக்கும் இறைவனுக்கும் இடை யிலான அற்புதமான பிணைப்பை பிரதிபலிக்கும் பெருநாளாகக் கருத லாம். ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கிய நோக்கம் சமூக இடைவெளி மற்றும் பல்வேறு வேறுபாடுகளை குறைத்து சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நற்பண்பு சிந்தனைகளை உருவாக்குவ தாகும்.

சவூதி அரேபியாவின் மக்காவில் ஆண்டு தோறும் நடைபெறும் ஹஜ் புனித பயணம், இப்ராஹிம் நபி மற்றும் அவரது மகன் இஸ்மாயில் ஆகியோ ரின் தியாகத்தை குறிக்கும் நிகழ்வாக ஹஜ் கருதப்படுகிறது.

உலகம் முழுவதுமுள்ள இஸ்லா மிய மக்கள் எந்தவித வேறுபாடு மின்றி ஒன்றுகூடி உலக அமைதிக் கான இறைவனை வழிபடுகின்ற ஒரு சர்வதேச மாநாடாகவும் ஹஜ் புனித பயணத்தைக் கருதலாம். இஸ்லாத் தின் ஐந்து பெரிய கடமைகளில் ஐந்தா வது கடமை ஹஜ் செய்ய வேண்டும். இஸ்லாமியர்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறை மக்காவுக்குச் சென்று, ஹஜ் செய்ய வேண்டும் என்பது இஸ்லாமி யர்களின் பிரார்த்தனையாகும். அந்தப் பிரார்த்தனை நிறைவேற நானும் பிரார்த் திக்கின்றேன்.

ஹஜ்ஜின் நோக்கங்கள் நனவாகி, இனிய ஈதுல் அல்ஹா பெருநாளாக அமையட்டும். மகிழ்ச்சியின்மை மற்றும் இருள் சூழ்ந்த நிலைமை முடி வுக்கு வரட்டும். மகிழ்ச்சியும் சௌபாக் கியமும் உருவாகட்டும்.

சமூக விழுமியங்களை வலுப்ப டுத்தவும் நல்லிணக்கத்தை கட்டியெ ழுப்பவும் நற்செயல்களை முன்னு தாரணமாகவும் ஆக்கிய ஆன்மிகப் பண்டிகையான ஹஜ் பங்களிப்புச் செய்கின்றது. புனித திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை தத்துவத்தை பின்பற்றும் இஸ்லாமியர் களாகிய உங்கள் அனைவருக்கும் இந்த ஹஜ் பெருநாள் ஆன்மிக முன்னேற்றத் தின் மகத்தான நாளாக அமையட்டும்" என்றார்.

## வரி அதிகரிப்போ, வரிக்கொள்கையில்...

சுமைகளை ஏற்படுத்திய 80 வீதமான மறைமுக வரி மற்றும் 20 வீத நேரடி வரி வருமானம், அரசாங்கம் நடைமு றைப்படுத்திய சிறந்த சவால்மிக்க நட வடிக்கையால் மாற்றமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

80 வீத மறைமுக வரியை 69.5 வீதமாகவும் நேரடி வரி 20 வீதத்தை 30.5 வீதமாகவும் மாற்றம் செய்தமை தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்ட கொள்கை ரீதியான தீர்மானத்தை அர சாங்கத்துக்கு கிடைத்த வெற்றியாகக் கொள்ள முடியுமெனவும், அவர் தெரி வித்தார்.

விசேட ஊடக சந்திப்பில் அது தொடர்பாக மேலும் தெரிவித்த இரா ஜாங்க அமைச்சர்,

கடந்த காலங்களில் நாடு எதிர் கொண்ட பாரிய சவால்கள் அரசாங்கத் துக்கான வருமானம் குறைவடைவ தற்கு காரணமாயின. அதேபோன்று, அரசாங்கத்தின் செலவினங்களும் அதி கரித்தன.

அதனை சமப்படுத்தும் வகையில் மக்களிடமிருந்து வரியை பெற்றுக் கொள்வதற்கான நிலைமை காணப்ப டவில்லை. அதனால், அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டது.

வரி செலுத்தக்கூடியவர்களிடமி ருந்து வரியை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது டன், அதன் பிரதி பலனாக 2022ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் 7.3 வீதமாக இருந்த வரி வருமானத்தை இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 15.8 வீதமாக அதிகரிக்க முடிந்துள்ளது.

அரசாங்கத்தின் வரி வருமானத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளில் முடிந்தளவு வரி அறவீட்டை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அந்த வகையில், தற்போது சுமார் மூன்று இலட்சம் வருமான வரி கோவைகளின் எண்ணிக்கையை 10 இலட்சம் கோவைகளாக அதிகரிக்க முடிந்துள்ளது.

இதன் மூலம் அரசாங்கம் அதன் வரி கட்டமைப்பை விரிவுபடுத்துவதுடன், அதனூடாக வருமானத்தை அதிகரித் துக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள் ளது.

இது வரி செலுத்தக்கூடிய மக்களி டையே இரண்டு விதமான அழுத்தங் களை ஏற்படுத்தும்.

அதிகரித்துச் செல்லும் பண வீக்கத் துக்கிணங்க பொருட்களை கொள்வனவு செய்யும் போது, அதிக விலைகளை வழங்க நேரிடும்.

அதேபோன்று வங்கிகளின் வட்டி வீதம் குறைவடைதல் மற்றும் வரி வீதம் அதிரித்தல் இடம்பெறும் போது தமது வருமானத்தின் ஒரு பகுதியை அதற்காக மக்கள் செலுத்த நேரிடும்.

பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர் பாக நாம் அறிந்துள்ளோம்.

எனினும், நாட்டை சவால் நிலையி லிருந்து கட்டியெழுப்புவதற்கு வேறு மாற்று வழி கிடையாது. அதனால் தான் வரிக் கட்டமைப்பை விரிவுபடுத்தி வரி வீதத்தை அதிகரிக்க நேர்ந்தது. எனினும், இந்த வருடத்தில் அவ்வா றான எந்த நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட மாட்டாதெனவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

## மக்களை சிரமத்திலிருந்து...

அப்பால், முன்வந்து அதற்கு தீர்வு காணும் மனிதாபிமான பணியில் ஈடு படுவதன் முக்கியத்துவத்தையும் திருப் தியையும் ஹஜ்ஜூப் பண்டிகை பிரதி பலிக்கின்றதென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹஜ்ஜூப் பெருநாள் வாழ்த்துச் செய் தியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தா வது,

"அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தின் அடையாளமாக நபி இப்ராஹிம், அவரது மகன் நபி இஸ்மாயில் மற்றும் அன்னை ஹாஜரா ஆகியோர் கருதப் படுகின்றனர். பல நூற்றாண்டுகளாக அவர்கள் செய்த தியாகங்களுக்கு நன்றி யின் வெளிப்பாடாக முழு உலக மக்க ளாலும் போற்றப்படுகின்றனர்.

அண்மைக்காலங்களில் இலங்கை இவ்வாறானதொரு கடினமான சூழ் நிலைக்கு முகங்கொடுத்தது, அந்தக் கஷ்டங்களைச் சமாளித்து, நாட்டை தற்போதைய நிலைக்கு கொண்டுவ ருவதற்கு மக்களின் தியாகம், அர்ப்ப ணிப்பு மற்றும் பொறுமை ஆகியவை மிகவும் சாதகமான காரணங்களாக அமைந்தன. நீங்கள் செய்த தியா கத்தை நினைவுகூர்வதற்கும் கடந்த வரலாற்றுகால முக்கியமான தரு ணத்தை நினைவுபடுத்துவதற்கும் ஹஜ்ஜூப் பண்டிகையை மிகவும் பொருத்தமான சந்தர்ப்பமாக நான் கரு துகிறேன்.

அடுத்த ஹஜ்ஜூப் பண்டிகையின் போது, பொருளாதார மற்றும் சமூக சிக்கல்களிலிருந்து முழுமையாக விடுபட அனைவரின் பங்களிப்பும் பங்கேற்பும் மிகவும் முக்கியமானது. பிராந்திய மற்றும் உலகளாவிய இலக் குகளை அடைவதற்கான பொதுவான நோக்கத்தில் கைகோர்க்க ஹஜ்ஜூப் பண்டிகையின் போது உங்களை அழைக்கிறேன். பெரியவர்களாகிய நாம் அனுபவிக்கும் இன்னல்களை வருங்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லாமல், அவர்களை நிலையான மகிழ்ச்சியுடன் கூடிய பூகோள சமூகத் தின் பெருமை மிக்க மக்களாக உயர்த் துவதன் முக்கியத்துவத்தை முதியோர், இளையோரென அனைவருக்கும் இந்த அற்புதமான ஹஜ்ஜூப் பெரு நாளில் நான் நினைவூட்டுகிறேன். எதிர்வரும் ஹஜ்ஜூப் பெருநாள், இலங்கை முஸ்லிம் சகோதர, சகோத ரிகளுக்கும் உலகளாவிய முஸ்லிம்க ளுக்கும் மகிழ்ச்சியான பண்டிகையாக அமையப் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

# தியாகத்தின் மகத்துவத்தை உணர்த்தும் ஹஜ் பெருநாள்

## சுப்பையா ஆனந்தகுமார் பெருநாள் வாழ்த்து



முஸ்லிம்களின் தியாகப் பெருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளை இன்று உவகையுடன் முஸ்லிம் மக்கள் கொண்டாடுகின்றனர்.

'ஈதுல் அழ்ஹா' எனப்படும் தியாகப் பெருநாள் இறைவனுக்காக மனிதன் செய்த மிகப்பெரும் தியாகத்தை நினைவுபடுத்திக் கொண்டாடுவதாகும்.

இந்நன்னாளில் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இஸ்லாத்தின் ஐந்தாவது கடைமை 'ஹஜ்' கடமையாகும். வாழ்வில் ஒரு முறையாவது அவசியம் மேற்கொள்ள வேண்டிய புனிதப் பயணமாக இது அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்புனித பயணத்தில் பங்கேற்காதவர்கள், உலகெங்கும் அவரவர் வாழுமிடங்களில் இதனை ஹஜ் பெருநாளாக கொண்டாடுகிறார்கள்.

ஹஜ் பெருநாள் உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்களிடையே பரஸ்பரப் புரிதல், அன்பு மற்றும் நற்கிரியைகளைப் பிரதிபலிக்கும் ஓர் ஆன்மீகத் திருநாளாகும். ஹஜ் திருநாளாம் பக்ரீத் பெருநாள் கொண்டாடப்படும் இவ்வேளையில் சகோதரத்துவமும், சமாதானமும் பெருகட்டும். உலகெங்கிலும் உள்ள தமது இஸ்லாமிய சகோதரர்களுடன் இணைந்து புனித ஈதுல் அல்ஹா ஹஜ் பெருநாளை கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு அனைத்து நன்மைகளும் கிட்டட்டும் என்றும் அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# இஸ்லாமிய சந்ததிகள் உருவாக அடித்தளமிட்ட இறைத்தூதர் இப்ராஹீம்



இஸ்லாமியச் சிந்தனைகளின் தோற்றுவாயாக விளங்கும் இறைதூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகமும் அர்ப்பணிப்புகளும் சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சல்களை அளிக்கக்கூடியனவாக உள்ளதாக, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம். எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, ஏகத்துவ மார்க்கத்தை எடுத்தியம்பிய இப்ராஹீம்(அலை), சகல சமூகங்களையும் நல்வழிப்படுத்த உழைத்த உத்தமராவார். சிலை வணக்கத்தில் மூழ்கியிருந்த மக்களுக்கு ஏகத்துவ வழிகாட்டல்களை எடுத்துரைத்து சொர்க்க வாசல்களைத் திறந்தவரும் இவரே! வழி கேடர்களின் வம்புகளை மிகப்பெரிய பொறுமையாலும், அல்லாஹ்வின் உதவியாலும் சகித்துக் கொண்ட இவர், "கலீலுல்லாஹ்" (அல்லாஹ்வின் நண்பன்) என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுக்கொண்டார்.

தள்ளாத வயதில் தனக்கு கிடைத்த புதல்வனை அல்லாஹ்வுக்காக அறுத்து பலியிடத் துணிந்த அவரது இறை விசுவாசமும், தியாகமுமே, இஸ்லாத்தின் இறுதிக்கடமையானது. சிறந்த நாகரீகத்துக்கும், மனித மோட்சத்துக்கும் உழைத்த இறைதூதர் இப்ராஹீம் (அலை) அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். இதேபோல், அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி, புனித ஹஜ்ஜுக்காக அவனின் இல்லமான கஃபாவில் கூடியுள்ள சகல முஸ்லிம்களதும் எண்ணங்களை அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும். ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடி மகிழும் அனைத்து இஸ்லாமியச் சகோதரர்களுக்கும் நல் வாழ்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

# அறிவித்தல்

## மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

பிரதிப் பயிற்றுனர் அனுமதிப் பத்திரத்தை (புத்தகம்) புதுப்பிக்கும் முகமாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து சாரதி பயிற்றுவிப்பாளர்களும் தனது விபரங்கள் அடங்கிய சகல ஆவணங்களையும் 2023.07.31ஆந் திகதிக்கு முன்னராக தாங்கள் சேவை செய்யும் மாவட்டத்தில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான பரிசோதகரிடம் சமர்ப்பிக்குமாறு தாழ்மையுடன் வேண்டப்படுகின்றீர்கள். மேற்குறித்த திகதியன்று சமர்ப்பிக்கப்படாத அனைத்து சாரதி பயிற்றுனர் அனுமதிப் பத்திரங்களும் கறுப்புப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**நிசாந்த அனுருத்த வீரசிங்க**
**மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம்**
**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்**
**(கைத்தொழில்கள் அமைச்சு)**

## உத்தேசிக்கப்பட்டுள்ள எல்லைச் சுவர் மற்றும் காணி சீராக்கல் வடிவமைப்பு

**No.: SLITA/GB/01/2023**

1. உத்தேசிக்கப்பட்டுள்ள எல்லைச் சுவர் மற்றும் காணி சீராக்கல் வடிவமைப்பிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதியை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருப்பதுடன் விலைமனு மதிப்பீட்டுக் காலப்பகுதியில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரரானவர் CIDA இல் சி-6 அல்லது மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2023 ஜூன் 28 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 11 ஆம் திகதியன்று வரையும் விடுமுறைகள் நீங்கலான வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவன செயற்பாட்டு பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. 4,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் (வன் பிரதிகள் வழங்கப்படமாட்டாது) **www.slita.lk** என்ற எமது இணையதளத்திலிருந்து விடுமுறைகள் நீங்கலாக வார நாட்களில் 2023 ஜூன் 28 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 11 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பெற்றுக் கொள்ளப்படலாம். (குறிப்பு: பணவரவுத்துண்டானது விலைமனு ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்)
6. விலைமனுக்கள் ஒப்படைக்கப்பட்டு கீழேயுள்ள முகவரியிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| விலைமனுப் பிணை | மூடும் திகதி மற்றும் நேரம் | திறக்கும் திகதி மற்றும் நேரம் | விலைமனு முன்னோடிக்கூட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 120,000 ரூபா | 2023.07.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | 2023.07.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | 2023.07.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்,**
**கந்தவள தோட்டம் இல.: 02, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல வீதி, இரத்மலானை.**
**தொலைபேசி: 011 2632406. தொலைநகல்: 011 2612087.**
**மின்னஞ்சல்: dg@slita.lk**

# பாராட்டும் நினைவுச் சின்னம் வழங்கலும்

*பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்*

பாலமுனை மஹாஸினுல் உலூம் பெண்கள் இஸ்லாமிய கல்லூரியில் அல் குர்ஆனை முழுமையாக மனனம் செய்து முடித்த 06 மாணவிகளை பாராட்டி நினைவுச்சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாலமுனை ஜும்ஆப்பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

பாலமுனை மஹாஸினுல் உலூம் பெண்கள் இஸ்லாமிய கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ரீ.நிஸ்தார் நஹ்ஜி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் யூ.எல்.அப்துல் லத்தீப், மஹாஸினுல் உலூம் இஸ்லாமிய கல்லூரியின் ஆண்கள் பிரிவின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எல்.சாஜித் ஹுஸைனின் பாகவி, கல்லூரியின் பணிப்பாளர் சபைத் தலைவர் ஏ.ஆதம்பாவா, உட்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள் நிருவாகிகள் என பலர் கலந்து கொண்டனர். இதன் போது அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்து முடித்த உவைஸ் அப்ரா, முஹம்மது றியாஸ் பாத்திமா சீனூ, ஆதம் லெப்பை பாத்திமா ஹனா, இல்முதீன் பாத்திமா நுஸ்கா, முஹாஜிரீன் சிஹ்லாஸ் றிதா, முஹம்மத் றமீஸ் பாத்திமா ஷேபா ஆகிய மாணவிகளே அன்றைய தினம் பாராட்டி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# முஸ்லிம்களின் ஒற்றுமைக்கான சிறந்த எடுத்துக்காட்டு ஹஜ்



ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்ற அனைத்து இலங்கை வாழ் முஸ்லிம் சகோதரர்களின் வாழ்விலும் அமைதி, சுபீட்சம், மகிழ்ச்சிகரமான வாழ்வு ஏற்பட்டு எதிர்காலம் சிறக்க இன்றைய திருநாளில் இருகரமேந்தி வல்ல இறைவனிடம் பிரார்த்திப்போமென பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், மக்கமா நகரை அடிப்படையாகக்கொண்டு இந்த ஹஜ் கடமை நிறைவேற்றப்படுகிறது. உலகளாவிய முஸ்லிம் உம்மத் தனது சகோதரத்துவத்தைப் புனித இறை இல்லமான கஃபாவில் ஒற்றுமையாக வெளிப்படுத்தி நிற்கின்ற இச்சந்தர்ப்பமானது முழு உலகுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதுமாத்திரமன்றி முஸ்லிம்களின் சர்வதேச மாநாடான புனித ஹஜ்ஜினூடாக முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை முழு உலகுக்கும் வெளிக்காட்டப்படுகின்றமை மிகவும் முக்கியத்துவ மிக்க ஒன்றாகும். அந்த வகையில் முஸ்லிம்களாகிய நாம் அனைத்து விடயங்களிலும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட இந்நன்னாளில் திடசங்கற்பம் பூணுவோம் எனவும் கூறியுள்ளார்.


## வெற்றிடங்கள

**சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பதவி**

முகாமைத்துவம் தொடர்பான உயர் கல்வி வழங்கும் முதன்மை நிறுவனமான முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தால் (PIM), மேற்படி பதவிக்கு பொருத்தமான வகையில் தகைமைகளைக் கொண்டுள்ளதும் அனுபவத்துடன் கூடியதுமான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விடய துறைகள்:**

மூவியாபார மூலோபாயம் மூசர்வதேச வியாபாரம், மூமூலோபாய முகாமைத்துவம், மூசந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மூமனிதவள முகாமைத்துவம் மூநிதிசார் முகாமைத்துவம் மூதகவல் முகாமைத்துவம் மூகருத்திட்ட முகாமைத்துவம் மூவியாபார சட்டம்

**தகைமைகள்**

01. (ை) தொடர்புடைய விடய துறையில் நிபுணத்துவத்துடன் முதலாவது அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) சிறப்பு பட்டம் பெற்றிருத்தல் மற்றும் கற்பித்தல்/ஆராய்ச்சி நடவடிக்கைகள்/தொழில்முறை நடவடிக்கைகள்/பட்டநிலை பின்படிப்பு கற்கை தொடர்பாக ஆகக் குறைந்தது 01 வருட அனுபவம் அல்லது:

(ை) தொடர்புடைய விடய துறையில் நிபுணத்துவத்துடன் முதலாவது அல்லது இரண்டாம் வகுப்பு (கீழ்ப் பிரிவு) சிறப்பு பட்டம் பெற்றிருத்தல் மற்றும் கற்பித்தல்/ ஆராய்ச்சி நடவடிக்கைகள்/தொழில்முறை நடவடிக்கைகள் /பட்டநிலை பின்படிப்பு கற்கை தொடர்பாக ஆகக் குறைந்தது 01 வருட அனுபவம் அல்லது:

(ைை) (அ) சிறப்பு சித்தியின்றி தொடர்புடைய விடய துறையில் நிபுணத்துவத்துடன் பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆகக் குறைந்தது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் வேறு எதேனுமொரு சிறப்பு பட்டம், மற்றும்

(ஆ) பட்டப்படிப்பு ஆய்வுக்கட்டுரை/ஆய்வறிக்கை வடிவிலான ஆய்வுக் பகுதிகளுடன், தொடர்புடைய விடய துறையில் ஆகக்குறைந்தது 02 கற்கை ஆண்டுகளைக்கொண்ட பட்டநிலை பின்படிப்பு பட்டம் மற்றும்:

02. (ை) பட்டப்படிப்பு ஆய்வுக்கட்டுரை/ஆய்வறிக்கை வடிவிலான ஆய்வுப் பகுதிகளடன், ஆகக் குறைந்தது இரண்டு கற்கை ஆண்டுகளைக்கொண்ட முழுநேர கற்கைநெறி (அல்லது அதற்கு சமமான பகுதிநேர கற்கைநெறி) கற்றதன் பின்னர், தொடர்புடைய விடயத் துறையில் பட்டநிலை பின்படிப்பு பட்டம் அல்லது கலாநிதி பட்டம் பெற்றிருத்தல் அல்லது:

(ை) போதியளவு ஆய்வுப் பகுதிகளுடன் விடய துறையில் ஆகக் குறைந்தது 20 மாதங்களைக்கொண்ட பட்டநிலை பின்படிப்பு பட்டம் பெற்றிருத்தல் அல்லது 15 சித்தி அலகுகளுக்கு (credits) குறையாத வகையில் தொடர்புடைய துறையில்/விடய துறையில் ஆய்வுக் கட்டுரை/ஆய்வறிக்கை வடிவிலான ஆராய்ச்சிகளாக மேற்கொண்ட ஆகக் குறைந்தது 60 சித்தி (credits) அலகுகளுடனான பட்டநிலை பின்படிப்பு பட்டம் அல்லது கலாநிதி பட்டம் பெற்றிருத்தல் மற்றும்,

03. பின்வரும் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் ஆகக்குறைந்ததாக ஆறு ஆண்டுகளிலான (06) அனுபவம்:
   - ை. பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்தல்இ
   - ைை. தொழில்சார் அனுபவம்இ
   - ைைை. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்,
   - ை. மேற்படி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பெற்றுக்கொள்வதற்காக பட்டநிலை பின்படிப்பு கற்கைகளை மேற்கொண்டிருத்தல் .

**சம்பளம் மற்றும் நியமனம் செய்வதற்கான ஏனைய நிபந்தனைகள்**

**சம்பள குறியீடு:** ரு–யுஊ (3) 11 **சம்பள அளவுத்திட்டம்:** ஒரு மாதத்திற்கு 79,360-11x1630-97,290

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக முறைமைக்கு ஏற்புடையதான அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு செலுத்தப்படும்.

**ஓய்வினை லீவு (ளயடிடியவைஉயட டநயளந):** சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ஐஐ அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளை வகிப்பவர்கள் ஏழு ஆண்டுகளிலான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர் முழுமையான சம்பளத்துடன் கூடிய ஓர் ஆண்டிலான ஓய்வினை விடுப்பு (ளயடிடியவைஉயட டநயளந) அல்லது சம்பளமற்ற இரண்டு ஆண்டுகளிலான லீவுக்காக தகைமைகளை பெறுவார்கள். ஓய்வினை லீவுக்கமைவாக வெளிநாடு செல்கின்ற உரிய அலுவலர் மற்றும் வாழக்கைத்துணை பிரயாணப் படிகளைப் பெறுவதற்கு தகைமையுடையவராவார்கள்.

**நலன்கள்:** நியமனம் பெறுபவர் மாதாந்த சம்பளத்தில் 10% ஆன பங்களிப்புடன் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தில் உறுப்பினராக இணைத்துக்கொள்ளப்படும். நிறுவனத்தால் மாதாந்த சம்பளத்தில் ஒழுங்குமுறையில் 8%, 7% மற்றும் 3% பல்கலைக்கழக ஓய்வூதிய முறைக்கு, பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்யப்படும்.

நியமனத்திற்கான ஏனைய நிபந்தனைகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் (திருத்தம் செய்யப்பட்டவாறு) மற்றும் அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏனைய கட்டளைச் சட்டங்கள், துணை விதிகள், ஒழுங்குவிதிகள், என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்மைவாக அமையும்.

**தெரிவு செய்கின்ற முறை:** கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை மூலம்

**விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விபரங்கள்:** ஆர்வமுள்ள நபர்கள் நிறுவனத்தின் www.pim.sjp.ac.lk இணையதளத்தின் விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய விபரங்களை தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன், கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களுடன் பட்டப்படிப்பின் கூற்று, வசயளெஉசipவ மற்றும் சேவைச் சான்றிதழ்கள் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடிய வகையில் சிரேஷ்ட உதவிச் செயலாளர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்ப நிறுவனம், இலக்கம் 28, லெஸ்லி ரணகல மாவத்தை, கொழும்ப 08 என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

அரசாங்கத்தின் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டுமாயினும், முதல் சந்தர்ப்பத்தில் முன் பிரதியை அனுப்பி வைக்கலாம். எவ்வாறாயினும், விண்ணப்பப்படிவம் அரச நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்பி வைக்கப்படவில்லையெனில், அத்தகைய எந்தவொரு விண்ணப்பத்தாரியையும் நேர்முகப் பரீட்சை பொருட்டு கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

உரிய படிவத்தில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள், முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பப்படிவங்கள், தேவையான ஏனைய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள், உரிய முறையினூடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் (அரசாங்கத்தின் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் ஊழியர்கள்) மற்றும் இறுதி திகதிக்கு பின்னர் நிறுவனத்திடம் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். பட்டியலிடப்பட்ட பரீட்சார்த்திகளை தெரிவு செய்யும் உரிமை முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தை சார்ந்திருக்கும். நேர்முகப் பரீட்சை பொருட்டு பட்டியலிடப்பட்ட பரீட்சார்திகள் மட்டும் அழைக்கப்படுவார்கள்.

**சிரேட்ட உதவி பதிவாளர்**
29.06.2023

**Postgraduate Institute of Management**
*University of Sri Jayewardenepura*

28, Lesley Ranagala Mawatha, Colombo 8
Sri Lanka.
Tel: +94 11 2 689 639
Fax: +94 11 2 689 643
Web: www.pim.sjp.ac.lk
E-mail: admin@pim.sjp.ac.lk



# சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்** | **வேலைவாய்ப்பு**

**101 சொகுசு வாகனங்கள் விற்பனைக்கு**

KN-7333 Mercedez Benz, 2009, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 039635

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

மாத்தறை விறகு அடுப்பு பேக்கரிக்கு எல்லா வேலைகளும் தெரிந்த (இனிப்பு பலகாரம்) பணியாட்கள் தேவை. உணவு தங்குமிட வசதிகள் இலவசம். தொடர்பு 0713311501. 038365

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

YT-7032 Bajaj, 2011, YE-9950 Bajaj, 2010, QT-9463 Bajaj, 2009, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 039633

**Repeat Your Ad For Better Offers**


**எக்ஸத் ஸ்ரீ யொவுன் பௌத்த பதனம கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

உதயன கிரிந்திகொட ஆகிய நான். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், எக்ஸத் ஸ்ரீ யொவுன் பௌத்த பதனம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின் வரும் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(அ) மாணவ மாணவிகளுக்கான கல்வி நிலையங்கள் மற்றும் விடுதிவசதிகளை ஏற்படுத்தி அவற்றை நடாத்துதல்

(ஆ) வறிய மாணவர்களின் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காகவும் மற்றும் விருத்தி செய்வதற்குமாக இலங்கை கல்வி நிறுவனங்களுக்கு அனுசரனை வழங்குதல்

இ) இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுவோருக்கு அவசிய உதவிகளை செய்தல்

மற்றும்
உதயன கிரிந்திகொட
பாராளுமன்ற உறுப்பினர்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பொறியியல் பணியகம்

## மேல் மாகாண சபை

மேல் மாகாணத்தில் விவசாயப் பயிர்களுக்கு உரம் தெளித்தல் மற்றும் டெங்கு பரவல் மற்றும் டெங்கு இனப்பெருக்கத்தைத் தடுப்பதற்கு இரசாயனங்களைத் தெளிப்பதற்கு பயன்படுத்துவதற்கான ஆளில்லா விமானம் **(DRONE)** சகிதம் பகல் இரவு கண்காணிப்பு திறன் கொண்ட ஆளில்லா விமானம் ஒன்றை வழங்குதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல், ஒப்படைத்தல், பயிற்சியளித்தல், உத்தரவாதமளித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கான வழங்கல்

1. மேல் மாகாணத்தில் விவசாயப் பயிர்களுக்கு உரம் தெளித்தல் மற்றும் டெங்கு பரவல் மற்றும் டெங்கு இனப்பெருக்கத்தைத் தடுப்பதற்கு இரசாயனங்களைத் தெளிப்பதற்கு பயன்படுத்துவதற்கான ஆளில்லா விமானம் (DRONE) சகிதம் பகல் இரவு கண்காணிப்பு திறன் கொண்ட ஆளில்லா விமானம் ஒன்றை வழங்குதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல், ஒப்படைத்தல், பயிற்சியளித்தல், உத்தரவாதமளித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை (மேமா) சுகாதார அமைச்சின் செயலாளர் சார்பாக பிரதி பிரதான செயலாளர் (பொறியியல்) பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. 02 பெட்டறிகள் மற்றும் துணைப்பாகங்கள் உள்ளடங்களாக முழுமையான தொகுதி multi-copter (VTOL Drone) ஒன்று, பகல் இரவு கண்காணிப்புத் திறன் கொண்ட EO/IR கமரா ஒன்று, ஒரு முழுமையான பெட்டறி சார்ஜிங் நிலையம், 04 இணக்கமான மேலதிக பெட்டறிகள் மற்றும் தொடர்புடைய கையேடுகளை வழங்குதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல், ஒப்படைத்தல், பயிற்சியளித்தல், உத்தரவாதமளித்தல் மற்றும் பராமரித்தல்.

   மற்றும்

   01 பெட்டறி மற்றும் துணைப்பாகங்கள் உள்ளடங்களாக விவசாயம் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்காக இரசாயனங்களைத் தெளிக்கும் கொள்ளளவைக் கொண்ட முழுமையான தொகுதி multi-copter (VTOL Drone) ஒன்று, ஒரு முழுமையான பெட்டறி சார்ஜிங் நிலையம், 02 இணக்கமான மேலதிக பெட்டறிகள் மற்றும் தொடர்புடைய கையேடுகளை வழங்குதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல், ஒப்படைத்தல், பயிற்சியளித்தல், உத்தரவாதமளித்தல் மற்றும் பராமரித்தல்.
3. விநியோகக் காலம் 105 நாட்கள்.
4. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை ஊடாக இடம்பெறும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் தளம், (மேமா) பொறியியல் பணியகத்தின் பெறுகைப் பிரிவு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2092504 மின்னஞ்சல்: procurementuniteng@gmail.com மற்றும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 (மூவாயிரத்து ஐந்நூறு ரூபா) ரூபாவைச் செலுத்திய பின்னர் 2023-06-30ஆம் திகதி முதல் 2023-07-14ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் தளம், (மேமா) பொறியியல் பணியகத்தின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை இந்த அலுவலகத்தின் கணக்காளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்), பொறியியல் பணியகம் (மேமா), 204, 5ஆம் தளம், டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2023-07-17ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைக்கோரல்கள் 77 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது ஒன்றில் 100,000.00 ரூபாவை (ஒரு இலட்சம் ரூபா) ரொக்கப் பணமாக வைப்புச் செய்யலாம் அல்லது பத்தரமுல்ல, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் தளம், (மேமா) பொறியியல் பணியகத்தின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) பெயருக்கு விலைக்கோரல் ஆவணத்தின் 2ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வடிவத்தில் 200,000.00 ரூபா (இரண்டு இலட்சம் ரூபா) பெறுமதிய பிணை முறியாகவிருக்கலாம். ITB தரவுத் தாளின் 16ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்டதும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாளின் பின் 105 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்படாத ஏதேனும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பொறி. K.R. அபேசிறிவர்தன,**
**பிரதிப் பிரதான செயலாளரின் (பொறியியல்) (மேமா), பெறுகைக் குழு,**
**பொறியியல் பணியகம்,**
**204, 5ஆம் தளம்,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி** : 011-2092504
**தொலைநகல்** : 011-2092505
**மின்னஞ்சல்** : eng.org.wpc@gmail.com

# கிழக்கின் குரல்



# மட்டு.மாவட்டம் விவசாயத்தில் பாரிய முன்னேற்றம் அடைந்து வருகிறது

## இராஜாங்க அமைச்சர் சந்திர காந்தன்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டம் விவசாய துறையில் பாரிய முன்னேற்றமடைந்து வருவதாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதில் பாராளுமன்ற உறுப்பினர் கே.கருணாகரன் கலந்துகொண்டதுடன், விவசாயிகளுக்கு நன்மைகளை பெற்றுக்கொடுக்கும் வகையிலான ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெரிவித்திருந்தனர்.

இதன்போது தொடர்ச்சியாக மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளான நெல்லிற்கான விலை 120 ரூபாவாக கூட்டப்பட வேண்டியதன் முக்கியத்துவம், முகத்துவாரம் வெட்டப்படுவதன் அவசியம், விவசாயிகளுக்கான இலவச பசளை விநியோகம், காலநிலை மாற்றத்தால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், நீர்ப்பாசனம், மாவட்டத்தில் உள்ள குளங்களை புனரமைப்பது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பல தீர்க்கமான முடிவுகள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது எட்டப்படவுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது. அத்தோடு ஜப்பான் அரசினால் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ள யூரியா உரம் தொடர்பாக இதன்போது விரிவாக தெளிவுபடுத்தப்பட்டது.

# கல்முனையில் 'ஈதுல் அழ்ஹா' ஹஜ் பெருநாள் தொழுகை



கல்முனை மத்திய தினகரன் நிருபர்

சர்வதேச பிறை அடிப்படையில் இடம்பெற்ற புனித ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் நேற்று (28) புதன்கிழமை கல்முனையில் இடம் பெற்றது.

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் பேஷ் இமாம், மௌலவி சாபித் (ஷரயி,ரியாதி) தலைமையில் இடம்பெற்ற இந்த பெருநாள் தொழுகையில் பெருந்திரளான ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்து கொண்டனர்.

பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி சாபித் (ஷரயி,ரியாதி) நடாத்திவைத்தார்.



அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ டக்ளஸ், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்ட பொது... (படம்: அட்டளைச்சேனை குறூப் நிருபர்)

# மின்சார வேலியில் சிக்கி மீனவர் பலி

மண்டூர் தினகரன் நிருபர்

வாழைச்சேனை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை பிரதேசத்தில் உள்ள மின்சார வேலியில் அகப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் பலியான சம்பவம் நேற்று முன்தினம் (27) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காவத்தமுனை பிரதேசத்தைச் சேர்ந்த மூத்தவன்சிவலிங்கம்(அன்ஷார்) (57) வயதுடைய ஆறு பிள்ளைகளின் தந்தையே பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று காவத்தமுனையில் உள்ள இரால் பண்ணை ஒன்றுக்கு செல்லும் மின்சார வேலிக்கு அருகில் மீன்பிடித்துக்கொண்டு இருக்கும் போது தவறுதலாக மின்சார வேலியில் தவறி விழுந்ததில் மின்சாரம் தாக்கி பலியானதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

வாழைச்சேனை நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற கோரளைப்பற்று பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வடிவேல் ரமேஸ்சானந்தன் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரதேச பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்ல பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுத்துவக்கு வெடித்ததில் சிறுவன் பரிதாப மரணம்

மண்டூர் தினகரன் நிருபர்

வாகரை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கட்டுமுறிவு பிரதேசத்தில் கட்டுத்துவக்கு வெடித்ததில் சிறுவன் ஒருவன் பலியான சம்பவம் நேற்று முன்தினம் (27) இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சின்னத்தட்டுமுனை வாகரை பிரதேசத்தைச் சேர்ந்த (14) வயது நவரெட்ணராசா கிதுசன் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று உறவினர்களுடன் கட்டுமுறிவு காட்டு பிரதேசத்திற்கு மிருக வேட்டைக்கு சென்று கொண்டிருக்கும் போது காட்டுப்பற்றையில் கையிலிருந்த கட்டுத்துவக்கு சிக்குண்டு வெடித்ததில் குறித்த சிறுவன் சம்பவ இடத்திலேயே பலியானதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'சமாதான செயற்பாட்டாளர்களுக்கு பாராட்டுகள், வரவேற்புகள் கிடைப்பதில்லை'

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

சமாதான செயற்பாட்டாளர்களுக்கு இரு பக்கங்களிலுழ் பாராட்டுக்கள் வரவேற்புக்கள் கிடைக்காத போதிலும் நாங்கள் எங்களது சமாதானத்துக்கான பயணத்தை நிறுத்தவில்லை. அதில் சோர்வடையவுமில்லை என இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சமன் செனவிரத்ன தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

நடுநிலையான சிங்களவர்கள் சிறுபான்மையினருக்காக குரல் கொடுக்கின்றபோது அவர்கள் தென்பகுதி சிங்கள மக்களிடையே துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையில் கடந்த 23 வருடங்களாகக் கடமையாற்றி அந்நிறுவனத்திலிருந்து விலகிச் செல்லும் சமன் செனவிரத்னவின் அர்ப்பணிப்புடனான சமாதான செயற்பாடுகளைப் பாராட்டி பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட சர்வோதய மத்திய பயிற்சி நிலையத்தில் திங்களன்று நடைபெற்றது.

தென்பகுதி சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சமாதான செயற்பாட்டாளர்களான நாங்கள் வடக்குக்குச் செல்லும்போது அந்த மக்களும் நீங்கள் எங்களை வந்து பார்த்து விட்டுத்தான் செல்கிறீர்கள் ஆனால் ஒன்றும் செய்யவில்லை என்று குறை காண்கிறார்கள்.



அதேபோல நாங்கள் தென்னிலங்கைக்குச் செல்லும்போது நீங்கள் தமிழ் மக்களையும் எல்.ரி.ரி.ஈ ஐயும் பற்றி மட்டும்தான் பேசுகிறீர்கள் அதனால் நீங்கள் தென்னிலங்கை சிங்கள மக்களின் துரோகிகள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

எனவே இரு பக்கங்களிலும் எங்களுக்குப் பாராட்டுக்கள் வரவேற்புக்கள் கிடைக்காத போதிலும் நாங்கள் எங்களது சமாதானத்துக்கான பயணத்தை நிறுத்தவில்லை. அதில் சோர்வடையவுமில்லை.

எனவே சமாதான விரும்பிகள் இத்தகைய நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டும். சமாதான செயற்பாட்டில் சவால்கள் அச்சுறுத்தல்கள், பலங்கள், பலவீனங்கள் இருக்கும். அவற்றை பகுப்பாய்வு செய்து கொண்டு சமாதானத்துக்கான பயணத்தைத் தொடர வேண்டும் என்று மாவட்ட சர்வ மதப் பேரவையில் இணைந்து சமாதானத்திற்காகப் பயணிக்கவிருக்கின்ற உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## சமூக சேவையில் 30 வருடங்களுக்கு மேலாக

# தன்னை அர்ப்பணித்து வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் கல்முனை எஸ்.தஸ்தகீர்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

சமூகசேவையில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தன்னை அர்ப்பணித்து வரும் கல்முனை எஸ். தஸ்தகீர் அகில இலங்கை வை.எம். எம்.ஏ. பேரவையின் உப தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டமையையிட்டு அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்கள் புத்திஜீவிகள் பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.



அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. பேரவையின் வருடாந்த மாநாடு, பதுளை கெப்டல் சிற்றி கேட்போர் கூடத்தில் பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் நடைபெற்றது. இதில் 2023/2024 காலப்பகுதிக்கு நாடு முழுவதும் செயற்படுவதற்காக 5 உபதலைவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களில் முதன்மையானவராக சிரேஷ்ட உறுப்பினராக எஸ். தஸ்தகீர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த மூன்று தசாப்த காலமாக சமூக சேவை, சாரணியம், சுகாதாரம் போன்ற பல சேவைத் துறைகளில் நேர்மையாகவும், இறையச்சத்தோடும், தூய்மையாகவும் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்றார். இதன் ஓர் சான்றாகவே கட்டுக்கோப்பான உயர் சமூக சேவை அமைப்பான அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் உயரிய சபையில் தேசிய உப தலைவராக இவ்வருடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சாய்ந்தமருது வை. எம். எம்.ஏ கிளையின் தலைவராக பல வருடங்கள் செயற்பட்டு கிளையின் சிறந்த பாடசாலை செயல்திட்டம் மற்றும் சிறந்த பாலர் பாடசாலை செயல் திட்டம் சிறந்த செயல் திட்டமாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்னின்று உழைத்தார். பேரவையின் கிழக்கு மாகாணத்தின் பிராந்திய பணிப்பாளராக இரண்டு வருடங்களும் போதைப்பொருள் தடுப்புக்கான பிரிவின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளராக இரண்டு வருடங்களும் செயற்திட்ட தவிசாளராக சுமார் 13 வருடங்களும் செயற்பட்டு இலங்கையின் பல மாவட்டங்களுக்கு தேசிய துறை சார்ந்த போதைப்பொருள் தடுப்பு வளவாளராக செயல்பட்டவர்.

இவர் பயிற்சிகளை இந்தியா, ஜப்பான் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று துறை சார்ந்த பயிற்சிகளை பெற்றிருக்கின்றார்.



கல்முனை கார்மல் பற்றிமாக் கல்லூரியில் கற்பித்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு அண்மையில் கல்லூரி திறந்தவெளியரங்கில் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் சந்தியாகு தலைமையில் இடம்பெற்றது. ஆங்கில ஆசிரியைகளான திருமதி .அமிலா, திருமதி. தர்ஷிக்கா,திருமதி தர்ஷினி, கணித பாட ஆசிரியை திருமதி. தணுரேகா மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆசிரியை திருமதி. ஷர்மிலா ஆகியோர் இவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (படம் மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# சர்வதேச பிறையில் அக்கரைப்பற்றில் இடம்பெற்ற ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று இஸ்லாமிய கலாசார வழிகாட்டல் மையம் ஏற்பாடு செய்த சர்வதேசப்பிறை அடிப்படையிலான புனித ஹஜ்ஜூப்பெருநாள் (ஈதுல் அழ்ஹா) தொழுகை அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று (28) காலை 6.30மணிக்கு நடைபெற்றது.

இப்பெருநாள் தொழுகை மற்றும் பெருநாள் பேருரையை மௌலவி எம். ஐ.அன்ஸார் (தப்லிகி) நிகழ்த்தியதோடு,



இதில் பெருந்திரளான ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்.

# பாலமுனை விவசாய கல்லூரியின் 2022/2023 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தேசிய டிப்ளோமா கற்கை நெறி

ஒலுவில் விசேட நிருபர்

பாலமுனை விவசாய கல்லூரிக்கு 2022/2023ம் ஆண்டுக்கான ஆங்கில மொழி மூல விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறியினை பயில்வதற்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, விவசாய கல்லூரியின் அதிபர் ஏ.எஸ்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

விவசாய திணைக்களத்தினால் நடாத்தப்படும் விவசாய உற்பத்தி தொழில் நுட்பத்தில் ஒன்றரை வருட தேசிய தொழில் சார் தகமை மட்டம் 05 பாடநெறிக்கு பயிலுனர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் தமிழ் மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய மூன்று படங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து கல்விப் பொதுத்தராதர உயர்தர விஞ்ஞானப்பிரிவில் ஏதாவது ஒரு பாடத்தில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாமென அவர் தெரிவித்தார். 03ம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் விவசாயத் துறையுடன் தொடர்புடைய தொழில் சார் தகமை மட்டம் 04 சான்றிதழை பெற்றுக் கொண்ட பயிலுனர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆண், பெண் இரு பாலாரும் இதற்கு விண்ணப்பிக்கலாமெனவும் 18 வயதுக்கு குறையாமலும், 25வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரம் நிகழ்நிலை ஊடாக விவசாயத் திணைக்களத்தின் www.doa.gov.lk என்ற இணையத் தளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தின் நகல் பிரதியினை எதிர்வரும் ஜுலை மாதம் 05ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 081–2388340 மற்றும் 081–2388341 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஹஜ்ஜுப் பெருநாள்
## சிறப்பு மலர்

தயாரிப்பு: மர்லின் மரிக்கார்



# ஹஜ்ஜின் யதார்த்தங்கள்

ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஐந்தாவது கடமை. 'நாடிச்செல்லல்' என்பது இதன் கருத்தாகும். இஸ்லாமிய கணிப்பீட்டில் பன்னிரண்டாவது மாதமான துல் ஹஜ் மாதத்தில் மக்கா சென்று குறிப்பிட்ட சில வணக்கங்களை நிறைவேற்றுவதையே இது குறிக்கிறது.

ஹஜ்ஜில் தவ்ஹீத், திக்ர், துஆ, தொழுகை, திலாவத், தவாப், ஸஃய் போன்ற பல கிரியைகள் இணைந்துள்ளன. ஹஜ் கடமையை நிறைவேற்ற சென்றவர்கள் 'லப்பைக், அல்லாஹும்ம லப்பைக... என்று வரக்கூடிய 'இறைவா உனக்கு பதிலளித்துவிட்டேன். உனக்கு நிகராக எதுவும் இல்லை. புகழ், அருள், அதிகாரம் உனக்குரியது' என்ற தக்பீரைக் கூறுவர்.

ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக மக்காவை நோக்கி செல்ல முடியாதவர்கள் துல் ஹஜ் மாத வணக்கங்களில் ஈடுபடுவார்கள். ஹஜ்ஜுக்கு சென்றவர்கள் ஒன்பதாம் தினத்தில் 'அரபா' மைதானத்தில் ஒன்றுகூடும்போது நாட்டிலிருப்பவர்கள் நோன்பிருப்பர். பத்தாவது தினத்தில் பெருநாள் கொண்டாடுவர். அத்தோடு அதிகமாக 'அல்லாஹு அக்பர்......' என்ற தக்பீரை அதிகம் மொழிய வேண்டும். 'இறைவா நீதான் (எனக்கு) மிகவும் பெரியவன். உன்னை தவிர வணங்குவதற்கும், உதவி தேடுவதற்கும் பொருத்தமானவர்கள் யாரும் இல்லை, உனக்கே அனைத்து புகழும் உரியது' என்பது அதன் கருத்தாகும்.

இம்மாதத்தின் ஒன்பதாம் நாள் சுபஹ் முதல் பதின் மூன்றாம் நாள் அஸர் வரை இத்தக்பீர் சொல்லப்பட வேண்டும். இது மாபெரும் பிரகடனமாகும். இந்த உலகம், அதிலுள்ள பொருட்கள், செல்வங்கள், பட்டங்கள், பதவிகள், அந்தஸ்துகள் அனைத்தையும்விட அல்லாஹ்வும் அவன் ஏற்படுத்தி வைத்திருப்பவைகளும் எனக்கு பெரியவை முக்கியமானவை என்ற நம்பிக்கையே இங்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஒரு முஸ்லிமின் வாழ்வில் 'தக்பீர்' இணைந்துள்ளமைக்கான காரணமும் அதுவேயாகும்.

ஹஜ்ஜின் போது வெந்நிற ஆடையை அணிந்தவர்களாக, ஒரேவிதமான தக்பீரை முழங்கியவர்களாக, சிறுவர் பெரியவர், கறுப்பர் வெள்ளையர், முதலாளி தொழிலாளி, செல்வந்தன் ஏழை என்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி ஒரே திசையை நோக்கி சுற்றி வந்து 'அரபா' பெரு வெளியில் ஒன்று கூடி இக்கடமையை நிறைவேற்றிய பின்னர் தான் பெருநாள் கொண்டாடப்படுகிறது.

ஹஜ்ஜுக்கு செல்லாதவர்கள் பெருநாள் தொழுகைக்கு எதையும் உண்ணாது செல்ல வேண்டும். உறவுகளை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். சகோதரத்துவ ஒற்றுமையை பேணுவதில் கரிசனை காட்ட வேண்டும். பெருநாள் தொழுகைக்காக ஒரு பாதையால் சென்று மறுபாதையால் திரும்பி வரவேண்டும். பெருநாள் தொழுகைக்கு பின்னர் உழ்ஹிய்யாவை நிறைவேற்ற ஆரம்பிக்க வேண்டும். இவை அனைத்தும் நபி வழிகாட்டல்களாகும்.

பெருநாள் என்பது தெய்வீக பண்பும் மானுடப் பண்பும் இரண்டற கலந்தது. அது மனோஇச்சைக்கு கட்டுப்பட்டு மனம்போன போக்கில் நடந்துகொள்ளக்கூடிய தினமல்ல. 'அல்லாஹ் தான் எனக்கு பெரியவன்' என்ற முழக்கத்தோடு இப்பெருநாள் ஆரம்பமாகிறது. அல்லாஹ்வை தொழுது அவனை நெருங்கி அவனுடனான உறவை புதுப்பித்து பேணிக்கொள்வதற்கான சந்தர்ப்பமாக இது உள்ளது.

அதேசமயம் மானுடப்பண்புகளை வெளிப்படுத்தவும் ஏனைய தினங்களைப் போன்று பெருநாள் தினத்திலும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வழிகாட்டல்களைவும் இத்தினம் வழங்குகின்றது.

அதேநேரம் ஹஜ் ஒரு ஆன்மீக பாடசாலையாகவும் உள்ளது. உள்ளங்கள் அங்கு பட்டைதீட்டப்பட்டு பிரகாசிக்கின்றன. அல்லாஹ் காட்டித் தந்துள்ள வணக்கங்களையும் வழிபாடுகளையும் மதித்து அவற்றை தொடர்ந்து செய்வதற்கான ஒரு பயிற்சியாக அது அமைகிறது. இறை நம்பிக்கையும் இறை தொடர்பும் அங்கு ஆழமாக பதிக்கப்படுகிறது. இங்கு அவனது நம்பிக்கை சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. அவனது பொறுமை பரீட்சிக்கப்படுகின்றது. இறுதியாக அவனது உள்ளத்தில் படிந்துள்ள மாசுகளும் மருக்களும் நீக்கப்பட்டு தூய்மைப்படுத்தப்படுகின்றான.

ஹஜ்ஜுக்கு பல நோக்கங்கள் உள்ளன. அந்நோக்கங்களை அறிந்து அவற்றை அடையும்விதமாக ஹஜ்ஜை அமைத்துக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வுடைய திருப்தியை நாடிச்செல்கின்ற ஒரு பயணமே ஹஜ். இக்லாஸ் என்ற மனத்தூய்மையே இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் காணப்படுகின்ற கோளாறுகள் ஹஜ்ஜின் பலனை இழக்கச் செய்யலாம். ஹஜ்ஜை நிறைவேற்றுகின்றவனின் எண்ணங்கள், ஆசைகள், விருப்புகள், கனவுகள், முயற்சிகள், நாட்டங்கள் அனைத்தும் அல்லாஹ்வை நோக்கியதாகவே இருக்க வேண்டும்.

'ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காக பூர்த்தி செய்யுங்கள்' (பகரா:196) என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். மேலும் அல்லாஹ்வை நினைவுபடுத்துவதும் அவனிடம் பிரார்த்திப்பதும் தான் ஹஜ். அதாவது திக்ரும் துஆவும் ஆகும்.

ஹஜ் தொடர்பான அல்குர்ஆன் வசனங்களையும் ஹஜ்ஜின் நடைமுறைகளையும் நோக்கினால் இது நன்கு புலனாகும். சூறா பகராவின் 198 ஆவது வசனங்களிலிருந்து ஹஜ் தொடர்பாக சொல்லப்படும் வசனங்கள் இதனை எடுத்தியம்புகின்றன. இதேபோன்று ஹஜ் தொடர்பில் அல் குர்ஆனின் பல வசனங்களும் எடுத்தியம்பியுள்ளன.

அந்த வகையில் 'ஹஜ் என்பது குறிப்பிடப்பட்ட சில மாதங்களில் நிகழ்வதாகும். யார் இஹ்ராம் அணிந்து தன்மீது ஹஜ்ஜை விதியாக்கிக்கொள்கிறாரோ அவர் மனைவியுடன் உடல் உறவு கொள்ளாமலும், கெட்ட வார்த்தைகளை பேசாமலும், தர்க்கங்களில் ஈடுபடாதும் இருக்கட்டும் (பகரா: 197)

என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.

'யார் தனது மனைவியுடன் உடலுறவு கொள்ளாமலும் மோசமான வார்த்தைகளை பேசாமலும் ஹஜ் செய்கிறாரோ அவர் அன்று பிறந்த பாலகனை போன்ற நிலையில் திரும்பி வருகின்றான். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மனைவியுடன் உடலுறவில் ஈடுபடுவதும் அதனுடன் தொடர்பான விடயங்களை செய்வதும் சாதாரண நிலையில் அனுமதிக்கப்பட்ட விடயமாகும். அனுமதிக்கப்பட்ட விடயங்களையே தவிர்ந்துகொள்ள வேண்டுமாயின் தடுக்கப்பட்ட விடயங்களை தவிர்ந்துகொள்வது மிக அவசியமானது ஒரு பாவச்செயல் அதனை செய்கின்ற காலம், செய்யுமிடத்தை பொறுத்து பாரதூரமானதாக மாறிவிடுகின்றது. இது அல்லாஹ் தடுத்தவைகளை தவிர்ந்துகொள்வதற்கான ஒரு பக்குவத்தை ஏற்படுத்தக்கூடியதாகும்.

**அஷ் ஷெய்க் யூ.கே. றமீஸ்...**
**எம்.ஏ. (சமூகவியல்)**

## புனித ஹஜ்ஜும் பேறும்

உலகெலாம் தீன்சு கந்தம் ஒன்றியே பரவச் செய்யும்
பலம்பெறும் மார்க்கம் இஸ்லாம் பரிதிபோல் காணல் கூடும்
நிலையிலா உலக வாழ்வில் நித்திய சொர்க்கம் வேண்டி
பலபட இறைய ளித்த பாக்கியத் தொன்றாம் ஹஜ்ஜு

அல்லாஹ்வின் கட்ட ளைக்கே அடிபணி: பணிந்தால் வாழ்வில்
எல்லாமே கிட்டும் என்னும் ஏற்றத்தைச் செப்பு கின்ற
சொல்லினை மெய்மை யாக்கும் செயலேதான் ஹஜ்என் றாகும்
வல்லவன் கனவில் சொன்ன வார்த்தையின் பணித லாகும்.

தியாகத்தின் உயர்வு தன்னைச் செப்பிடும் செயலாம் ஹஜ்ஜு
வயப்பட்டார் நபிஇப் ராஹீம் வல்லவன் ஆணை ஏற்றார்
தயவின்றி மறுப்பும் அற்றே தனயனை பலியி டற்கும்
செயற்படத் துணிந்த தியாகச் செம்மலாய்ப் பெயர்கொண் டாரே.



கடமையில் ஐந்தில் ஒன்றே ஹஜ்எனுங் கடமை யாகும்
திடமான மனமும் தேகச் சக்தியும் செல்வங் கூட
உடன்பெறு வார்கட் கன்றி உண்டிலை கடமை வல்லோன்
அடியார்கள் தம்மை என்றும் இடர்ப்பட வையாச் சீரே.

வாழ்நாளில் ஒருமு றைதான் வரித்திடல் கடமை யாகும்
தாழ்பணிந் திறைபள் ளிக்குச் சென்றுநாம் நோற்கும் செய்கை
பாழ்படா திரண்ட செல்வம் பாவங்கள் முற்றுந் தீர்ந்து
மீழ்வதாம் மனத்தால் தூய்மை மனுக்குலம் ஹஜ்ஜின் பேறே.

வந்தனன் நின்ன ழைப்பை வரித்துநான் வந்தேன் வந்தேன்
எந்தவோர் பொருளும் உன்பால் இணையில்லை வந்தேன் வல்லோய்
சொந்தமாம் புகழ னைத்தும் சீர்கொடை ஆட்சி தாமும்
உன்றனுக் குரிய தாகும் உனக்கிணை ஒன்றும் இல்லை

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்...**

## புனித 'ஹஜ்' ஜை நிறைவேற்றுவோம்!



அகிலம் படைத் தாளும் அல்லா பெரிய வனே
அருளாளன் அன்புடை யோன் அவனிவாழ் மாந்த ரெல்லாம்
சிறப்பான வாழ்வு கண்டு தீமை களைத் தொழுகத்
தேர்ந்தான் இஸ்லா த்தைத் திரு நிறைந்த சன்மார்க்கம்

கலிமாப் பொருளு ணர்ந்து கண்ணிய னாம் அல்லாஹ்வை
அனுதின முமே தொழுது அரிய 'சக்காத்' அளித்து
புனித மிகும் ரமழானில் பொறுமையுடன் நோன்பிருந்து
இதமாக ஹஜ்ஜு செய்ய ஏவினான் வல்ல இறை

'ஹஜ், உம்ரா செய்வதுங்கள் கடமை' எனும் இறையோனின்
கட்டளையை திரு மறையில் காணுகிறோம் தெளிவாக
ஹஜ் கடமை செய்யாது காலம் கடத்துவதால்
கஷ்ட துன்பம் நீங்காது கை சேதம் கை சேதம்

உடற் பலமும் பண பலமும் உண்மையிலே பெற் றிருந்தும்
ஒவ்வாத கார ணங்கள் உரைத்து ஹஜ்ஜுக் கடமையினை
மடைமை யினால் மறந்துலக மாயையிலே மூழ்கி அந்தக்
கடமை யினைச் செய்யாது காலம் கடத்துவ தோ?

ஹஜ் கடமை செய்யுமுன் நாம் கடைப்பிடிப்போம் முன்கடமை
தொழுகை களைப் பேணித் தொழுவோம் சகாத் அளிப்போம்
உளமுவந்து அமல் செய்வோம் ரமழானில் நோன் பிருந்து
ஹலாலான தேட்டத்தில் ஹஜ் கடமை செய்திடுவோம்

வாழ்விலே நாம் செய்த பாவங் களை நினைத்து
வல்ல இறைவனிடம் "தௌபா" இறைஞ் சிடுவோம்
நல்ல 'தக்வா' வுடனே நன்மை பெருக்கி நிதம்
நாதர் நபி பேணிவந்த நல்வழியைப் பின் தொடர்வோம்

புனித மிகும் 'கஃபாவும்' புவிக்கோர் அருட்கொடையாம்
இனிதாய் அதில் வணக்கம் புரிவதொரு பாக்கியம் தான்
ஹஜ் கடமை செய்வோர்க்குக் கடன் வறுமை நோய் பிணியை
இல்லா தொழிக்கும் இறை கருணைதனை நாடி நிற்போம்

செய்யு மொரு நற் செயலால் நன்மை ஒன்று கிட்டுமென்றால்
ஹரம் ஷரீபில் அச்செயலுக் கோரிலட்சம் நன்மை களாம்
ஹரத் தமர்ந்து மனமுருகிக் கையேந்தும் பிரார்த் தனையைக்
கருணை மிகும் அல்லா கபுல் செய்வான் என்றறிவோம்

'மஸ்ஜிதுன் நபவி' எங்கள் மா நபியின் புனித பள்ளி
'மதீனாவின் ஹறம்' அதிலே மனங்கொண்டு தொழுதிடுவோம்
வள்ளல் நபி களது றவ்லாவைக் காண்பது நம்
வாழ் நாளிலே கிடைக்கும் பேரதிஷ்டம் என் றுணர் வோம்

மக்கள் மனைவி மற்றும் சுற்றம் சுகம் விட்டு
மக்காவை நாட வைத்த மா இறைக்கு நன்றி சொல்வோம்
எக்கால மும் தீமை எண்ணாத புனிதர் களாய்
சொர்க்கத்தின் சுகம் வேண்டி ஹஜ்ஜை நிறைவு செய்வோம்...!

**சுஜப் எம். காசிம்...**

# ஹஜ் பெருநாள்
# இப்ராஹீம் (அலை) அவர்களை நினைவுபடுத்தும் நாள்



ஹஜ்ஜுடைய கிரியைகள் மிகப் பெரும்பாலும் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய வாழ்க்கையை நினைவுபடுத்துவதாகவே அமைந்திருக்கின்றன. அல்லாஹுத்தஆலா நபிமார்களுடைய வரலாறுகளை அல்குர்ஆனிலே குறிப்பிட்டு விட்டு முடிக்கும் தருவாயில் பல இடங்களிலும் அறிவுடையோருக்கு இதில் படிப்பினை இருக்கிறது என்று குறிப்பிடுகிறான்.

மூஸா (அலை) அவர்களை எதிர்த்த பிர்அவ்னுடைய வாழ்க்கையை உலகத்தாருக்கான படிப்பினையாகும் வகையில் அவனுடைய உடலை அல்லாஹுத்தஆலா அத்தாட்சியாக வைத்திருப்பது போல இப்ராஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கையை உலகம் இருக்கும் வரையான அனைத்து மனிதர்களுக்கும் படிப்பினையாக அமையும் வகையில் ஹஜ்ஜினை அல்லாஹுத்தஆலா அமைத்துத் தந்திருக்கின்றான்.

அல்லாஹ்வின் நண்பன் எனும் கலீலுல்லாஹ் என்ற சிறப்புப் பெயரால் இவரை குறிப்பிடுகின்ற அல்குர்ஆன் 69 இடங்களில் இவரது பெயரை குறிப்பிடுகிறது. நூஹ் (அலை) அவர்களுக்குப் பின்னர் மிக நீண்ட இடைவெளியில் இப்ராஹீம் (அலை) பிறக்கும் போது அல்லாஹ்வை இறைவனாக அவருடைய காலத்து மக்கள் அறிந்திருக்கவில்லை. இப்ராஹீம் (அலை) அவர்களுடைய தந்தை ஆசார் இப்னு நஹூர் வணங்குவதற்காக விக்கிரகங்களை செதுக்குபவராக இருந்தார். மரத்தினாலும் கற்களினாலும் அவர் செதுக்கும் சிலைகளை மக்கள் வணங்குவதை அவதானித்தார். சிலர் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் சூரியனையும் சந்திரனையும் வணங்கினர். இன்னும் சிலர் தங்களது அரசர்களையும் ஆட்சியாளர்களையும் வணங்கினர்.

தந்தை செதுக்கும் சிலைகள் கடவுளாக முடியாது என்ற ஞானத்தை அல்லாஹுத்தஆலா குழந்தைப் பருவத்திலேயே நபி இப்ராஹீமுக்கு கொடுத்திருந்தான். (அன்பியா 21:51)

இந்நிலையில் அவர் இறைவனைத் தேட ஆரம்பித்தார். வீட்டிலிருந்து வெளியேறி குகையொன்றில் தங்கினார். குகையிலிருந்து வானம் தெளிவாகத் தெரிந்தது. இரவாகியதும் நட்சத்திரங்கள் தோன்றின. அவரது சிந்தனையில் உதித்தவற்றை அல்லாஹ்தஆலா எங்களுக்கு எடுத்துச் சொல்கிறான். "ஆகவே அவரை இரவு மூடிக் கொண்ட போது அவர் ஒரு நட்சத்திரத்தைப் பார்த்தார், 'இதுதான் என் இறைவன்' என்று கூறினார். ஆனால் அது மறைந்த போது அவர், 'நான் மறையக் கூடியவற்றை நேசிக்க மாட்டேன்' என்று சொன்னார். (ஸூரத்துல் அன்ஆம் 6:76). பின்னர் சந்திரன் எழுவதைக் கண்ட அவர், 'பின்னர் சந்திரன் (பிரகாசத்துடன்) உதயமாவதைக் கண்டு, அவர், 'இதுவே என் இறைவன்' என்று கூறினார். ஆனால் அது மறைந்த போது அவர், 'என் இறைவன் எனக்கு நேர்வழி காட்டவில்லையானால், நான் நிச்சயமாக வழி தவறியவர்கள் கூட்டத்தில் (ஒருவனாக) ஆகிவிடுவேன்' என்று கூறினார். (ஸூரத்துல் அன்ஆம்6:77) பின் சூரியன் (மிக்க ஒளியுடன்) உதயமாவதைக் கண்டபோது, 'இதுவே என் இறைவன். இது எல்லாவற்றிலும் பெரியது என்று கூறினார். அதுவும் அஸ்தமிக்கவே, அவர், 'என் சமூகத்தாரே! நீங்கள் (ஆண்டவனுக்கு) இணைவைக்கும் (ஒவ்வொன்றையும்) விட்டு நிச்சயமாக நான் விலகி விட்டேன்' என்று கூறினார். (ஸூரத்துல் அன்ஆம்6:78)

வானம், நட்சத்திரம், சந்திரன், சூரியன் இவை அனைத்துக்கும் அப்பால் இவற்றைப் படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என அவர் சிந்தித்தார். இறுதியில் அல்லாஹுத்தஆலா, தானே இறைவன் என்பதனை நபி இப்ராஹீமுக்கு வெளிப்படுத்தி அவரை நேர்வழியில் செலுத்தினான். தான் பெற்றுக்கொண்ட நேர்வழியை மக்களுக்கு அறிவித்தார். 'இரவும், பகலும், சூரியனும், சந்திரனும் அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வையே வணங்குகிறவர்களாக இருந்தால் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஸுஜூது செய்யாதீர்கள் இவற்றைப் படைத்தவனாகிய அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்யுங்கள். (ஸூரத்துல் ஹாமீம் ஸஜ்தா 41:37) என்று கூறி தன்னை முதல் முஸ்லிமாக அறிவித்தார்.

இங்கு இப்ராஹீமுடைய தேடல் மிக முக்கியமானதாகும். தன்னைத் தேடுபவர்களுக்கே அல்லாஹுத்தஆலா தன்னை வெளிப்படுத்துகின்றான். அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுளர்கள் இல்லை என வெறுமனே சாட்சியமளிப்பதனை விட அல்லாஹ்வை அறிந்து அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை நபி இப்ராஹீமுடைய வரலாறு எமக்குச் சொல்கிறது. நபி இப்ராஹீமுடைய வரலாற்றில் உங்களுக்குப் படிப்பினை இருக்கிறது என்று அல்லாஹுத்தஆலா கூறுகிறான்.

கடவுளைப் பற்றித் தெரியாத ஒரு சமூகத்தில் அவர் எப்படி இறைவனைத் தேடிப் பெற்றுக் கொண்டார் என்பதிலும், இறைவன் படைத்தவற்றையும் மனிதர்களே படைத்துக் கொண்டவற்றையும் வணங்கிக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் எப்படி ஏகத்துவக் கொள்கையை முன்வைத்தார் என்பதிலும் அவரது சமூகம் வணங்குவதற்காக கடவுளையே படைத்த தனது தந்தையுடன் அவர் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதிலும் பல படிப்பினைகள் நமக்கு இருக்கின்றன. ஆகவே அல்லாஹ்வின் நண்பனான இப்றாஹீம் (அலை) அவர்களை நினைவுகூறுவோம். அவரது தியாகங்கள் அர்ப்பணிப்புகளில் படிப்பினைகள் பெறுவோம்.

ஈத் முபாரக்!

**பியாஸ் முஹம்மத்...**



# ஹஜ்ஜுப் பெருநாள்
## சிறப்பு மலர்



# குர்பான் கற்றுத்தரும் பாடங்கள்

உலகம் சந்திக்கின்ற நாட்களில் மிகச்சிறந்த நாளாக ஹஜ் பெருநாள் தினம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இதற்கான பின்னணியை பல கோணங்களில் ஆய்வு செய்யலாம்.

ஹஜ் பெருநாள் தினத்திற்கு "யவ்முன் நஹ்ர்" பிராணிகளை அறுத்து பலியிடும் நாளென்றும் ஒரு பெயர் உள்ளது. காரணம் துல்ஹிஜ்ஜா மாதத்தின் 10 வது நாளிலும் அதனை பின்தொடர்ந்து வருகின்ற “அய்யாமுத் தஷ்ரிக்” என்று அழைக்கப்படுகின்ற துல்ஹிஜ்ஜா மாதத்தின் 11,12,13 ஆவது நாட்களிலும் ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற பிராணிகளை அல்லாஹ்வுக்காக அறுத்து பலியிடுவதை இஸ்லாம் ஒரு முக்கியமான வணக்கமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

"ஹலீலுல்லா" அல்லாஹ்வின் உற்ற தோழர் என்றழைக்கப்படும் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவரின் அருமை மகனார் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அறுத்து பலியிடும்படி அல்லாஹ்வின் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தனது வயோதிப பருவத்தில் தவமாய் தவமிருந்து அல்லாஹ்விடம் யாசித்து பெற்றெடுத்த தனது தமையனின் அன்பு உயிர் முழுவதும் வியாபித்திருந்த தருணத்தில், அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்த இக்கட்டளை, இப்ராஹீம் (அலை அவர்களுக்கான மிகப்பெரும் சோதனையாகவே பார்க்கப்பட்டது. சோதனைகளை எதிர்கொள்வதிலும் சவால்களை சமாளிப்பதிலும் மலை போன்ற உறுதியுடன் செயல்படும் இப்ராஹீம் (அலை) அவர்கள், இச்சோதனையையும் எதிர்கொள்ள தயாராகி விட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்று முகமாக தனது மகனை அறுத்து பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்கள், இது பற்றி தனது மகனோடு செய்த கலந்தாலோசனையையும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளையும் புனித அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகின்றது.

***"எனவே இஸ்மாயில் (அலை), அவருடன் சேர்ந்து உழைக்கக்கூடிய பருவத்தை அடைந்த பொழுது, அவர் தன் மகனிடம் என் அருமை மகனே! நிச்சயமாக நான் உன்னை அறுத்து பலியிடுவதாக கனவில் கண்டேன். இதைப்பற்றி நீ என்ன அபிப்பிராயப்படுகிறாய் என்று கேட்டார், அதற்கு இஸ்மாயில் (அலை) அவர்கள், என் அருமை தந்தையே! நீங்கள் ஏவப்பட்டதையே செய்யுங்கள். அல்லாஹ் நாடினால் என்னை நீங்கள் பொறுமையாளர்களில் உள்ளவனாக காண்பீர்கள்" என்று பதில் கூறினார். (அல்குர்ஆன் 37:102)***

இவ்வசனத்தினூடே அல்லாஹுத்தஆலா இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் இஸ்மாயில் (அலை) அவர்களுக்கும் கொடுத்திருந்த அற்புதமான அசைக்க முடியாத இறை நம்பிக்கையின் உச்சத்தை விளக்குகிறான். "குர்பான்" எனும் வார்த்தையின் பொருளை தத்ரூபமாக தன் வாழ்வில் வெளிப்படுத்திய ஒரு தந்தையையும் தனையனையும் அல்குர்ஆன் உலகம் முடியும் வரை வரப் போகின்ற மனித சமுதாயத்திற்கான முன்னுதாரணமாக அடையாளப்படுத்தியுள்ளது. "குர்பான்" எனும் அரபு பதம் பலியிடுதல், தியாகம் செய்தல் என்னும் பொருளைத் தாங்கி நிற்கின்றது.

இவ்வுலக வாழ்வை ஒரு மனிதன் அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தால் நிச்சயமாக அவன் பல விடயங்களை “குர்பான்” தியாகம் செய்ய வேண்டும் என்பதை இறை நியதியாக அல்லாஹ் ஆக்கி வைத்துள்ளான். இதில் யாரும் விதிவிலக்காக இருக்க முடியாது. இதில் நபிமார்கள், ரசூல்மார்கள், இறைநேசர்கள், நல்லடியார்கள், தனவந்தர்கள், ஏழைகள், படித்தவர்கள், பாமரர்கள் என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் தியாகங்கள் பல செய்தே இவ்வாழ்வை கடந்து செல்ல வேண்டி உள்ளது.

ஆனாலும் ஒரு இஸ்லாமியனது அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிநாதமாக திகழ்கின்ற "இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" ‘நாங்கள் நிச்சயமாக அல்லாஹ்வுக்காகவே வாழ்பவர்கள். மேலும் நிச்சயமாக அவன் பக்கமே மீள்பவர்கள்’ என்ற கோட்பாடு இவ்வுலக வாழ்வின் அனைத்து சவால்களையும் சோதனைகளையும் சுலபமாக்கி விடுகின்றது. இதற்கு அப்பால் அல்லாஹ்வுக்காக "குர்பான்” தியாகம் செய்வதை இறைநேசச் செம்மல்கள் மனம் உவந்து மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார்கள். அல்லாஹ்வுக்காக தன்னுயிரை துச்சமாக மதித்து அதை துறந்து விடவும் எக்கணமும் தயாராக இருப்பார்கள். அதைத்தான் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்ய முனைந்தார்கள். தன் மகனை அல்லாஹ்வுக்காக அறுத்து பலியிட வேண்டுமென்ற கட்டளை வந்ததும் கொஞ்சமும் தயக்கமின்றி தன் மகனிடம் அதற்கான அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். மகனும் அல்லாஹ் தன்னை அவனுக்காக "குர்பான்" அர்ப்பணிப்பு செய்வதற்காகவே படைத்துள்ளான் என்பதை உலகத்தார்க்கு சொல்லும் வகையிலேயே பதிலுரைத்தார்கள்.

அறுத்து பலியிடுவதற்கு அபிப்பிராயம் கேட்ட தனது தந்தையை கனிவாக என் அருமை தந்தையே… என்றழைத்து நீங்கள் ஏவப்பட்டதை செய்து முடியுங்கள் என உறுதியான ஈமானுடன் கூறினார். இஸ்மாயில் (அலை) அவர்கள் தனது தந்தைக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து இடப்பட்ட இக்கட்டளையை அவர் செவ்வனே நிறைவேற்றுவதற்காக முன்வைத்த முத்தான சில ஆலோசனைகள் கீழ்வருமாறு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

**"என் அருமை தந்தையே… நீங்கள் என்னை அறுக்கும்போது எனது கைகளை நன்றாக கட்டிக்கொள்ளுங்கள். காரணம் நான் வலியால் அங்கும் இங்கும் அசைந்து தாங்களுக்கு இடைஞ்சல் தராமல் இருப்பதற்காக… அவ்வாறே என்னை முகம்குப்புறப்போட்டு அறுத்து விடுங்கள். காரணம் அறுக்கும் போது என் முகத்தை நீங்கள் பார்த்தால் என் மீது பரிவு கொண்டு கடமையை நிறைவேற்றாமல் விட்டு விடலாம். மேலும் தாங்கள் என்னை அறுப்பதற்கு பயன்படுத்தும் கத்தியை நன்றாக கூர்மையாக்கிக் கொள்ளுங்கள். காரணம் உங்களுக்கு இடப்பட்ட கட்டளையை அவசரமாக நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், அறுக்கும் போது எனக்கு ஏற்படும் வேதனையை குறைப்பதற்காகவும் என்றுரைத்தார்கள். தொடர்ந்தும் கூறினார்கள்! எனது தாய்க்கு என் ஸலாத்தை எத்தி வையுங்கள், என்னை எப்படி அறுத்து பலியிட்டீர்கள் என்பது பற்றி என் தாய்க்கு ஒருபோதும் குறிப்பிட்டு விடாதீர்கள். என் வயதை உடைய எந்த சிறுவர்களையும் நம் வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம். காரணம் என் தாய்க்கு என் பற்றிய நினைவுகள் வந்து அது அவரை வேதனையில் ஆழ்த்தக்கூடும் என்று கூறினார்கள்.** *(ஆதாரம்: அல் ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன், 15;104.)*

இஸ்மாயில் (அலை) அவர்களிடமிருந்து வந்த வார்த்தைகளின் கருத்தாழத்தைப் பார்க்கின்ற போது அவரது ஈமானிய பலத்தையும், ஆன்மீக முதிர்ச்சியையும், அறிவு பின்புலத்தையும், அவரிடம் காணப்பட்ட உயர் விழுமியங்களையும் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இவ்வுலக வாழ்வின் உண்மை நிலையையும், இவ்வுலக வாழ்வு பற்றிய ஒரு இறை விசுவாசியினது அவதானம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் இஸ்மாயில் (அலை) அவர்களது வார்த்தைகள் தெளிவாக விளக்குகின்றன. இவ்வுலக வாழ்க்கையில் எமக்கு கிடைக்கப்பெற்றிருக்கின்ற அனைத்து வளங்களும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற அருட்பாக்கியங்களாகும்.

எனவே அவைகளில் இருந்து எதனை அவன் எம்மிடம் கேட்டாலும் எவ்வித தயக்கமுமின்றி மனமுவந்து மகிழ்வோடு அதைக் கொடுப்பதுதான் ஒரு உண்மையான இறை விசுவாசியின் பண்பாக இருக்க வேண்டும் என்பதனை மேற்குறித்த நிகழ்வினூடே எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு உண்மையான இறைவிசுவாசிக்கு இவ்வுலக வாழ்வு ஒரு சிறை கூடமாகவும், ஒரு மிகப்பெரும் சோதனைக் களமாகவுமே அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு இறை விசுவாசிக்கு அல்லாஹ்வோடு காணப்படும் நெருக்கத்தின் அளவே சோதனைகளும் அவனை சூழ்ந்து கொள்கின்றன.

எனவே ஒரு முஃமின் எச்சந்தர்ப்பத்திலும் சோதனைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளதன்னைமுழுமையாகதயார்படுத்திக் கொள்ள வேண்டும். சோதனைகளிலிருந்து வெற்றி பெற்று வாழ்வை வளமானதாகவும் செழிப்பானதாகவும் மாற்றிக்கொள்ள தன்னை முழுமையாக "குர்பான்" தியாகம் செய்ய வேண்டுமென்பதனை இத்தியாகத் திருநாளில் செய்யப்படும் "குர்பான்" எனும் உயரிய வணக்கம் எமக்கு உணர்த்துகின்றது.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம்.சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)




# சகோதரத்துவ ஒற்றுமையை ஊக்குவிக்கும் நன்னாள்

ஹஜ் பெருநாள் என்கிற ஈதுல் அழ்ஹா தியாகத் திருநாள் இஸ்லாத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க பெருநாளாகும். இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அல்லாஹ்வுக்காக அவனது கட்டளைக்கு கீழ்ப்படிவதற்கான ஒரு செயலாகப் பலியிடத் தயாரானதை இந்நாள் நினைவுபடுத்துகிறது. இருப்பினும், இந்த அறுத்து பலியிடல் நடைபெறுவதற்கு முன்பு, அல்லாஹ் இஸ்மாயீல் (அலை) அவர்களுக்குப் பதிலாக ஒரு ஆட்டை இறக்கி வைத்தான். இதை இப்ராஹீம் (அலை) அவர்கள் அறுத்துப் பலியிட்டார். இதனை நினைவுபடுத்தும் முகமாகவே இத்தியாகத் திருநாளில் குர்பான் கிரியை நிறைவேற்றப்படுகிறது. 'துல் ஹஜ்' மாதமானது பல சிறப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

இத்திருநாளின் மார்க்க ரீதியான முக்கியத்துவங்களுக்கு அப்பால், இது சமூகத்துக்குள் ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான ஒரு ஊக்கியாக உள்ளது. அத்தோடு ஒற்றுமை, இரக்கம், மனிதாபிமானம் மற்றும் பலதரப்பட்ட பின்னணியில் உள்ள தனிநபர்களிடையே ஒரு ஒருமை உணர்வை வளர்க்கிறது, குடும்பங்கள், அயலவர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் இடையே வலுவான உறவையும் பிணைப்பையும் வளர்க்கிறது.

அதேநேரம் சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதில் ஹஜ் பெருநாளுக்கு முக்கிய பங்குள்ளது. குறிப்பாக ஹஜ்ஜுப் பெருநாளானது மஸ்ஜித்கள், திறந்தவெளிகள் அல்லது நியமிக்கப்பட்ட தொழும் பகுதிகளில் நடைபெறும் கூட்டு தொழுகையுடன் ஆரம்பமாகிறது. சமூகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஒன்றுபட்ட சமூகமாக தொழுகையை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பத்தை இந்நாள் ஏற்படுத்தி தருகிறது. சமூக அந்தஸ்து, இனம் அல்லது பிரதேசம் எதுவாக இருந்தாலும், அனைவரும் தோளோடு தோள் நின்று, சமத்துவத்தையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் நாளாக உள்ளது. இக்கூட்டு வழிபாடு மக்களிடையே கூட்டுணர்வையும் இஸ்லாம் வலியுறுத்தும் சகோதரத்துவ விழுமியங்களையும் வலுப்படுத்துகிறது.

மேலும் அல்லாஹ்வுக்காக ஆடு, மாடு அல்லது ஒட்டகத்தை பலியிடுவதும் இந்நன்னாளில் ஆரம்பமாகும் கிரியையாக உள்ளது.

இவ்வாறு பலியிடப்படும் பிராணியின் இறைச்சி மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு, ஒரு பகுதி குடும்பத்திற்கும், இன்னுமொரு பகுதி உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும், அடுத்ததாக ஏழைகளுக்காகவும் பகிர்ந்தளித்தக்கப்படும். குர்பானை பகிர்ந்து கொள்ளும் இந்நடைமுறை தாராள மனப்பான்மை, பச்சாதாபம் மற்றும் பிறரைக் கவனித்துக்கொள்வதன் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. இது ஈகை கலாசாரத்தை ஊக்குவிக்கிறது, அங்கு தனிநபர்கள் ஒன்று கூடி, ஒவ்வொருவரும் தங்கள் சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல், பெருநாளன்று தங்களது உணவை சந்தோஷமாக புசிக்க வழிவகுக்கிறது. இந்த செயல் உறவுகளின் பிணைப்பை வலுப்படுத்துவதோடு மற்றவர்களின் தேவைகளை கவனத்தில் கொள்ள தனிநபர்களையும் ஊக்குவிக்கிறது.

மேலும் ஈதுல் அழ்ஹா குடும்பங்களுடனும் நண்பர்களுடனும் கூடிக் கொண்டாடும் பெருநாளாகும். இந்நாளில் மக்கள் ஒருவருக்கொருவர் வீடுகளுக்குச் சென்று, வாழ்த்துகளைப் பரிமாறி, உணவைப் பகிர்ந்து கொள்வார்கள். இந்த தரிசிப்புகள் மூலம் நெருங்கியவர்களுடன் மீண்டும் இணைவதற்கும், குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதற்கும், மற்றும் அறுந்த உறவுகளை சீர்செய்வதற்கும் ஹஜ் பெருநாள் வாய்ப்பளிக்கிறது. அண்டை வீட்டாரும், சக ஊழியர்களும், தெரிந்தவர்களும் விருந்துகளில் கலந்துகொள்வது, அரவணைப்பு, அன்பு மற்றும் ஒற்றுமையுடன் கூடிய சூழலை உருவாக்குகிறது.

அதேநேரம் ஹஜ் பெருநாள் முஸ்லிம்களின் பெருநாளாக இருந்தாலும் ஏனைய சமய, கலாசாரங்களை சேர்ந்தவர்களும் இந்நன்னாளின் கொண்டாட்டங்களிலும் விருந்துபசாரங்களிலும் கலந்து அழைத்துக் கொள்ளப்படுகின்றனர். இது சமய, கலாசாரங்களுக்கு இடையில் நல்லெண்ணங்களையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்பவும் வழிவகுக்கக்கூடியதாக உள்ளது.

அதனால் ஹஜ்ஜுப் பெருநாளானது சகோதரத்துவ ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான சக்திவாய்ந்த தளமாக மாத்திரமல்லாமல் ஏனைய சமூகத்தினருடனும் நல்லெண்ணங்களையும் புரிந்துணர்வையும் மேம்படுத்திக் கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பமாகவும் அமைந்துள்ளது.

எனவே இந்நன்நாளில் கூட்டுத் தொழுகை, குர்பானைப் பகிர்ந்தளித்தல், உறவினர்களையும் நண்பர்களையும் சந்தித்தல், உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளல், நலனோன்புச் செயல்களில் ஈடுபடல் என்பன தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையே வலுவான பிணைப்புகளை வளர்ப்பதற்கும் பங்களிக்கும். அதனால் இந்நன்னாளை உச்சளவில் பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்போம்.

காலித் ரிஸ்வான்...




# நேசம் பொங்கும் பெருநாள்

ஓடும் ஸம்ஸம் நீராலே
உடலும் உளமும் சுகந்தமாம்
புனித மக்கா மண்ணிலே
பாதம் படுவது அருட்கொடையே
நாடும் பாக்கிய மில்லையெனின்
பெருகி நிற்கும் செல்வத்திலே
திரைந்து போன பாலைப்போலே
பொங்கி வற்றிப் படிந்திடுமே.

சுவர்க்கத்து மண்ணை மிதிப்பவனே
மனிதப் புனிதன் ஆகின்றான்.
ஓகோ, அந்தத் தியாகந்தான்
இப்றாஹீம் நபியின் நாமத்தால்
தீனின் மாண்பு சொப்பனம்தான்
தீய குணங்களை அழித்தொழித்து
அழகிய வதனத்தில் பூத்திடுமாம்
புனித ஹஜ்ஜுப் பெருநாளாம்.

பொல்லா கோபங் களைந்திடவே
மனித நேயம் மிளிர்ந்திடும்
பாரீர் அரபா மைதானத்தின்
உண்மைக் காட்சிப் பரவசத்தை
அருளின் ஒளியில் அழகினிலே
தூய மனங்கள் அகமகிழ.
நேசம் பொங்கக் கொண்டாடும்
புனித ஹஜ்ஜுப் பெருநாளாம்.

இக்பால் அலி...

# மகத்துவம் மிக்க ஹஜ் பெருநாள்

முஸ்லிம்களுக்கு இரண்டு பெருநாட்கள் உள்ளன. அவற்றில் ஒன்று 'ஈதுல் பித்ர்' எனப்படும் நோன்புப் பெருநாள், மற்றையது 'ஈதுல் அழ்ஹா' எனப்படும் ஹஜ் பெருநாளாகும்.

இஸ்லாமியப் பெருநாட்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை. அவை மிக உயர்ந்த ஆன்மீக ஒழுக்கத் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

ஹஜ் கடமையை நிறைவேற்றிய முஸ்லிம்களும் ஏனைய முஸ்லிம்களும் புசிப்பதற்குத் தகுந்த பிராணிகளை அறுத்து எளியவர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு பகிர்ந்து தங்களுடைய நன்றியை வெளிப்படுத்துகின்றார்கள். தானதர்மங்களையும், குர்பானி பொருட்களையும் வழங்குவது பெருநாட்களின் மிக முக்கியமான அம்சங்களாகும். இவ்வாறு நன்றி செலுத்துவது ஆன்மீக உணர்வையும், மனிதாபிமான உணர்வையும் ஒருங்கிணைக்கும் ஒரு உன்னத செயலாகும். இந்த மாண்பினை இஸ்லாத்தை தவிர வேறு எங்கும் காணவியலாது.

ஒவ்வொரு பெருநாளும் இறைவனை நினைவு கூற வழிவகுப்பதாகும். முஸ்லிம்கள் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும் வேளையிலும், இறைவனைத் தொழுதே அந்நாளை ஆரம்பிக்கிறார்கள்.

இறைவன் தங்களுக்கு அருளிய நலன்களையும், பலன்களையும் நினைவு கூறும் வகையில் அவனைத் தொழுது அவன் திருநாமத்தைப் போற்றிப்புகழ்கிறார்கள். அத்தோடு இறந்து போனவர்களின் ஆத்ம நலனுக்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகிறார்கள்.

வறியவர்களுக்கு உதவி செய்கிறார்கள். துன்பங்களில் உழல்பவர்களுக்கு கருணை காட்டுகிறார்கள். நோயுற்றவர்களைச் சென்று பார்த்து, அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார்கள். தங்களைப் பிரிந்து வெளியூர்களுக்குச் சென்றுள்ள நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் வாழ்த்துக்கள் அனுப்பி அவர்களையும் எண்ணிப் பார்க்கின்றார்கள். இப்படி எல்லோரையும் எண்ணிப் பார்க்கின்ற ஒருநாளாக பெருநாள் விலங்குகின்றது.

ஒவ்வொரு பெருநாளும் ஒரு வெற்றித் திருநாளாகும். தனது கடமைகளை நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் நிறைவேற்றி வந்த ஒவ்வொருவரும் வெற்றியாளராவார். ஏனெனில் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளவும், தன்னுடைய ஆசைகளை முறைப்படுத்திக் கொள்ளவும் பெருநாள் வாய்ப்பாக அமைகிறது. இப்பெருநாளை வரவேற்கும் போது அவர் உண்மையிலேயே தனது வெற்றிக்கு விழா எடுக்கின்றார் என்றே பொருள். ஆகவே ஈத் எனும் பெருநாள் ஒரு வெற்றித் திருநாளாகும். ஒவ்வொரு ஈத் பெருநாளும் நன்மைகளின் அறுவடை நாளாகும். இறை பணியில் ஈடுபட்டிருந்த நல்லடியார்கள், நம்பிக்கையாளர் அனைவரும் தங்களது நற்செயல்களுக்கான பலன்களை அப்பெருநாளன்று அறுவடை செய்கின்றார்கள். இறைவனும் தனது கருணையையும் பாக்கியங்களையும் வாரி வழங்குகின்றான்.

இதன் அடிப்படையில், மனித நலனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு விடயங்களை அல்லாஹுத்தஆலா அமைத்து வைத்துள்ளான். அந்த வகையில் மனித குலத்தின் நலனைக் கருத்தில் கொண்டு துல்ஹஜ் மாதம் நிறைவேற்றும் ஓர் அமலாக உழ்ஹிய்யாவைக் குறிப்பிடலாம். அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள், 'பெருநாளுடைய தினத்திலும் அய்யாமுத் தஷ்ரீக் (துல்ஹஜ் பிறை: 11,12,13) நாட்களிலும் (உழ்ஹிய்யா) அறுக்கலாம்' (ஆதாரம் இப்னு ஹிப்பான்) என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதனால் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய பிராணிகளை உழ்ஹிய்யாவாகக் கொடுக்கலாம்.

எனவே, ஈதுல் அழ்ஹா தியாகத் திருநாளை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வதோடு, அன்றை தினம் நிறைவேற்ற வேண்டிய முக்கிய கடமையான உழ்ஹிய்யாவையும் நிறைவேற்றி அளப்பறிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வோம்.

ஈத் முபாரக்!

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்...
(அல் அஸ்ஹரி), வெலிகம




## முஸ்லிம்களின் நற்செயல்களை இறைவன் அங்கீகரிக்கட்டும்



ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாளை இன்று கொண்டாடும் உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் மற்றும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் ஒற்றுமையை முதன்மைப்படுத்தி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஹஜ் என்பது முஸ்லிம்களின் வாழ்க்கையை வடிவமைக்கும் இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாகும். ஹஜ் யாத்திரை மூலம் உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான இஸ்லாமியர்கள் அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும் அகற்றும் ஒரே நோக்கத்துடன் அல்லாஹ்வின் முன் சமமாக பிரார்த்தனை செய்து வருகின்றனர். சாந்தி சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை வலியுறுத்திய வண்ணம் புனித ஹஜ் பெருநாளை முஸ்லிம்கள் கொண்டாடுகின்றனர். இன்று ஹஜ் பெருநாள் கொண்டாடும் முஸ்லிம்களின் அனைத்து நற்செயல்களையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள நான் பிரார்த்தனை செய்கின்றேன் என்றுள்ளார்.

## தியாகத்திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட வாழ்த்துகிறேன்



இறை உணர்வோடும், தியாக சிந்தனையோடும் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய மக்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இப்றாஹீம் நபி அவர்களும் அவரது குடும்ப உறுப்பினர்களும் இறைவனுக்காக மேற்கொண்ட பெரும் அர்ப்பணிப்புகளை நினைவுகூர்ந்து உலக வாழ் முஸ்லிம்கள் மிகுந்த பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் இத்திருநாளை கொண்டாடுகின்றனர்.

நபிகள் நாயகம் அளித்த போதனைகள், தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் கடைப்பிடிக்க வேண்டிய உன்னதமான நோக்கங்கள் என்பதை உணர்ந்துள்ள அவர்கள், அதன் வழி நின்று அடி பிறழாமல் பின்பற்றி இப்பெருநாளை ஆண்டுதோறும் கொண்டாடுகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது. இத்திருநாளில், திருக்குரான் போதிக்கும் உயரிய நெறிமுறைகளான அன்பு, அமைதி, மனிதநேயம் ஆகியவற்றை மக்கள் அனைவரும் மனதில் நிறுத்தி, அன்புடனும், சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையாக வாழ்ந்திடவும் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றுள்ளார்.

## நெருக்கடிகள் நீங்கிட இறைவனிடம் வேண்டுவோம்



சமூக, சமய, பொருளாதார, அரசியல் ரீதியிலான பல்வேறு விதமான நெருக்கடிகள் தோன்றியுள்ள இக்காலகட்டத்தில் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திப்போமாக என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இறைவனால் அனுப்பப்பட்ட இறைத் தூதர்களான நபி இப்ராஹீம் (அலை) மற்றும் அவரது புதல்வர் நபி இஸ்மாயில் (அலை) ஆகியோரின் அளப்பரிய தியாகத்தை நினைவு கூரும் வகையில் உலகளாவிய முஸ்லிம்கள் ஆண்டுதோறும் புனித ஹஜ் யாத்திரையை மேற்கொள்கின்றனர். அல் குர்ஆனையும், முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்க்கை வழிமுறைகளையும் பின்பற்றியொழுகி, சன்மார்க்கக் கடமைகளை சிறப்பாக அனுசரிப்பதோடு, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் நிலவுவதற்கும், அதனூடாக நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கும் அர்ப்பண சிந்தையோடு செயற்படுவதற்கு தியாகத் திருநாளில் உறுதி பூணுவோமாக.

## சமூகங்களுக்கிடையில் சகவாழ்வு, அமைதி மேலோங்க பிரார்த்திப்போம்



நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகத்தை வலியுறுத்தி நிற்கின்ற புனித 'ஹஜ் பெருநாள்' தினமான இன்றைய நன்னாளில் நாட்டிலும் சமூகத்திலும் அமைதி, சகவாழ்வு, இனங்களிடையே சுபீட்சம், ஒற்றுமை நிலவ இருகரமேந்தி பிரார்த்திப்போமென பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இப்றாஹீம் (அலை) மற்றும் இஸ்மாயில் (அலை) ஆகியோர்களின் தியாகத்தை வலியுறுத்தி நிற்கின்ற இன்றைய ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் உலகளாவிய முஸ்லிம் உம்மத் புனித மக்கமா நகரில் ஒன்றுகூடி இறைவனுக்கு முழுமையாக அடிபணிந்தவர்களாக ஒற்றுமையை முழு உலகிற்கும் பறைசாற்றுகின்ற ஒரு நன்னாளாக இன்றைய நாள் அமைந்து காணப்படுகிறது. அந்த வகையில், இஸ்லாமும் கூட இனங்களுடன் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழுமாறு எம்மை எடுத்தியம்புகிறது. எமது தாய் நாட்டிலும் இனங்களிடையே அமைதி, சகவாழ்வு, சுபீட்சம், ஒற்றுமை ஏற்பட இன்றைய நன்னாளில் அனைவரும் பிராத்திப்போம்.

## முஸ்லிம்கள் உள்ளிட்ட எல்லா மக்களுக்கும் பெருநாள் வாழ்த்துகள்



நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகத்தை நினைவுகூரும் விதமாக, இஸ்லாமிய நாட்காட்டியின் பிரகாரம் துல்ஹஜ் மாதம் பிறை 10 இல் ஹஜ் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், மனித உயிரைப் பலியிடுவது தியாகமல்ல உன் உள்ளத்தில் இருக்கும் தீயவற்றைப் பலியிடுவதே தியாகம் என நரபலியை மறுதலித்த இறைவனின் கட்டளை வந்த நாளே ஹஜ் பெருநாள் என்ற தியாகத் திருநாளாகும். எனவே படிப்பினைகளைச் சுமந்துள்ள இந்நன்னாளில் மக்களின் உயிர்களுக்கு மதிப்பளித்து, அவர்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழத்தேவையான சூழலை அமைத்து கொடுக்க இந்நாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

## பொருளாதாரம் மேலோங்கி நாட்டில் சுபீட்சம் மலரட்டும்



மலரும் தியாகத் திருநாளில் அகிலமெங்கும் அல்லாஹ்வின் அருள் மழை பொழியட்டும் என கிராமியப் பொருளாதார இராஜங்க அமைச்சரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, ஒவ்வொரு வருடமும் நாம் கொண்டாடும் ஹஜ் பெருநாளானது எமக்கு பல விடயங்களைப் போதித்துச் செல்கிறது. இறைத்தூதர் இப்றாஹீம் (அலை) அவர்கள் ஏக இறைவனுக்கு எதையும் இணை வைத்து விடக்கூடாது என்பதற்காக பட்ட கஷ்டங்களை நாம் வாழ்வில் ஒரு கணமேனும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இறைவனின் வார்த்தை அவர்காட்டிய மதிப்பும் மரியாதையும் இன்று வரை கோடானு கோடி மக்களை புனித மக்காவை நோக்கி நகர வைத்துள்ளது என்பதை எண்ணும் பொழுது பக்தி மேலிடுகிறது.

இறைத்தூதர் இப்றாஹீம் (அலை) அவர்களும் அன்னாரது குடும்பத்தினரும் அல்லாஹுக்காக பட்ட துயரங்களையும், பிரயத்தனங்களையும், தியாகங்களையும் ஹஜ் கடமைகளாக ஹாஜிகள் அனுஷ்டிக்கின்றனர். இத்தியாகத்தின் அடிப்படையில் கொண்டாடப்படும் இப்பெருநாள் உலகிற்கு அமைதியையும் சமாதானத்தையும் பரிசளித்துச் செல்லட்டும்.

## இலங்கை மக்களின் செழிப்பான எதிர்காலத்திற்கு பிரார்த்திக்கிறேன்



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிறக்கான சவூதி அரேபிய தூதரகத்தின் சார்பாக, ஈத் அல்அழ்ஹா தியாகத் திருநாளை முன்னிட்டு இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, எல்லாம் வல்ல இறைவன் தனது புனித வீட்டைத் தரிசிக்கச் சென்றிருக்கும் ஹஜ் யாத்ரீகர்களின் ஹஜ் மற்றும் நற்செயல்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், அவர்கள் தங்களது அனைத்துக் கடமைகளையும் ஆரோக்கியமான நிலையில் நிறைவேற்றிக் கொள்ள அருள் புரிய வேண்டும் என்றும் பிரார்த்திப்பதோடு, யார் யாரெல்லாம் இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்திருந்தும் அதனை நிறைவேற்ற முடியாமல்போனார்களோ அவர்கள் அனைவரதும் நல் எண்ணங்களையும் ஏற்று அவர்களுக்கும் நிறைவான கூலிகளை வழங்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன். மேலும் இத்தியாகத் திருநாளை அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் மீண்டும் மீண்டும் கொண்டாடி மகிழ அருள் புரிய வேண்டும் எனவும், நட்புறவு மிக்க இலங்கை மக்களுக்கு முன்னேற்றம் மற்றும் செழிப்புடன் கூடிய நல்ல எதிர்காலம் கிட்டவேண்டும் எனவும் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

## முன்மாதிரிச் சமூகங்களை உருவாக்குவதே நபி இப்ராஹீம் (அலை)யின் இலட்சியங்கள்



இறைதூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகங்கள், முன்மாதிரிச் சமூகங்களை உருவாக்குவதையே அடித்தளமாகக் கொண்டிருந்ததாக, தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, இஸ்லாத்தின் இலட்சியங்கள் மானிடனை வழிப்படுத்தும் அடித்தளத்திலிருந்தே உதயமாகின. காலத்துக்கு காலம் தோன்றிய தீர்க்கதரிசிகள், இந்த மனுக்குல மீட்சிக்கான வழிகளையே தெளிவுபடுத்தினர். இப்ராஹீம் (அலை) அவர்கள் மேற்கொண்ட யாத்திரைகள், எதிர்கொண்ட சவால்கள் அனுபவித்த தியாகங்கள் அனைத்தும் நாகரீக சமூகத்தை உருவாக்குவதற்கான பிரயத்தனங்களாகவே இருந்தன. இறைவனின் ஏவல்களை எடுத்தியம்புவதில், இறைதூதர் இப்ராஹீம் (அலை) அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் எடுத்துக்கொண்ட பங்குகள் அளப்பரியன.

இப்ராஹீம் (அலை) அவர்களின் வழித்தோன்றலில் வந்த சமயங்கள், சாந்தி, சகோதரத்துவத்தையே நன்மாரயமாகப் போதிக்கின்றன. இந்த இலட்சியத்தில் இஸ்லாம் உறுதியாக உள்ளது. தியாகத்துக்கு துணிந்த சமூகமாக முஸ்லிம்களை காட்டி நிற்பதும் இத்தகைய இடப்பெயர்வுகள்தான். இந்த ஒரே இலட்சியத்துக்காக, இன்று புனித கஃபாவில் கூடியுள்ள முஸ்லிம்கள் சகலரதும் ஹலாலான எண்ணங்களை எல்லாம் வல்ல இறைவன் அங்கீகரிக்கட்டும். எல்லோருக்கும் "ஈதுல் அழ்ஹா" வாழ்த்துக்கள்.

## நபி இப்றாஹீமின் வாழ்வில் முன்மாதிரியான படிப்பினைகள்



தியாகத்தை எடுத்துக் காட்டும் இப்புனித தினத்தில் இஸ்லாமிய சகோதரர்களுக்கு இதயம் கனிந்த ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு அமைய அவரது ஒரே புதல்வரான இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முன் வந்தமையும் அதற்கு இறைவனின் பிரதிபலிப்பும் படிப்பினைகள் நிறைந்த நிகழ்வுகளாகும்.

உலகின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான இஸ்லாமிய சகோதரர்கள் தூய வெள்ளாடை அணிந்தவர்களாக புனித மக்கா கஃபாவில் ஒன்று கூடி ஹஜ் கடமையை நிறைவேற்றுகின்றனர். ஏழைபணக்காரன், படித்தவன் பாரமரன், வெள்ளையன் கறுப்பன் உள்ளிட்ட எவ்வித பாகுபாடுகளுமின்றி இறைவணக்கங்களில் ஈடுபடுகின்றனர். சகோதரத்துவத்தை வெளிப்படுத்துகின்றனர். எல்லோரும் 'லப்பைக் லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்... என்ற தக்பீரை ஒரே குரலை ஒரே நேரத்தில் எழுப்பி படைத்த இறைவனுக்கு சிரம் தாழ்த்தி அவனைப் பெருமைப்படுத்துகின்றனர். ஹஜ் யாத்திரையானது உலகிற்கு சமாதனத்தை எடுத்து காட்டுவதோடு இப்றாஹீம் (அலை) அவர்களின் அர்ப்பணிப்புக்களையும் நினைவுக்கு கொண்டு வருகிறது. ஆகவே அன்னாரின் தியாகங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்களில் படிப்பினைகள் பெற இந்நன்னாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

(பேருவளை விஷேட நிருபர்)

## பொருளாதார நெருக்கடி நீங்கி மகிழ்ச்சியான வாழ்வு கிட்டட்டும்



இறை கட்டளைகளுக்கு அடிபணிந்து தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலகவாழ் அனைத்து இஸ்லாமிய உறவுகளுக்கும் புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என்று ஊவா மாகாண ஆளுனர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, நபி இப்றாஹீம் (அலை) அவர்களினதும், அவர்களது மனைவி மற்றும் குழந்தையினதும் தியாகங்களை நினைவுபடுத்தும் முகமாக அல்லாஹ் இத்திருநாளை எமக்கு அருளியுள்ளான். அக்குடும்பத்தினரின் தியாகங்கள் முழு மனித சமூகத்திற்கும் சிறந்த முன்மாதிரியாகும். தனிமனிதர்களதும், குடும்பங்களதும் சமூகங்களதும் தியாகங்கள் மூலமே ஒரு நாடு வெற்றிகரமான எதிர்காலத்தை அடைய முடியும். இஸ்லாம் தியாகங்களின் ஊடாகவே வாழ்வில் வெற்றி அடைய முடியுமென்பதைப் போதிக்கின்றது. இந்நெருக்கடியான காலத்தில் நாட்டினதும் சமூகத்தினதும் நன்மைக்காக தன்னுடைய தனிப்பட்ட ஆசைகளை அர்ப்பணித்து மற்றவர்களுடைய தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர துணைபுரிய வேண்டும் என்றும், நாடு என்ற ரீதியில் நாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு மலரவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளார்.

(பதுளை தினகரன் விசேட நிருபர்)

## இப்றாஹீம் (அலை) யின் வாழ்வில் படிப்பினைகள் பெறுவோம்



ஹஜ்ஜுப் பெருநாளை இன்று கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு எனது மகிழ்ச்சிகரமான ஈதுல் அழ்ஹா நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம் பௌஸி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான புனித ஹஜ் கிரியைகள், நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தின் தியாகத்தை எடுத்தியம்புகிறது. இத்தியாகத்தின் அடியாகவே இஸ்லாம் பெரும் ஆலவிருட்சமாக உலகில் வளர்ந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது.

ஈதுல் அழ்ஹா புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் நாம் அதன் தத்துவம், நோக்கம், தாத்பரியங்களையும் அறிந்து எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் போதுதான் அது எமக்கு இவ்வுலக வெற்றியாக அமைகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாகரீகங்களின் தோற்றுவாய்க்கு வித்திட்டவர் இப்ராஹீம் (அலை)



உயரிய இலட்சியங்களை வெல்வதற்காக இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் செய்த தியாகங்கள், சவால்களை எதிர்கொள்வதற்கான தைரியங்களைத் தருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இறைதூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் இலட்சியங்கள், மனித வர்க்கத்துக்கு சிறந்த வழிகாட்டல்களாக உள்ளன. இடப்பெயர்வும் தியாகமும் என மிகப் பெரிய சவாலை வெற்றிகொண்ட நாகரீகங்களின் நாயகனாகவே இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்கள் திகழ்கிறார். ஏகத்துவத்தை நிலைநிறுத்த அவர் எதிர்கொண்ட சவால்கள், தியாகங்களை யூத மற்றும் கிறிஸ்தவ மதங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. இஸ்லாம் இவரது குடும்பத் தியாகங்களை மார்க்கமாக்கி, ஹஜ்ஜை புனித கடமையாக்கியுமுள்ளது.

ஒரு குடும்பத்தின் முன்மாதிரிகள், உலகில் பல நாகரீகங்களையே தோற்றுவித்திருக்கிறது. இத்தகைய குடும்பத்தினராக வாழ்வதற்கு, நாம் இந்நாளிலிருந்தாவது முயற்சிக்க வேண்டும். ஏனைய சமூகத்தினருக்கு முன்மாதிரியாகவும் வாழ்வோம்.

## முஸ்லிம்களின் மகிழ்ச்சிக்குரிய உன்னதமான நாள் ஈதுல் அழ்ஹா



ஈகைத் திருநாளான இந் நன்னாளில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு உழ்ஹிய்யா வழங்கி தானும் மகிழ்ச்சியடைந்து அடுத்த முஸ்லிம்களையும் மகிழ்வித்து கொண்டாடிக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள் அனைவருக்கும் இப்புனித தினத்தில் என்னுடைய மனம் நிறைந்த ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அல் ஹிக்மா நிறுவனத்தின் பணிப்பாளர் மௌலவி எம்.எச். ஷேஹுத்தீன் மதனி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நபி இப்றாஹீம் (அலை) அவர்களதும் அவர்களது குடும்பத்தினர்களதும் தியாகங்களை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள ஹஜ்ஜின் கடமைகள் அனைத்திலும் ஏகத்துவம் ஓரிறைக் கொள்கை நிலைநாட்டடப்பட்டுள்ளது. அன்னாரதும் அவர்களது குடும்பத்தினரதும் தியாங்களும் அர்ப்பணிப்புக்களும் படிப்பினைகளையும் முன்மாதிரிகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியவை. இந்நிலையில் ஹஜ் வணக்கத்தை நிறைவேற்றவென புனித மக்கா சென்றுள்ள இரண்டு மில்லியன் ஹாஜிகளுக்கும் சவூதி அரேபிய அரசு அனைத்து அடிப்படை வசதிகளையும் சிறப்பாகச் செய்து கொடுத்துள்ளது. உயர் ரகத்தில் போக்குவரத்து, உணவு, சுகாதாரம், தங்குமிட மற்றும் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஹாஜிகள் அனைவரும் சவூதி அரேபிய அரசினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ள மிகவும் பாதுகாப்பான சூழலில் எவ்வித அச்சமுமின்றி மன நிறைவுடன் தங்களது ஹஜ் கடமைகளை இனிதே செய்து கொண்டிருக்கின்றனர். அதனை சவூதி அரசும் அறிவித்துள்ளது.

இவ்வேளையில் உலகில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் ஹஜ்ஜுப் பெருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றனர். இதுவே முஸ்லிமுடைய உண்மையான மகிழ்ச்சியாகும்.

# அசோஸியேட்டட் மோட்டர் பினான்ஸ் கம்பனி பிஎல்சி

இல.89,ஹைட்பார்க் கோர்னர்,கொழும்பு -2. தொலைபேசி: 2687158/2687265/2682493, தொலைநகல்:2688760 மின்னஞ்சல்: info@amf.lk இணையதளம்:www.amf.lk (incorporated in 1962)

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டத்தின் 29(2)ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அறிக்கைகளைப் பிரசுரித்தல்

### இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று

| மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது | 2022/2023 ரூபா | 2021/2022 ரூபா |
|---|---|---|
| **மொத்த வருமானம்** | **3,986,498,558** | **2,580,779,777** |
| வட்டி வருமானம் | 3,880,860,398 | 2,467,760,084 |
| கழி: வட்டிச் செலவினம் | (2,187,630,642) | (1,519,247,143) |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,693,229,756** | **948,512,941** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 65,976,670 | 54,388,376 |
| தேறிய வர்த்தக வருமானம் | 349,361 | 2,033,364 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 39,312,129 | 56,597,953 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **1,798,867,916** | **1,061,532,634** |
| கழி: பெறுமதி இழப்பு நட்டங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | (414,444,607) | 422,617,554 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **1,384,423,309** | **1,484,150,189** |
| **கழி: தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | |
| ஆளணிச் செலவுகள் | (565,055,907) | (500,294,845) |
| சொத்து உபகரணங்களின் தேய்மானம் மற்றும் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை மாற்றியமைத்தல் | (84,387,310) | (76,979,481) |
| அசையா சொத்துக்களை கடனாக மாற்றுதல் | (3,899,480) | (5,337,001) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (224,210,726) | (311,585,945) |
| **நிதிச் சேவைகள் மீது வரிக்கு முன்னரான இலாபம்** | **506,869,886** | **589,952,917** |
| கழி: நிதிச் சேவைகள் மீதான வரி | (139,454,116) | (97,624,405) |
| **வரி விதிப்புக்குப் பின்னரான இலாபம்** | **367,415,770** | **492,328,513** |
| கழி: வருமான வரி (செலவினங்கள்) / திரும்பல்கள் | (166,952,732) | (192,859,554) |
| **வருடத்திற்கான தேறிய இலாபம்/ (நட்டம்)** | **200,463,038** | **299,468,960** |
| ஏனைய விரிவான வருமானம் / (செலவினம்), இலாபம் அல்லது நட்டம் என்று மீள்வகைப்படுத்தப்படாத பொருட்கள் மீதான தேறிய வரி | | |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | | |
| காலப்பகுதிக்கான நியாயப் பெறுமதியில் தேறிய மாற்றம் | 1,722,521 | 10,887,036 |
| காணி மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டின் மூலம் ஈட்டிய இலாபம் | 31,982,185 | - |
| ஓய்வுதிய நலன்புரி கடப்பாடுகள் - உண்மையான இலாபம்/(நட்டம்) | 1,180,882 | (1,042,657) |
| **தேறிய வரியில் வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் (செலவுகள்)** | **34,885,588** | **9,844,379** |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | **235,348,627** | **309,313,338** |
| **ஒரு பங்கின்மீது ஈட்டிய இலாபம்** | | |
| பங்கொன்றிற்கான அடிப்படை இலாபம் | 1.77 | 2.86 |

### தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்

| விடயம் | 31/03/2023 இல் உள்ளவாறு | | 31/03/2022 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | உண்மையானது | தேவையானது | உண்மையானது | தேவையானது |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 16.3% | 8.5% | 14.9% | 7.0% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 17.2% | 12.5% | 15.8% | 11.0% |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 22.3% | 10.0% | 24.1% | 10.0% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | 22.4% | | 13.8% | |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 10.8% | | 4.3% | |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 45.3% | | 16.0% | |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | 51.9% | | 68.8% | |
| **இலாபத்தன்மை** | | | | |
| தேறிய வட்டி இலாபம் (i) | 12.3% | | 6.7% | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (ii) | 2.4% | | 3.0% | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (iii) | 7.1% | | 13.1% | |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 65.8% | | 111.6% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்கதிரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 253.7% | | 375.5% | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | 25.3% | | 35.2% | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 12 | | 12 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் | [SL](B+) (Stable) | | [SL](B+) (Stable) | |
| **கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தண்டங்கள்** | | | | |
| தொகை (ரூபா மில்லியன்) | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் வைப்புக் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்த வைப்புக்கள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்) | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| வைப்புக்களின் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு/ ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்) | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| வைப்புக்களை முடக்குதல் | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்பாடுகள் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்த கடனபாடுகள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்) | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| கடன்பாடுகள் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு/ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்) | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| கடன்பாடுகளின் முடக்கம் | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்வழங்கல் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்தக் கடன் வழங்கல் சொத்துப்பட்டியல் மீதானஉச்சஎல்லை (ரூ.மில்) | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| கடன்வழங்கல் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு/ ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்) | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| புதிய கொடுகடன் வசதிகளை வழங்குதல் அத்துடன்/ அல்லது ஏற்கனவே உள்ள கொடுகடன் வசதிகளின் தவணைக் காலத்தை நீடித்தல் மீதான கட்டுப்பாடுகள் | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |
| **வேறு ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள்** | | | | |
| தயவுசெய்து குறிப்பிடவும் | ஏற்புடையதல்ல | | ஏற்புடையதல்ல | |

(i) வட்டி வருமானம் குறைவான வட்டிச் செலவுகள் மற்றும் வட்டி சம்பாதிக்கும் சொத்துக்களின் விகிதம்

| **ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்பாடுகள் கட்டுப்பாடுகள்** | | | | |
| கடன்பாடுகள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்) | எதுவுமில்லை | | எதுவுமில்லை | |
| கடன்பாடுகள் அளவைக் குறைத்தல் மாதம்/காலாண்டு/ஆண்டு ஒன்றிற்குக் (ரூ.மில்லியன்) | எதுவுமில்லை | | எதுவுமில்லை | |
| கடன் பாடுகள் மீகான முடக்கம் (ரூ.மில்லியன்) | எதுவுமில்லை | | எதுவுமில்லை | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் கடன் வழங்கல் கட்டுப்பாடுகள்** | | | | |
| மொத்தக் கடன் வழங்கல் சொத்துப்பட்டியல் மீதானஉச்சஎல்லை (ரூ.மில்லியன்) | எதுவுமில்லை | | எதுவுமில்லை | |
| கடன்வழங்கல் பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம்/காலாண்டு/ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்லியன்) | எதுவுமில்லை | | எதுவுமில்லை | |
| புதிய கொடுகடன் வசதிகளை வழங்குதல் அத்துடன்/அல்லது ஏற்கனவே உள்ள கொடுகடன் வசதிகளின் தவணைக் காலத்தை நீடித்தல் மீதான கட்டுப்பாடுகள் | எதுவுமில்லை | | எதுவுமில்லை | |
| **வேறு ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள்** | எதுவுமில்லை | | எதுவுமில்லை | |

## சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

**19 மே 2023 அன்று KPMG பட்டயக் கணக்காளர்களால் ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் நேரடி மொழிபெயர்ப்பு.**

**ஆங்கிலம் மற்றும் தமிழ் அறிக்கைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், ஆங்கில அறிக்கையே சரியானதாகக் கொள்ளப்படும்.**

**சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சியின் பங்குதாரர்களுக்கு நிதி அறிக்கைகளின் கணக்காய்வு அறிக்கை**

### அபிப்பிராயம்

நாங்கள் சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி ("கம்பனி") நிதிநிலை மற்றும் அதன் உப உரிமங்களின் 2023 மார்ச் 31ந் திகதியில் உள்ளவாறன ஒன்றித்த நிதிநிலைமைக் கூற்று மற்றும் அந்த திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக்கூற்று, ஒன்றித்த உரிமையாண்மை மாற்றங்கள பற்றிய கூறறு மற்றும் ஒன்றித்த காசுப்பாய்வுக் கூற்று ஆகியவற்றையும் கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு மற்றும் பிற விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய தொகுப்பு மற்றும் பிற விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய ஒன்றித்த நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்துள்ளோம். இவை இந்த ஆண்டு அறிக்கையின் பக்கங்கள் 115 முதல் 231 வரை குறிப்பிடப்பட்டுள்ளன.

எமது அபிப்பிராயப்படி, சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி மற்றும் அதன் உப உரிமங்களின் 2023 மார்ச 31ந் திகதியில் ஒன்றித்த நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் ஒன்றித்த நிதிச் சாதனை மற்றும் ஒன்றித்த காசுப்பாய்வுகள், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLAuSs) அமைய தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சகல பொருண்மையான விடயங்கள் தொடர்பிலும் உண்மையான, நேர்மையான தோற்றப்பாட்னடத் தருகின்றன.

### அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நாம் எமது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொண்டோம். இந்த நியமங்களின் படி, எமது பொறுப்புக்கள் எமது அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நெறிமுறை விதிமுறைகளின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமான முறையில் நாம் கம்பனியில் இருந்து சுயாதீனமாக காணப்படுவதுடன் இத்தேவைப்பாடுகளுக்கு இணக்கமான வகையில் நம் நெற்முறைத் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்துள்ளோம் நாம் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சான்றுகள் எமது அபிப்பிராயத்திற்கான ஓர் அடிப்படையினை வழங்குவத்ற்குப் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

### முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பது எமது தொழில்சார் சுயதீர்ப்பில், தற்போதைய காலத்தின் நிதிக்கூற்றுகளை நாம் கணக்காய்யு செய்வதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இந்த விடயங்கள் ஒட்டுமாத்தமாக நிதிக்கூற்றுக்களை நாம் கணக்காய்வு செய்த மற்றும் எமது அபிப்பிராய்த்தை உருவாக்கிய பின்னணியில் கையாண்டி ருப்பதுடன், இந்த விடயங்களில் நாங்கள் ஒரு தனியான அபிப்பிராயத்தை வழங்கவில்லை.

**வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் குத்தகை மற்றும் வாடகை கொள்முதல் ஆகியவற்றில் நிகர முதலீடு குறைவதற்கான கொடுப்பனவு**

நிதிக்கூற்றில, குறிப்பு 3 (கணிடசமான கணக்கியல் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்), குறிப்பு 17 (வலுக்குறைப்பு மற்றும் பிற கடன் இழப்புகள்), குறிப்பு 30 (வலுக் குறைக்கப்பட்ட கடன்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறத்தக்கவைகள்) மற்றும் குறிப்பு 31 (குத்தகை மற்றும் வாடகைக்கு வாங்குவதில் நிகர முதலீடு) ஆகியவற்றை பார்க்கவும்.

அடுத்த பக்கத்திற்கு தொடரவும்

| லாபம் அல்லது இழப்பு மற்றும் விரிவான வருமானத்தின் அறிக்கை | குழு | | கம்பனி | |
|---|---|---|---|---|
| 31 மார்ச் உடன் முடிவுற்ற வருடம் | **2023 ரூபா.'000** | 2022 ரூபா.'000 | **2023 ரூபா.'000** | 2022 ரூபா.'000 |
| **ஆண்டுக்கான லாபம்** | **7,559,000** | 7,276,139 | **4,965,067** | 5,355,419 |
| **மற்ற விரிவான வருமானம் / (செலவு) வருமான அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்பட வேண்டும்** | | | | |
| **ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயமான மதிப்பில் கடன் பத்திரங்களில் நியாயமான மதிப்பு ஆதாயம் / (இழப்பு)** | | | | |
| கணக்கு முதலீட்டாளர்களின் பங்கு, வரிக்குப்பின் | **498,520** | (426,030) | **-** | - |
| **மொத்த மற்ற விரிவான வருமானம் / (செலவு) வருமான அறிக்கைகக்கு மறுவகைப்படுத்தப்பட வேண்டும்** | **498,520** | (426,030) | **-** | - |
| **மொத்த மற்ற விரிவான வருமானம் / (செலவு) வருமான அறிக்கைகக்கு மறுவகைப்படுத்தப்படக்கூடாது** | | | | |
| தெளிவான நன்மைத் திட்டங்களில் இயல்பான ஆதாயங்கள் / (இழப்புகள்) | **(45,247)** | 8,883 | **(52,660)** | (4,228) |
| வரி விளைவு | **13,573** | (1,514) | **15,798** | 1,015 |
| | **(31,674)** | 7,369 | **(36,862)** | (3,213) |
| கணக்கு முதலீட்டாளர்களின் பங்கு, வரிக்குப்பின்னர் | **(8,111)** | 1,048 | **-** | - |
| **நிலம் மற்றும் கட்டிடங்களின் மறுமதிப்பீடு** | | | | |
| **நிலம் மற்றும் கட்டிடங்களின் மறுமதப்பீட்டு வருமானம்** | | | | |
| சாதரண பங்கு கணக்கில் முதலீடு செய்பவரின் பங்கு, வரிக்குப் பின்னர் | **66,546** | 38,532 | **-** | - |
| வருமான வரி விகிதத்தின் மாற்றத்தால் மீள்மதிப்பீட்டு இருப்பு மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி தாக்கம் | **(453,286)** | - | **(278,959)** | - |
| வருமான வரி விகிதத்தின் மாற்றத்தால் மீள்மதிப்பீட்டு இருப்பு மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி தாக்கம் - சாதாரண பங்கு கணக்கில் முதலீடு செய்பவரின் பங்கு | **(42,718)** | - | **-** | - |
| **மொத்த மற்ற விரிவான வருமானம் / (செலவு) வருமான அறிக்கைகக்கு மறுவகைப்படுத்தப்படக்கூடாது** | **(469,243)** | 46,949 | **(315,821)** | (3,213) |
| **ஆண்டுக்கான பிற விரிவான வருமானம் / (செலவு) (வரிக்குப் பின்னர்)** | **29,277** | (379,081) | **(315,821)** | (3,213) |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | **7,588,277** | 6,897,058 | **4,649,246** | 5,352,206 |
| மொத்த விரிவான வருமானம்: | | | | |
| தாய்நிறுவனத்தில் பங்கு வைத்திருப்பவர்கள் | **7,314,015** | 6,619,783 | **4,649,246** | 5,352,206 |
| சிறுபான்மை பங்குதாரர்கள் | **274,262** | 277,275 | **-** | - |
| **வருடத்துக்கான விரிவான மொத்த வருமானம்** | **7,588,277** | 6,897,058 | **4,649,246** | 5,352,206 |

| நிதி நிலை அறிக்கை | குழு | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | **31/03/2023 இல் ரூபா.'000** | 31/03/2022 இல் ரூபா.'000 | **31/03/2023 இல் ரூபா.'000** | 31/03/2022 இல் ரூபா.'000 |
| **சொத்துக்கள்** | | | | |
| கையில் மற்றும் வங்கிகளில் உள்ள பணம் | **992,061** | 1,199,681 | **528,494** | 697,234 |
| லாபம் அல்லது இழப்பு நிதி சொத்துக்கள் மூலம் நியாயமான மதிப்பு | **649,071** | 1,655,884 | **377,996** | 968,093 |
| மீள்கொள்முதல ஒப்பந்தங்களின் கீழ் வாங்கப்பட்ட பத்திரங்கள் | **3,409,480** | 5,201,821 | **3,409,480** | 5,201,821 |
| குறைக்கப்பட்ட செலவில் நிதி சொத்துக்கள் - கடன் மற்றும் பிற நிதிக் கருவிகள் | **28,039,980** | 22,310,336 | **26,332,972** | 20,933,341 |
| குறைக்கப்பட்ட செலவில் நிதி சொத்துக்கள் - வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றுக் பெறத்தக்கவை | **5,263,446** | 4,724,669 | **5,263,546** | 4,727,838 |
| குறைக்கப்பட்ட செலவில் நிதி சொத்துக்கள் - குத்தகைகளில் நிகர முதலீடு மற்றும் தவணைக்கு பெற்றவை | **41,064,140** | 53,901,589 | **41,064,140** | 53,901,589 |
| வர்த்தக ரீதியாக பெறத்தக்கவைகள் | **1,074,527** | 1,589,992 | **-** | - |
| துணைக்கம்பனி நிறுவனங்களில் முதலீடுகள் | **-** | - | **381,614** | 333,614 |
| பங்கிலாபக் கணக்கில் முதலீடு செய்த முதலீட்டாளர்கள் | **11,121,423** | 9,221,337 | **1,654,509** | 1,538,020 |
| இருப்பு மற்றும் பிற பங்குகள் | **1,386,916** | 1,626,322 | **79,202** | 54,436 |
| முதலீட்டு சொத்துக்கள் | **78,800** | 78,800 | **78,800** | 78,800 |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் | **12,246,039** | 12,433,609 | **9,840,721** | 10,082,958 |
| பயன்பாட்டு சொத்துக்களின் உரிமை | **429,616** | 457,818 | **497,414** | 559,516 |
| அருவமான சொத்துக்கள் | **314,727** | 85,792 | **314,024** | 84,809 |
| நடைமுறை வரி சொத்துக்கள் | **34** | 1,127 | **-** | - |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்து | **20,269** | 15,196 | **-** | - |
| பிற சொத்துக்கள் | **633,201** | 1,096,721 | **388,155** | 873,135 |
| விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்து, மனை, நிலம் | **5,155** | 5,155 | **5,155** | 5,155 |
| விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் | **-** | 100 | **-** | - |
| **மொத்த சொத்துக்கள்** | **106,728,885** | 115,605,949 | **90,216,222** | 100,040,359 |
| | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கி மேலதிகப் பற்று | **225,173** | 224,369 | **170,584** | 215,438 |
| குறைக்கப்பட்ட் செலவில் நிதிக் கடன்கள் - வைப்புக்கள் | **38,228,102** | 48,715,464 | **38,532,558** | 49,024,182 |
| குறைக்கப்பட்ட செலவில் நிதிக் கடன்கள் - வட்டிக் கடன்கள் | **74,226** | 708,465 | **38,922** | 88,329 |
| குத்தகை கடன்கள் | **416,352** | 425,001 | **501,736** | 542,760 |
| பணியாளர் நன்மைப் பொறுப்புகள் | **2,072,381** | 1,778,128 | **1,922,762** | 1,632,666 |
| நடைமுறை வரி பொறுப்புகள் | **1,517,316** | 1,773,149 | **1,284,886** | 1,597,150 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புகள் | **1,400,623** | 1,765,957 | **937,912** | 1,438,012 |
| பிற பொறுப்புகள் | **1,348,992** | 2,744,039 | **904,182** | 1,035,641 |
| விற்பனைக்காக வைத்திருக்கும் சொத்துக்களுடன் நேரடியாக தொடர்புடைய பொறுப்புகள் | **-** | 1,224 | **-** | - |
| **மொத்த கடன்கள்** | **45,283,165** | 58,135,796 | **44,293,542** | 55,574,178 |
| | | | | |
| **பங்கு** | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | **2,230,286** | 2,230,286 | **2,230,286** | 2,230,286 |
| சட்டரீதியான இருப்பு நிதி | **2,964,000** | 2,715,000 | **2,964,000** | 2,715,000 |
| மீள்மதிப்பீட்டு இருப்பு | **4,597,308** | 4,976,248 | **3,299,945** | 3,584,888 |
| நியாயமான மதிப்பு இருப்பு | **100,028** | (398,492) | **-** | - |
| கடன் இழப்பு இருப்பு | **920,000** | 920,000 | **920,000** | 920,000 |
| பொது இருப்பு | **23,402,957** | 23,402,957 | **23,391,776** | 23,391,776 |
| தக்க வருவாய் | **25,330,663** | 21,989,452 | **13,116,673** | 11,624,231 |
| சிறுபான்மை பங்குதாரர் ஆர்வத்தைத் தவிர்த்து மொத்த பங்கு | **59,545,242** | 55,835,451 | **45,922,680** | 44,466,181 |
| சிறுபான்மை பங்குகள் | **1,900,478** | 1,634,702 | **-** | - |
| **மொத்த பங்கு** | **61,445,720** | 57,470,153 | **45,922,680** | 44,466,181 |
| **மொத்த கடன்கள் மற்றும் பங்கு** | **106,728,885** | 115,605,949 | **90,216,222** | 100,040,359 |
| பங்கொன்றின் நிகர சொத்து மதிப்பு - ரூ. | **261.90** | 245.59 | **201.99** | 195.58 |

மேற்படி இந்த நிதி அறிக்கை 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைவாக உள்ளது என்பதனை இத்துடன் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம்
டபிள்யூ. எம். டி. டபிள்யூ. வீரசிங்க
பிரதான நிதி அதிகாரி

இந்த நிதியறிக்கையை தயாரித்து வழங்குவதில் பணிப்பாளர் சபையே முழுப் பொறுப்பும், சபைக்காக அதன் அங்கீகாரத்துடன் கையொப்பமிடப்பட்டுள்ளது.

ஒப்பம்
இ. எச். விஜயனாயக்க
நிர்வாக இயக்குனர்

ஒப்பம்
ஏ. கே. குணரட்ன
துணை நிர்வாக இயக்குனர்

19 மே 2023
கொழும்பு

### இடர்பாடு விளக்கம்

இந்த நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பு 30 & 31 இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, நிறுவனம் 2023 மார்ச் 31ஆம் திகதி வரை முறையே ரூ. 6,225 மில்லியன் மற்றும் ரூ. 46,090 மில்லியன் குத்தகை மற்றும் வாடகை வாங்குதலுக்கான நிகர முதலீடு மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறத்தக்க கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கு எதிராக நிதிச் சொத்துக்களைக் குறைக்கப்பட்ட வலுவில் பதிவு செய்துள்ளது.

வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கு எதிராக ரூ. 961 மில்லியன் மற்றும் ரூ. 5,026 மில்லியன் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை (ECL) மதிப்பிடுவதில் அதிக சிக்கலான தன்மை மற்றும் தீர்ப்பு ஆகியவை அடங்கும்.

எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான கொடுப்பனவு (ECL) என்பது கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் முக்கியத்துவம் மற்றும் குத்தகைகளில் நிகர முதலீடு மற்றும் இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான வாடகை கொள்முதல் நிலுவைகள் மற்றும் ECL கொடுப்பனவுகளை அளவிடப் பயன்படுத்தப்படும் நிறுவனத்தின் ECL மாதிரிகளின் உள்ளார்ந்த சிக்கலான தன்மை ஆகியவற்றின் காரணமாக ஒரு முக்கிய கணக்காய்வு விஷயமாகும். ECL ஐத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் இந்த மாதிரிகள், கடன் அபாயத்தில் கணிசமான அதிகரிப்பு (SICR) ஏற்படும் போது, பல பேரியப் பொருளாதார சூழ்நிலைகளின் தாக்கம், வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஒரு நிகழ்தகவினைப் பயன்படுத்தல் மற்றும் மாதிரி வெளியீட்டில் சரிசெய்தல்களைக் கண்டறிந்து கணக்கிடுதல் ஆகியவை அடங்கும். (பிந்தைய மாதிரி சரிசெய்தல்).

SLFRS 9 நிதிக் கருவிகள், பொருளாதார நிலைமைகளின் வரம்பைப் பிரதிபலிக்கும் முன்னோக்கு அடிப்படையில் ECL அளவிட வேண்டும். அறியப்பட்ட ECL மாதிரி வரம்புகள் அல்லது கடன்கள் மற்றும் குத்தகை போன்ற உற்பத்திகளில் வளர்ந்து வரும் போக்குகளை நிவர்த்தி செய்வதற்கு பிந்தைய மாதிரி சரிசெய்தல் நிறுவனத்தால் செய்யப்படுகிறது. ECL முடிவுகளுக்கு நிறுவனம் பொருந்தும் பொருளாதார சூழ்நிலைகள் மற்றும். தீர்ப்புக்குப் பின் மாதிரி சரிசெய்தல்களை சவால் செய்வதில் நாங்கள் குறிப்பிடத்தக்க தீர்ப்பைப் பயன்படுத்துகிறோம்.

நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு பொருளாதாரக் கண்ணோட்டத்தின் தாக்கத்துடன் தொடர்புடைய உயர்ந்த நிச்சயமற்ற தன்மையின் காரணமாக, ECL இன் நிறுவன அளவீட்டில் கூடுதல் அகநிலை மற்றும் தீர்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டது, இது எங்கள் கணக்காய்வு முயற்சியை அதிகரிக்கிறது.

குறிப்பிட்ட வரம்புகளை மீறும் தனித்தனியாக குறிப்பிடத்தக்க கடன்கள் மற்றும் குத்தகைகளுக்கான கொடுப்பனவுகள் தனித்தனியாக நிறுவனத்தால் மதிப்பிடப்படுகின்றன. இந்த குறிப்பிட்ட கொடுப்பனவுகள் எதிர்பார்க்கப்படும் எதிர்கால ரொக்கத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் கடன்கள் மற்றும் குத்தகை பெறத்தக்கவைகள் தொடர்பாக நிறுவனம் வைத்திருக்கும் பிணையத்தின் மதிப்பிலிருந்து மதிப்பிடப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன.

SLFRS 9 இன் நிறுவனத்தின் பயன்பாடு தொடர்பான வெளிப்பாடுகள் SLFRS 9 ECL முடிவுகளுக்கான முக்கிய தீர்ப்புகள் மற்றும் பொருள் உள்ளீடுகளை விளக்குவதற்கு முக்கியமாகும்.

### எங்கள் பதில்கள்

வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களின் வலுக்குறைப்பை மதிப்பிடுவதற்கான எங்கள் கணக்காய்வு நடைமுறைகள் பின்வருமாறு:

இது தொடர்பாக நிறுவனத்தின் முக்கியக் கட்டுப்பாடுகளைப் புரிந்துகொண்டு சோதனை செய்தல்:

- பொதுப் பேரேடு மற்றும் மூல அமைப்புகளுக்குள்; பதிவு செய்யப்பட்ட மொத்த நிலுவைகளுக்கு ECL கணக்கீடு செயல்பாட்டில் பயன்படுத்தப்படும் தரவுகளின் இணக்கம்.
- நாட்கடந்த கடன்கள் மற்றும் குத்தகைகள், செயற்படாத கடன்கள் மற்றும் குத்தகை வகைப்படுத்தலை பதிவுசெய்யும் தொழல்நுட்ப அமைப்பிலுள்ள கட்டுப்பாடுகள்.

கூட்டாக மதிப்பிடப்பட்ட விதிகளின் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தல்

பின்லருவான தொடர்பாக நிறுவனத்தின் முக்கிய கட்டுப்பாடுகளை நாங்கள் சோதித்தோம்:

- ECL கொடுப்பனவுகளைத் தீர்மானிப்பதற்கான நிறுவனத்தின் செயல்முறைகளைப் பற்றிய புரிதலைப் பெறுதல், நிறுவப்பட்ட சந்தை நடைமுறைகளுக்கு எதிராக நிறுவனத்தின் ECL மாதிரி முறைகள் மற்றும் கணக்கியல் நியமங்களுக்கு அமைவான தாநிலைளை மதிப்பீெ செய்தல்;
- மாதிரியின் மதிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ECL மாதிரி கட்டுப்பாடுகள் மற்றும் சரிபார்ப்பு செயல்முறைகளின் செயல்திறன்;
- முன்னோக்கிய பேரியப் பொருளாதார அனுமானங்களின் மதிப்பீடு மற்றும் ஒப்புதல் மற்றும் சூழ்நிலை எடைபோடல், குறிப்பிட்ட உற்பத்திகளின் கடன் ஆபத்து செறிவு மற்றும் எங்கள் பொருளாதார நிலைமைகள் பற்றிய புரிதல். இந்த வேலையின் ஒரு பகுதியாக, பொருளாதார நிச்சயமற்ற தன்மை குறித்த முக்கிய பொருளாதார குறிகாட்டிகள் தொடர்பன நிறுவனத்தின் பரி சீலனைகளின் நியாயத்தன்மையை நாம் மதிபபீடு செய்தோம்.

கட்டுப்பாடுகள் சோதனைக்கு கூடுதலாக, எங்கள் கணக்காய்வு நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- எங்கள் நிதி இடர் மேலாண்மை (FRM) நிபுணருடன் பணிபுரிதல்;
  - பொதுலில் கிடைக்கும் பொருளாதார குறிகாட்டிகளை ஒப்பிடுவதன் லேம், நிறுவனம் உபயோகித்த பேரிய பொருளாதார அலுமானங்கள் மற்றும் ECL மாதிரிகளில் இணைக்கப்பட்ட வியடங்களுககிடையான முரண்பாட்டைக் கண்டறிந்து சவாலுக்குட்படுத்துதல்.
- ECL கொடுப்பனவின் பிந்திய மாதிரி சரிசெய்தலுக்கு, நிறுவனம் உபயோகித்த முக்கிய அனுமானங்களை மதிப்பீடு செய்து சவாலுக்குட்படுத்தல். இதன்போது, சீரழிந்து வரும் மகவும் நிலையற்ற பொருளாதார சூழநிலைகள் காரணமாக நிறுவனத்தின் ECL மாதிரி சரிபார்பபு செயல்முறைகளால் அடையாளம் காணப்பட்ட வரம்புகள் நிமித்தம் மேலதிகமான கொடுப்பனவுக்கான தேவையை மதிப்பீரு செய்தல்.
- நிறுவனத்திற்கு எதிரான கடன் மற்றும் குத்தகை துறைகளில் நாங்கள் கண்டறிந்த அபாயங்களின் நிலைத்தன்மையை மதிப்பீடு செய்வதன் மூலம் மேலடுக்குகளின் கூடுதல் கொடுப்பனவின் முழுமையை சரிபார்ததல்.
- குழும கணக்காய்வு வழிகாட்டிகளின் படி, கணக்காய்வாளர்களால் (பிற KPMG கணக்காய்வு குழுக்கள்) சமர்ப்பிக்கப்பட்ட பினவருவன வறறை மதிப்பாய்வு செய்தல்: பொருளாதார நிலமைகளின் நிமித்தம் துணை நிறுவனங்களால் குழும மட்டத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் உட்பட அறிக்கைத் திகதியன்று உள்ள ECL க்கான கொடுப்பனவின் போதுமை.

தனித்தனியாக கணிசமான வாடிக்கையாளர்களின் வலுக் குறைப்பை மதிப்பிடுதல்:
பெரிய வாடிக்கையாளர்களின் மாதிரி (அளவான வரம்புகளின் அடிப்படையில்) நிர்வாகத்தால் கண்டறியப்பட்டு, அதிக ஆபத்து அல்லது வலுககுறைபபு என மதிப்பிடப்பட்ட, மற்றும் பிற கடன்கள் மற்றும் குத்தகைகளின் மாதிரியைத் தேர்வு செய்தல், சீரழிவின் அறிகுறிகளைக் காட்டுவதாக நிறுவனம் மதிப்பிடும் பெரிய வெளிப்பாடுகளில் கவனம் செலுத்துதல், அல்லது வளர்ந்து வரும் ஆபத்து பகுதிகளில் கவனம் செலுத்துதல். (இதன்போது வெளிப்புற சந்தை நிலைமைகளுக்கு எதிராக மதிப்பிடப்பட்டதுடன் குறிப்பாக நடைமுறையில் உள்ள பொருளாதார நிலைமைகளின் சாத்தியமான தாக்கங்களும் கருத்தில் கெள்ளப்பட்டது).

நிறுவளத்தின் மீட்சியின் நிர்வாக மதிப்பீட்டைப் பெறுதல் (தனிப்பட்ட வலுக குறைப்பு கணக்கீடுகள் உட்பட) மற்றும் தனிப்பட்ட குறைபாடு விதிகள், அல்லது இல்லாமை ஆகியவை பொருத்தமானதா என்பதை மதிப்பீடு செய்தல்.

இது பின்வரும் நடைமுறைகளை உள்ளடக்கியது:

- வாடிக்கையாளர்களின் வரலாற்று செயல்திறன் மற்றும் பொருத்தமான எதிர்பார்க்கப்படும் எதிர்கால செயல்திறனிற்குஏற்ப முன்னறிவிக்கப்பட்ட பணப்புழக்கங்களின் நிர்வாகத்தின் மதிப்பீட்டை ஒப்பிட்டு மதிப்பீடு செய்தல்.
- வெளிப்புற இணை மதிப்பீட்டாளரின் நற்சான்றிதழ்களை மதிப்பீடு செய்தல் மற்றும் வெளிப்புற மதிப்பீடுகளை ஒப்பிடுதல் நிர்வாகத்தின் குறைபாடு மதிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் மதிப்புகள், எதிர்கால பணப் பாய்ச்சலின் முன்னறிவிக்கப்பட்ட பெறுமதி அடிப்படை யிலான மதிப்பீடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வணிகத் திட்டங்கள் மற்றும் பணப்பாய்ச்சல் மதிப்பீட்டில் உள்ளடங்கும் முக்கிய அனுமானங்களை சவால் செய்தல்;
- வலுககுறைப்பு குறிகாட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டதாக அடையாளம் காணப்படாத வாடிக்கையாளர் கடன்கள் மற்றும் குத்தகைகளின் மாதிரிக்கு நிறுவனம் எடுத்த முடிவுகளை மறு மதிப்பீடு செய்யும்போது வாடிக்கையாளர்களின் வரலாற்று செயல்திறனை மதிப்பாய்வு செய்வதன் மூலம் மேலாண்மையில் ஏதேனும் வலுபகுறப்பு குறிகாட்டிகள் உள்ளனவா என்பதை சரிபர்த்தல்.

பிந்தைய மாதிரி சரிசெய்தல்களின் போதுமான தன்மையை மதிப்பிடுதல்

ECL கொடுப்பனவு சமநிலைக்கு நிறுவனத்தின் பிந்தைய மாதிரி சரிசெய்தல்களின் கூறுகளில் உள்ள முக்கிய அனுமானங்களை நாங்கள் சவால் செய்தோம். இதில் பின்வருவன அடங்கின:

- கம்பனியின் ECL மாதிரி மற்றும் தரவுகளுக்கு எதிராக பிந்தைய மாதிரி சரிசெய்தல்களை மதிப்பீடு செய்தல் நிறுவனத்தின் ECL மாதிரி சரிபார்ப்பு செயல்முறைகளால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள், குறிப்பாக பொருளாதார சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கத்தின் அளவு;
- செறிவு ஆபத்து மற்றும் பொருளாதார சுழற்சி கொடுப்பனவுகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை தரவுகளை பின்வருவனவற்றுடன் ஒப்பிடுதல்: சமீபத்திய இழப்பு அனுபவத்தின் அடிப்படையில் கடன்கள் மற்றும் குத்தகை உற்பத்திகளின் பண்புகள், நடப்பு சந்தை நிலைமைகள் மற்றும் நிறுவனத்தின் அபாயம் உயர்ந்த துறைகளிலான கடன் குத்தகை வெளிப்பாடு;
- உள் மற்றும் வெளிப்புற தகவல்களின் படி நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்ட சில பிந்தைய மாதிரி சரிசெய்தல்களை மதிப்பிடுதல்;
- நிறுவனத்தின் மதிப்பீட்டிற்கு எதிராக கடன் இலாக்காக்களில் நாம் கண்டறிந்த அபாயங்களை ஒப்பிடுவதன் மூலம், பிந்தைய மாதிரி சரிசெய்தல்களின் நிலைத்தன்மையை சரிபார்த்தல்.

இலங்கை கணக்கியல் நியமங்களின் தேவைகளுக்கு எதிராகவும் எமது சோதனையிலிருந்து பெறப்பட்ட எமது புரிதலைப் பயன்படுத்தி நிதிநிலை அறிக்கைகளில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் சரியான தன்மையையும் மதிப்பீடு செய்தோம்.

## நிதி அறிக்கை மீதான தகவல் தொழில்நுட்ப முறைகள் மற்றும் கடப்பாடுகள்.

### இடர்பாடு விளக்கம்

வணிகப் பரிவர்த்தனைகளை செயலாக்கி பதிவு செய்வதற்கு நறுவஷம் பல ஒன்றுக்கொன்று சார்ந்த (IT) முறைமைகளைப் பயன்படுத்துகின்றது. IT அமைப்புகளின் அணுகல், மாற்றங்கள் மற்றும் செயல்பாட்டின் மீதான கட்டுப்பாடுகள் நிதித் தகவலைப் பதிவு செய்வதற்கும், நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் செயல்திறன் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் முக்கியமானதாகும்.

நிதி பரிவர்த்தனைகளை பதிவு செய்வதற்கும் அறிவிப்பதற்கும் IT முறைமைகள் மற்றும் அதன் கட்டுப்பாடுகள் பயனுள்ள செயல்பாட்டைக் கொண்டிருப்பதால் இவை எமது முக்கிய கணக்காய்வு விடயங்களில் ஒன்றாகும். நிறுவனத்தின் IT கட்டுப்பாடுகளின் பயனுள்ள செயற்பாடுகளைப் பொறுத்து எமது அனுகுமுறை கணிசமாக வேறுபடலாம்.

### எங்கள் பதில்கள்

குறிப்பிடத்தக்க பரிவர்த்தனைகளைச் செயலாக்குவதற்கும், பொதுப் பேரேட்டில் இருப்புகளைப் பதிவு செய்வதற்கும் பயன்படுத்தப்படும் முக்கிய தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளுக்கான (முறைமைகள்) தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு சூழலைச் சோதிக்க, கணக்காய்வு நடைமுறைகளைச் செய்ய, எங்கள் உள் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றினோம். தொழில்நுட்பம்-இயக்கப்பட்ட வணிக செயல்முறைகளை இணைக்கும் இந்த அமைப்புகளுக்குள் உட்பொதிக்கப்பட்ட தானியங்கு கட்டுப்பாடுகளையும் நாங்கள் சோதித்தோம்.

**மேலும் சில கணக்காய்வு நடைமுறைகள்:**
**பொது தகவல் தொழில்நுட்பம் வடிவமைப்பு கட்டுப்பாடுகள், அவதானிப்பு மற்றும் செயல்பாடு.**

- IT சூழல் முழுவதும் உள்ள நிர்வாக மற்றும் உயர் நிலை கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்தல், கொள்கை வடிவமைப்பு, மதிப்பாய்வு மற்றும் விழிப்புணர்வு மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர் மேலாண்மை ஆகியவை உட்பட்ட நடைமுறைகளை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்தின் மீது செயல்படும் முக்கிய கட்டுப்பாடுகளின் மாதிரியைப் புரிந்துகொள்வது மற்றும் செயல்பாட்டு செயல்திறனைச் சோதித்தல்; கணினி அணுகல், கணினி மாற்ற மேலாண்மை, கண்காணிப்பு அமைப்பு உள்ளிட்ட அமைப்புகள் ஒருமைப்பாடு, நிரல் மேம்பாடு மற்றும் கணினி செயல்பாடுகளை சோதித்தல்; மற்றும்

அடுத்த பக்கத்திற்கு தொடரவும்

- எம்மால் பயன்படுத்தப்பட்ட தேர்வு செய்த முக்கியமான கணிணி அறிக்கைகளின் தரவு ஒருமைப்பாட்டை மதிப்பீடு செய்வதுடன், இந்த நிதிநிை அற்க்கைகளை உருவாக்க நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் தரவு மாதிரிகளையும் பகுப்பாய்வு செய்தல்.

பயன்பாட்டு கட்டுப்பாடுகள்

- மாதிரி அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட தானியங்கு கணக்கீடுகளை மீண்டும் செயல்படுத்தி, IT முறைமை மற்றும் பொதுப் பேரேட்டிருலிருந்தான முடிவுளுடன் ஒப்பிடுதல்.

பயனர் அணுகல் கட்டுப்பாட்டு செயல்பாடு

- அணுகல் உரிமைகளை வழங்குதல், அகற்றுதல் மற்றும் பொருத்தமான கட்டுப்பாடுகளின் செயல்பாட்டு செயல்திறனை மதிப்பீடு செய்தல்.
- நிதி கணக்கியல் மற்றும் அறிக்கை அமைப்புகள் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்ட அணுகல் உரிமைகளின் நிர்வாகத்தின் மதிப்பீட்டை மதிப்பீடு செய்தல்.
- பயனர் அணுகல் மற்றும் மேலாண்மை மாற்றம் உட்பட, IT கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டு செயல்திறனை மதிப்பீடு செய்தல்.

### பிற தகவல்கள்

பிற தகவல்களுக்கு முகாமையே பொறுப்பு ஆகும் மற்ற தகவல்கள் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள, ஆனால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் எமது கணக்காய்வளர் அறிக்கையயும் உள்ளடக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கவ் குறித்த எமது அபிப்பிராயம் பிற தகவல்களை உள்ளடக்காது இருப்பதுடன், அதன்மீது நாம் எந்தவிதமான உறுப்பாடுகளையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக, எமது பொறுப்பானது பிற தகவல்களை வாசித்தல், அவ்வாறு செய்யும் போது பிற தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன, அதேபோல கணக்காய்வின்போது பெறப்பட்ட எமது அறிவுடன் கொள்கை மாறாததாக காணப்படுகிறதா, அல்லாவிட்டால் பொருண்மைமிக்க பிறழ்கூற்றுக்கு உட்பட்டுக் காணப்படுகிறதா என்பதைக் கருத்தில் கொள்வதாகும். நாம் மேற்கொண்ட செயன்முறைகளின் அடிப்படையில் இந்தப் பிற தகவல்களில் பெருண்மைமிக்க பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என தாம் முடிவுசெய்தால், அந்த உண்மையை நாம் அறிக்கையிடுமாறு தேவைப்படுகிகேறாம். இது தொடர்பாக நாம் அறிக்கையிடும் விடயங்கள் எவையும் காணப்படவில்லை.

#### நிதிக்கூற்றுக்களுக்கு முகாமையின் மற்றும் பொறுப்பளிக்கப் பட்டவர்களது பொறுப்பு.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய. உண்மையானதும் நேர்மையானதுமான தோற்றப்பாட்டினை தரும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும், மோசடி அல்லது வழு காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இல்லாதவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏதுவாக அவசியமானதென முகாமை தீர்மானிக்கும் அகக் கட்டுப்பாடுகளுக்கும் முகாமை பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் தொடர்ந்தியங்கும் தாபனமாக தொடரக்கூடிய இயலுமையை மதிப்பிடல், பொருத்தமான இடத்து தொடர்ந்தியங்கும் தாபனம் தொடர்புபட்ட விடயங்களை வெளிக்காட்டுதல், மற்றும் முகாயை கம்பனியை கலைப்பதறகு அல்லது தொழிற்பாட்டினை முடிவுக்கு கொண்டுவர எண்ணினால் அல்லது அவ்வாறு செய்வதனைவிட வேறு யதார்த்தமான மாற்றுவழி இல்லாதபோது தவிர தொடர்ந்தியங்கும் தாபன கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பானவர் ஆவர். கம்பனியின் நிதியறிக்கையிடற் செயன்முறையை மேற்பார்வைசெய்வதற்கு ஆளுமை பாரப்படுத்தப்பட்டோர் பொறுப்பாவர்.

#### நிதிக்கூற்க்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

எமது நோக்கம் நிதிக்கூற்றுக்கள் முழுவதும் மோசடி அல்லது வழுக் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராது இருப்பதுபற்றி நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதும், எமது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வழங்குவதும் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்ந்த மட்ட உறுதிப்பாடாக இருப்பினும். SLAuSs க்கு அமைய மேற்கொள்ளப்படும் கணக்காய்வு, பொருண்மையான பிறழ்கூற்று இருப்பின் அதனை எப்போதும் கண்டுபிடிப்பதற்கான உத்தரவாதம் அல்ல. பிறழ்கூற்றுக்கள் மோசடி அல்லது வழு காரணமாக ஏற்படுவதுடன, அது பொருண்மையாக கருதப்படுவது, தனியாக அல்லது கூட்டாக இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்ட பயன்படுத்துனர்களின் பொருளியல் தீர்மானங்களை தாக்கத்திற்கு உள்ளாக்குமென எதிர்பார்க்கப்படும்போது ஆகும்.

SLAuSs க்கு அமைய கணக்காய்வின் பகுதியாக நாம் தொழில்சார் சுயதீர்ப்புக்களை பிரயோகிப்பதுடன் தொழில்சார் சந்தேக மனப்பாங்கினை பேணுகின்றோம் அத்துடன்:

- மோசடி அல்லது வழுக்கள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்று இடர்களை இனங்கண்டு, மதிப்பிட்டு அந்த இடர்களுக்கு பதிலிறுப்பாக கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைத்து மேற்கொள்வதுடன், எமது அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை வழங்குவதற்கு ஏதுவாக போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெறுகின்றோம். மோசடி காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றினை கண்டுபிடிக்க முடியாமைக்கான இடர் வழுவினால் விளையும் இடரிலும் அதிகமானது. இதற்குக் காரணம் மோசடியானது இணைந்து செயற்படல், கள்ளக் கையொப்பமிடுதல், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறான பிரதிநிதித்துவம் அல்லது அகக்கட்டுப்பாட்டு மீறல் ஆகியவற்றை சம்பந்தப்படுத்தும்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற, ஆனால் கம்பனி அகக்கட்டுப்பாட்டின் விளைவுத்திறன்மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமற்ற நிலையில் கணக்காய்வு விதிமுறைகளை வடிவமைப்பதற்கு ஏதுவாக, கணக்காய்வுடன் தொடர்புபட்ட அகக்கட்டுப்பாட்டின் விளக்கத்தை பெறுதல்.
- முகாமையால் பயன்படுத்தப்படும் கணக்கிட்டுக் கொள்கைகள். மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புபட்ட வெளிக்காட்டல்களின் பொருத்தத்தன்மையை மதிப்பாய்வு செய்தல்.
- தொடர்ந்தியங்கும் தாபனமாக தொடரும் கம்பனி இயலுமை மீதுகணிசமான சந்தேகத்தினை விளைவிக்கும் நிகழ்வுகள் அல்லது புறநிலைகள் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதற்கு பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், முகாமையின் தொடர்ந்தியங்கும் தாபன கணக்கீட்டு அடிப்படையின் பொருத்தத்தன்மை பற்றி முடிவுசெய்தல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நாம் முடிவுசெய்தால், நிதிக்கூற்றுக்களில் தொடர்புபட்ட வெளிக்காட்டல்பற்றி எமது கணக்காய்வாளரா் அறிக்கையில் அதுபற்றிய கவனத்தை ஈர்க்குமாறு அல்லது அத்தகைய வெளிக்காட்டல் போதாத இடத்து எமது அபிப்பிராயத்தை திருத்துமாறு கேட்கப்படுவோம். எமது முடிவுகள், கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதிவரையில் பெறப்படும் கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலாகும். எனினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது புறநிலைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை முடிவுக்கு கொண்டு வரக்கூடும்.
- வெளிக்காட்டல்கள் உட்பட நிதிக்கூற்றுக்களின் ஓட்டுமொத்த முன்நிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதிக்கூற்றுக்கள் அடிப்படையாக அமைந்த ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளை நேர்மையான முன்நிலைப்படுத்தலை அடையும் வகையில் பிரதிபலிக்கின்றதா என மதிப்பாய்வு செய்தல்.
- ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்கு ஏதுவாக குழுமத்திலுள்ள உரிமங்கள் மற்றும் வியாபாரச் செயற்பாடுகளின் நிதிந்தகவல்கள் பற்றி போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெறுதல். குழுமக் கணக்காய்வின் வழிகாட்டல், மேற்பார்வை மற்றும் மேற்கொள்ளலுக்கு நாம் பொறுப்பாவோம். எமது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நாம் தனிப்பொறுப்பினை கொண்டுள்ளோம்.

நாம் எமது கணக்காய்வின்போது இனங்கண்ட அகக்கட்டுப்பாட்டில் ஏதாவது கணிசமான குறைபாடுகள் உட்பட, மற்றைய விடயங்களுக்கு மத்தியில், கணக்காய்வின் திட்டமிட்ட நோக்கெல்லை மற்றும் காலம் பற்றி ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருடன் தொடர்பாடுவோம்.

அத்துடன், நாம் ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருக்கு சுயாதீனம் தொடர்பில் நெறிமுறைக் கோவைக்கு அமையு அதற்கு இசைவாக இருப்பதுபற்றிய ஒரு கூற்றினை வழங்கியுள்ளதுடன், எமது சுயாதீனம் தொடர்பில் கொண்டிருப்பதாக நியாயமாக எண்ணக்கூடிய சகல தொடர்புகள் மற்றும் பிற விடயங்களையும் பொருத்தமான இடத்து தொடர்புடைய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அவக்களுக்கு தெரிவித்தும் உள்ளோம்.

ஆளுமை பாரப்படுத்தப்பட்டோருக்கு தெரிவித்த விடயங்களிலிருந்து, நடப்புக் காலத்தின் நிதிக்கூற்றுக்களின் மிகவும் முக்கியமான அந்த விடயங்கள் பிரதான கணக்காய்வு விடயங்கள் என நாம் தீர்மானித்தோம்.

இந்த விடயங்களின் பகிரங்க வெளிக்காட்டலை சட்டம் அல்லது ஒழுங்குவிதி தடைசெய்திருந்தால் அல்லது மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் அவ்வாறு வெளிப்படுத்தலினால் விளையும் தொடர்விளைவுகள் அந்தத் தொடர்பாடலின் பொதுநாட்ட நலன்களை பாதிக்கும் நாம் தீர்மானித்தபோது தவிர, நாம் இந்த விடயங்களை எமது கணக்காய்வாளரின் அறிக்கையில் விபரித்துள்ளோம்.

#### ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட பிரிவு 163(2) இல் தேவைப்படுத்தியபடி, கணக்காய்வுக்கு தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்களை நாம் பெற்றுள்ளதுடன், எமது பரீட்சிப்புக்கு அமைய கம்பனி முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணிவருகின்றது.

இந்த சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையில் கையொப்பம் இடுவதற்கு பொறுப்பான ஈடுபடல் பங்காளரின் CA ஸ்ரீ லங்கா அங்கத்துவ இலக்கம் FCA 2294.

ஒப்பம்
KPMG
பட்டய கணக்காளர்கள்
கொழும்பு, இலங்கை
19 மே 2023


## சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
## 84, ரஜ வீதி, கண்டி.

2011ன் 42 ம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையால் உரிமம் அளிக்கப்பட்டது. வரையறுப்பட்டபொதுக்கம்பனியாக 1957ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் திகதி நிறுவப்பட்டது.

பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் மூலம் A-(lka) தரமதிப்பீட்டு வாட்ச் எதிர்மறையாக மதிப்பிடப்பட்டது.


---

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (2023/2024)

நெடுஞ்சாலைகள் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் **(EOM&M Division)** (கொடகமவிலிருந்து மத்தளை வரையும்) தெற்கு நெடுஞ்சாலைக்கான விஸ்தரிப்பிற்காக எரிபொருளுடனான குத்தகை அடிப்படையில் 2 எண்ணிக்கையான **Tipper Trucks** (1 வருட காலப்பகுதிக்கு), 1 தண்ணீர் பவுசர் (1 வருட காலப்பகுதிக்கு) மற்றும் 1 **Loader Backhoe** ஆகியவற்றை வாடகைக்கு அமர்த்துதல் **(Contract No.: RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/89,90 & 91)**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, நெடுஞ்சாலைகள் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கள் 2023.07.20 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்படும்.
3. இவ்விலைமனுவின் மேலதிக விபரங்களை **www.gov.lk** என்ற வீஅஅ இன் இணையதளத்தினூடாகவும் பெலியத்த, கஹவத்த, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M Division, பெறுகைப் பிரிவிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 047-2251892, 0766265264,0763179185. தொலைநகல்: 047-2251891. மின்னஞ்சல்: prcbeleom.rda@gmail.com).

---

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## கேள்வி அழைப்பு

**வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ABC, Asphalt மற்றும் இயந்திரங்களை வழங்குதல்**

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) இரத்தினபுரி பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டம்) பிரிவின் பெறுகைக் குழுவின் தலைவரால் பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டம்) அலுவலகத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட எலபாத்த போல்கன் சந்தியிலிருந்து, பஸ்கடுவெல வழியாக பல்லேகெதர வீதிக்காக ABC,Asphalt கொள்வனவு செய்தல் மற்றும் வாடகை அடிப்படையில் பெகோலோடர் (JCB), 10 டொன் ரோலர் (10 ton roller), மோட்டர் கிரேடர் (Motor grader), நீர் பவுசர் (Water Bowser), 5 தொன் ரோலர் (Ston roller) ஆகிய இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து கீழ்க்காணும் இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்
   **போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு**
   **www.mohsl.gov.lk**
   **வீதி அபிவிருத்தி அதிகார சபை - www.rda.gov.lk**

   **தலைவர்**
   **பிரதேச பெறுகைக் குழு, பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டங்கள்),**
   **அலுவலகம்,**
   **வீதி அபிவிருத்தி அதிகார சபை - இரத்தினபுரி**

---

### பெயர் மாற்றம்

சம்மாந்துறை 125/3/1 அறபா பாடசாலை வீதி, விழினயடி 01ல் வதியும் **அல்பட் சரோஜினி** ஆகிய நான் எனது சுய விருப்பத்தின்படி புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி **அல்பட் பாத்திமா றிஸ்கா** எனப் பெயர் மாற்றிக் கொண்டு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**பாத்திமா றிஸ்கா**


**Repeat Your Ad For Better Offers**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 | 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# உலகக் கிண்ணத்திற்கு முன்னேறுவதில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு நெருக்கடி

## சுப்பர் சிக்ஸின் அனைத்து போட்டிகளில் வென்றாலும் சிக்கல்

இரண்டு முறை உலகக் கிண்ணத்தை வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி இம்முறை உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறுவது பெரும் சவாலாகியுள்ளது.

சிம்பாப்வேயில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி ஏ குழுவில் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறிய சிம்பாப்வே மற்றும் நெதர்லாந்து அணிகளுடனான போட்டிகளில் தோல்விகளை சந்தித்ததால் எந்த புள்ளியும் இன்றியே அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மறுபுறம் சுப்பர் சிக்ஸ் சுற்றில் இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகள் தலா 4 புள்ளிகளையும் ஸ்கொட்லாந்து மற்றும் நெதர்லாந்து அணிகள் தலா 2 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

எனவே, மேற்கிந்திய தீவுகள் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது.

சுப்பர் சிக்ஸ் சுற்றில் மேற்கிந்திய தீவுகள் அணி ஆடும் இலங்கை, ஸ்கொட்லாந்து மற்றும் ஓமான் அணிகளுக்கு



எதிரான போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். அது மாத்திரமன்றி ஏனைய போட்டிகளின் முடிவு தமக்கு சாதகமாக அமைந்தாலே முதல் முறையாக உலகக் கிண்ணத்தில் ஆட முடியாத நிலையை மேற்கிந்திய தீவுகள் தவிர்த்துக் கொள்ள முடியும்.

குறிப்பாக இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகள் சுப்பர் சிக்ஸ் சுற்றில் குறைந்தது இரண்டு போட்டிகளில் தோல்வியை சந்தித்தாலேயே மேற்கிந்திய தீவுகளால் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற முடியும். இல்லாவிட்டால் இலங்கை மற்றும் சிம்பாப்வே உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றுவிடும்.

எனினும் தாம் நம்பிக்கையுடன் இருப்பதாக மேற்கிந்திய தீவுகள் அணி பயிற்சியாளர் டரன் சமி தெரிவித்துள்ளார். "நான் சாதகமாக சிந்திப்பவன் என்பதோடு இந்த அணியுடனான எனது பயணத்தை நான் புரிந்து வைத்திருக்கிறேன். சில நேரம் அடிமட்டத்தை அடைந்து திரும்பி வர வேண்டி இருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"எதிர்நோக்கி இருக்கும் சவாலை நான் புரிந்து வைத்துள்ளேன். ஒரே இரவில் எல்லாம் மாறிவிடாது என்பது எனக்குத் தெரியும். எமது கிரிக்கெட் தற்போது என்ன நிலையில் இருக்கிறது என்ற உண்மை பிரதிபலிக்கிறது. நாம் அதிகம் உழைக்க வேண்டி உள்ளது" என்றும் சமி குறிப்பிட்டார்.

உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் சுப்பர் சிக்ஸ் சுற்று இன்று (29) ஆரம்பமாகவுள்ளது.

## சிம்பாப்வே டி10 தொடரில் பானுக்க, மஹீஷ் ஒப்பந்தம்



சிம்பாப்வேயில் முதன்முறையாக ஆரம்பமாகவுள்ள சிம்–அப்ரோ டி10 தொடருக்காக இலங்கை அணியின் பானுக ராஜபக்ஷ மற்றும் மஹீஷ் தீக்ஷன ஒப்பந்தமாகியுள்ளனர்.

முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 5 அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டித்தொடர் அடுத்த மாதம் 20ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. தொடருக்கான வீரர்கள் வரைவு அடுத்த மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த வீரர்கள் வரைவுக்கு முன்னர் ஒவ்வொரு அணிகளும் தங்களுடைய அணிகளில் நான்கு வீரர்களை தக்க வைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி கேப்டவுன் சேம்ப் ஆர்மி அணியில் இலங்கை வீரர்களான பானுக ராஜபக்ஷ மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆகியோருடன் ஆப்கானிஸ்தான் அணியின் ரஹ்மானுல்லாஹ் குர்பாஸ் மற்றும் கரீம் ஜனாட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## கிங்ஸ் இலவன் முதலிடம்



**கல்முனை குறூப் நிருபர்**

சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் கிங்ஸ் இலவன் அணி முதலிடத்தை வென்றது. பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் கல்முனை ஸாஹிரா கல்லூரி தேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் (25) நடைபெற்ற இந்தப் போட்டியில், 03 அணிகளாக போட்டிகள் நடைபெற்றன. இதில் கிங்ஸ் இலவன் அணி 58 புள்ளிகளுடன் முதலிடத்தை பெற்றது.

## சோபர் அணி வெற்றி



**பாலமுனை விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை நியு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 42ஆவது ஆண்டு நிறைவினையொட்டி, நடாத்தப்பட்ட மெகா நைட் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. நியு ஸ்டார் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் (27) நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது ஈஸ்டன் பேள்ஸ் அணியை எதிர்கொண்ட சோபர் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

நியு ஸ்டார் கழத்தின் தலைவர் ஏ.எச்.அஸ்லம் தலைமையில் போட்டிகள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

## ரிட்ஸ்பரி அஞ்சலோட்டம்: மாரிஸ் ஸ்டெல்லா வளல ஏ ரத்நாயக்க கல்லூரிகள் முதலிடம்

இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிலோன் பிஸ்கட் லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி அனுசரணையில் நடைபெற்ற சேர். ஜோன் டார்பட் அஞ்சலோட்ட களியாட்ட போட்டியின் ஆண்களுக்கான ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்தை நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியும், பெண்களுக்கான ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்தை வளல ஏ ரத்நாயக்க கல்லூரியும் வென்றன.





கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற இந்தப் போட்டியில் நாடு முழுவதையும் சேர்ந்த 220 பாடசாலைகளின் 4000க்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இதில் ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை கண்டி திரித்துவக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ட் கல்லூரியும் பெற்றன. வத்தளை லைசியம் கல்லூரி ஒட்டு மொத்த பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தையும், அம்பகமுவ மத்திய மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## ஓ.எல்–2022 அணி வெற்றி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று அஸ்–ஸிறாஜ் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற அஸ்ஸிறாஜ் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுத்தொடரில் பாடசாலையின் ஓ.எல்–2022 அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. கல்லூரி அதிபர் ஏ.ஜீ. பஸ்மில் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை (27) பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் ஏழு அணிகள் கலந்துகொண்டன. இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற ஓ.எல்-2022 அணிக்கான வெற்றிக் கிண்ணத்தை நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லா வழங்கினார்.

# சர்வதேச செய்திகள்

## ஒரே நாளில் தென்கொரிய மக்களின் வயது குறைப்பு



தென் கொரியா தனது சம்பிரதாயமான வயதை கணக்கிடும் முறைகளை கைவிட்டு நேற்று (28) முதல் சர்வதேச தரத்திற்கு மாறியதை அடுத்து அந்நாட்டு மக்களின் வயது ஒன்று அல்லது இரண்டு வயதால் குறைக்கப்பட்டுள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டத்தில் வயதை கணக்கிடும் இரு சம்பியரதாய முறைகளே நீக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு சம்பிரதாய முறையின்படி கருவில் இருக்கும் காலம் தொடக்கம் வயது கணக்கிடப்படுவதோடு மற்ற முறையில் உண்மையான பிறந்த திகதிக்கு பதில் ஜனவரி முதலாம் திகதி பிறந்த நாளாக கணக்கிடப்படுகிறது.

இந்நிலையில் பிறந்த திகதியை பிறந்த நாளாக கொண்டு வயதை கணக்கிடும் முறைக்கே தென் கொரியா மாறியுள்ளது.

'சம்பிரதாயமாக வயதை கணக்கிடும் முறை சமூக மற்றும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகிறது' என்று தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யிவோல் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு தேர்தலில் போட்டியிடும் போதே இந்த மாற்றத்தைக் கொண்டு வருவதில் அவர் தீவிரம் காட்டினார்.

பாரம்பரிய வயது கணக்கீடு முறைகள் மற்ற கிழக்கு ஆசிய நாடுகளிலும் வழக்கத்தில் இருந்தன. ஆனால், நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு அவை கைவிடப்பட்டன.

சர்வதேச வயது கணக்கீடு நடைமுறையை ஜப்பான் 1950ஆம் ஆண்டும், வட கொரியா 1980களிலும் ஏற்றுக் கொண்டன.

## உக்ரைனிய உணவகம் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

சனநெரிசல் மிக்க உக்ரைனிய உணவு விடுதி ஒன்றில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் மூன்று சிறுவர்கள் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.





கிழக்கு உக்ரைனில் தொடர்ந்து உக்ரைனிய கட்டுப்பாட்டில் இருக்கும் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான கிராமடோஸ்க் நகரில் இருக்கும் இந்த உணவு விடுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மேலும் 56 பேர் காயமடைந்துள்ளனர். இந்த உணவு விடுதியில் கடந்த செவ்வாய் இரவு எட்டு மணி அளவில் அனைவரும் உணவு உட்கொண்டிருந்தபோது இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

"அங்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் இருந்தார்கள். சிறுவர்களும் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்" என்று அங்கு நண்பர்களுடன் இரவு உணவு உட்கொண்டிருந்த யெவ்கென் என்பவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

"நாம் அங்கிருந்து சற்று முன்னரே வெளியேறினோம். ஆனால் நண்பர் ஒருவர் இடிபாடுகளில் சிக்கியுள்ளார்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிலத்தில் இருந்து வானைத் தாக்கும் எஸ்–300 ஏவுகணை மூலமே ரஷ்யா தாக்குதல் நடத்தி இருப்பதாக உக்ரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இரண்டாவது ஏவுகணை கிராமடோஸ்க் நகரின் விளிம்பில் இருக்கும் கிராமம் ஒன்றில் விழுந்ததில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

கிராமடோஸ்க் நகர் உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும் அது ரஷ்யா கைப்பற்றி பகுதிக்கு மிக நெருக்கமாக உள்ளது.

## 108 மில். டொலருக்கு விலைபோன ஓவியம்



ஆஸ்திரிய நாட்டு ஓவியரான கஸ்டேவ் க்ளிம்ட் தனது பிந்திய காலத்தில் வரைந்த ஓவியம் ஒன்று ஐரோப்பாவில் ஏலம் போன அதிக விலையான 85.3 மில்லியன் பௌண்ட்களுக்கு (108.4 மில்லியன் அமெரிக்க டொலர்) வாங்கப்பட்டுள்ளது. டாம் மிட் பிட்சர் (விசிறியுடன் பெண்) என்ற அந்த ஓவியம் கடந்த செவ்வாய்க்கிழமை லண்டனில் உள்ள சௌதபீஸில் ஏலம் விடப்பட்டபோது 10 நிமிடங்கள் நீடித்த போட்டிக்குப் பின்னர் விலைபோயுள்ளது. இது முன்னர் எதிர்பார்க்கப்பட்ட 65 மில்லியன் பௌண்ட் விலையை விஞ்சி இருந்தது. முன்னதாக 2008 ஆம் ஆண்டு கிளவுடே மொனட்டின் ஓவியம் ஒன்று 80.4 மில்லியன் டொலருக்கு ஏலம் போனதே ஐரோப்பாவில் சாதனையாக இருந்தது.

## இந்தியாவுக்கு அமெ. ஆதரவு

மறுசீரமைக்கப்படும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர அங்கத்துவம் பெறுவதற்கு அமெரிக்கா தமது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது ஜனாதிபதி ஜோ பைடன் இது தொடர்பிலான அமெரிக்காவின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். அத்தோடு அணுசக்தி விநியோகக் குழுவில் இந்தியா அங்கம் வகிப்பதற்கான அமெரிக்காவின் ஆதரவையும் பைடன் வெளிப்படுத்தியுள்ளார்.

## பொலிஸ் சூட்டில் இளைஞர் பலி: பாரிஸில் ஆர்ப்பாட்டம்



பிரான்ஸில் போக்குவரத்து பொலிஸாரின் உத்தரவை மீறி வாகனத்தை செலுத்திய 17 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து பாரிஸ் புறநகர் பகுதியில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறை வெடித்துள்ளது.

கார் வண்டி ஓட்டுநர் மீது பொலிஸார் துப்பாக்கியை நீட்டி இருப்பதும் பின்னர் துப்பாக்கியால் சுடப்படும் காட்சி அடங்கிய வீடியோ சமூக ஊடகத்தில் பரவியுள்ளது. பின்னர் அந்தக் கார் விளக்குக் கம்பத்தில் மோதுவது தெரிகிறது.

நெஞ்சில் துப்பாக்கி குண்டு பாய்ந்த நயேல் எம் என்ற அந்த இளைஞர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

சூடு நடத்திய பொலிஸ் அதிகாரி கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை தொடர்ந்து நான்டரே பகுதியில் ஆர்ப்பட்டம் வெடித்துள்ளது. சட்ட ஒழுங்கை மீறிய குற்றச்சாட்டில் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரான்ஸில் இந்த ஆண்டில் போக்குவரத்து நிறுத்தத்தில் கொல்லப்பட்ட இரண்டாவது நபர் இந்த இளைஞராவார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 29ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.